
நுட்பம்

# எமது மனம் நிறைந்த நன்றிகள்

- காப்பாளர் – துணைக் காப்பாளர் – பெரும் பொருளாளர் - பதிவாளர் ஆகியோரின் சிரமம் பாராத உதவிகட்கு.

- ஆக்கங்கள் தந்துதவிய படைப்பாளிகளுக்கு

- விளம்பரங்கள் தந்து பேருதவி புரிந்த விளம்பரதாரர்களுக்கு

- விளம்பரங்கள் சேகரித்து மலரின் நிதி நிலைமையை சமாளிக்க உதவிய நண்பர்கட்கு

- அட்டையை அழகுற அமைத்துத் தந்த நண்பர் சி. குணசிங்கம் அவர்கட்கு

- சித்ரா அச்சகத்தின் சிறப்பான பணியின் கர்த்தாக்களுக்கு


மலர்க்குழு

மலராசிரியர்: இ. சாந்தினி
ந. சிவசக்தி
தா. நவநீதன்

*The Editorial Board*

Chairman: **R. Shanthini**
**N. Sivasakthy**
**T. Navaneethan**

புதுமைகள் செய்வதோ, புரட்சிகள் புரிவதோ
எம் நோக்கமல்ல,
பௌதிக மாற்றங்களும் விரும்பத் தக்கதல்ல
சிந்தனை உயர்வு பெறின் அதுவே
நுட்பத்தின் வெற்றி.

-மலர்க்குழு

# தமிழ்ச் சங்கம் , 1980

மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

# உள்ளே.....


| | | |
|---|---|---|
| எமது பல்கலைக்கழகங்கள் | — | கலாநிதி வே. இராமகிருஷ்ணன் |
| பேரங்கள் | — | பொன். பாலராஜன் |
| ஈழத்துக் குழந்தைப்பாடல்கள் | — | திருமதி. கலையரசி சின்னையா |
| அழிவு | — | வ. ந. கிரிதரன் |
| எரிபொருள் தட்டுப்பாடு - சில தீர்வுகள் | — | பொ. ந. குமாரதேவன் |
| உறைத்திடும் ஓர் நாள் | — | A. L. M. ஹீஸைன் |
| வடமாகாணத்து வீடு அமைப்பு முறை | — | சி. குணசிங்கம் |
| சமதர்மமும் சமூக தர்மமும் | — | தா. நவநீதன் |
| பிரபஞ்சமே நீ தான்! | — | புதுவை. இரத்தினதுரை |
| நமக்குத் தேவை நாட்டின் அபிவிருத்தி | — | காலைக் கவிஞன் |
| ஜனநாயகமும் இஸ்லாமும் | — | எம். ஏ. சி. ஏ. ரஹ்மான் |
| சித்தர் சிந்தையிலே . . . | — | எஸ் தட்சணமூர்த்தி |
| பரிசீலனை | — | ஈழவாணன் |
| விமர்சனம் ஒரு நோக்கு | — | கார்த்திகா கணேசர் |
| நிதர்சனங்கள் | — | இ. சாந்தினி |
| மூன்று கவிதைகள் | — | ந. சிவசக்தி |
| நோக்குகள் | | OOOOOO |

-மொறட்டுவப் பல்கலைக்கழக

இணைப்பதிகாரியின் ஆசிச் செய்தி-

'இவ் ஆசிச்செய்தி உரிய நேரத்தில் கிடைக்காததன் காரணமாகப் பிரசுரிக்க முடியவில்லை.

# தலைவரின் தகவல்

சங்கத்தின் வயதோ ஈரைந்து
பங்கமின்றி வந்த இதழ் மூ மூன்று
இங்கிடையில் வந்த தடை பல நூறு

இதற்கிடையில் . . . .
புலர்ந்தது புதுவருடம்
மலர்ந்தது புதிய இதழ்.

கையது கொண்டு
மெய்யது பொத்தி
வாழ்ந்த காலத்தில்
தமிழன் என்று சொல்லி
தலைநிமிர்ந்து நின்றிட்டார்
நம் முன்னோர்.

ஆனால் . . . .
மதிதன்னில் கால்வைக்கும்
மதிகொண்டோன் காலத்தில்
தன்மானத் தமிழினமே
தலைநிமிர்ந்து நில்லாயோ

சென்றபல ஆண்டுகளில்
பல்கலைகள் பயின்றென்ன
பயனற்று பல்லிளித்து
நிற்கவைத்தார் நடுத்தெருவில்
நமதருமை நண்பர்களை

இந்நிலையில்
சங்கத்தை வளர்த்திடவே
அங்கத்தவர் இல்லையென்
இங்குயார் கவலைகொண்டார்
தங்கருமம் தான்நோற்றார்

ஆனாலும் . . . .
கலைவிழா தன்னை
கச்சிதமாய் நடாத்திடவே
நிதியில்லை என்றெண்ணி.
மதிமயங்கி நிற்கையிலே
கதியுண்டெனச் சொல்லி
நல்லதமிழ் நாடகங்கள்
நம்தோழர் நடாத்திட்டார்
பத்து நூறு ஆயிரமாய்
பத்தாயிரமும் சேர்த்திட்டார்

நல்லதமிழ் நாம்வளர்க்க
நல்லசங்கம் நாமமைத்தோம்
நல்கிடுக உதவியென்றால்
உதவிதர யார் வருவார்?

இந்நிலையில்
நல்லதமிழ் வளர்ந்திடவே
வல்லவர்தாம் வருகின்றோம் என்று
சொல்லி
சொல்லளவில் நில்லாமல்
நல்லுதவி செய்தந்த
வல்லவர்கள் அனைவர்க்கும்
நல்கின்றேன் நன்றிபல.

அத்தோடு
தமிழ்ச்சங்க வளர்ச்சியிலே
தமிழ்த்தாய் பெரிதுவக்க
தோன்றும் புகழ் தன்னில்
தமிழகம் தலைதூக்க
ஈரைந்தின் வர்க்கங்கண்டு
இதழ்கள்பல வெளியிட்டு
சங்க! நீ! வாழியென்று
வாழ்த்துகிறேன் வாழி வாழி.

இறுதியாக ........
கரங்கூப்பி கேட்கின்றேன்
கற்கவந்த நண்பர்காள்!
நுட்பமென நும்மதியால்
"நுட்பத்தை" வெளியிட்டு
வளர்த்திடுவீர் சங்கத்தை
வளம்பெறுக வருங்காலம்

முடிக்கின்றேன்
கிடைத்த பல உதவிகளால்
கிளர்கின்ற என் மனதின்
படையலில் சிலவற்றை
படைத்திட்டேன் எழுத்துருவில்
முடிவில்லா உம்பணிகள்
முறையாகக் கிடைக்கட்டும்
முடிக்கின்றேன் எனக்கூறி
முடித்தேன் என்கருத்தை.

துரைசிங்கம் சண்முகானந்தகுமார்

WITH BEST WISHES

FROM

A WELL WISHER

# உங்களை நோக்கி.....

கலை, இலக்கியங்கள் சமுதாயத்தின் தன்மையையும் அதன் ஆத்மாவையும் நாடி பிடித்துப் பார்க்கும் அழகுணர்ச்சியோடு கூடிய விடயமே. அங்கு வளர்ச்சிக்கான வித்து உண்டு. அவை வட்டங்களுள் குறுகுபவையாக அமைவதோ அல்லது சர்வ வியாபகமான சிந்தனைகளின் திரட்சியாக அமைவதோ அக்காலத்து எழுத்தாளனின் வளர்ச்சியையே பிரதிபலிக்கும். சமூகத்தின் ஒரு பகுதியை அல்லது பல பகுதிகளைப் பகைப்புலனாகக் கொண்ட விடயதானங்கள் அவற்றின் படைப்பாளிகளையே சாரும். எமது நோக்கம் இதுதான் என்ற வட்டத்துள் அவர்களை இழுத்துப் போட நாம் முயலவில்லை. சிந்தனைகள் சுதந்திரமானவை. ஆனால் அவை மக்கள் முன்னிலையில் தான் புடம் போடப்பட்டு நிராகரிக்கப்படுகிறது அல்லது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

கலை வெறும் அழகுணர்ச்சிக்காகவல்ல; அது எங்கிருந்து உருவானதோ, அதற்காகத் தான். நாங்கள் 'நீரோ' மன்னரின் வழித் தோன்றல்களல்ல; 'ரோம்' சாம்ராஜ்யங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன–சமூக முரண்பாடுகள் முற்றி, வெடிப்புக்கள் தென்படுகின்றன.

கீழ்த்தரமான உணர்வுகளைத் தூண்டும் ஆபாச இலக்கியங்கள் மலிந்துள்ள இவ்வேளையில், புது உலகம் நாடிப் புறப்படும் போராளிகள் நாம். பழமையின் மகத்துவங்களை முற்றாக ஏற்க மறுக்கும் அதிகப் பிரசங்கித்தனமோ-புதுமை என்றும் 'முற்போக்கு' என்றும் தனிமனித ஆத்ம தர்மத்தை மலினப்படுத்தும் நோக்கமோ எமக்கில்லை.

இந்த சஞ்சிகையில் படைக்கப்பட்டுள்ள எத்தனையோ விடயங்கள் தற்காலத்தில் சமூக தர்மமாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அவை குடும்ப தர்மமாக பரிணமிக்கும் போதே முழுமை பெறுகிறது. அங்கு தான் எழுத்தாளனின் ஆத்மா திருப்தியுறுகிறது.

இம்மலரை உருவாக்குவதில் எமக்கிருந்த சில பிரச்னைகளை, உங்கள் கருத்தில் முன்வைக்கிறோம். நோக்கங்களுக்கு செயலுருக் கொடுப்பது வளர்ச்சியின் ஒரு அங்கம் ஆனால் செயல் திட்டங்களை மாற்றாமல், நோக்கத்தையே நிராகரிக்க நினைப்பது தவறு. இல்லாவிடின் நோக்கத்தை மறு பரிசீலனை செய்யவேண்டும். கலைவிழா நடாத்துவதும், மலர் வெளியிடுவதும் சம்பிரதாயமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இடத்தில், நோக்கங்கள் பிசுபிசுத்துப் போவதில் ஆச்சரியமில்லை.

எங்களால் இயன்றவரை கடின முயற்சியினூடு இம்மலரை உங்கள் கைகளில் தவழ விட்டிருக்கிறோம். சமூகப் பிரக்ஞையில்லாத கலை, இலக்கியங்கள் குப்பைகளே.

—மலர்க்குழு

*Wish the Tamil Sangam*

*For*

*All the Success*

# D. PERIYASWAMY

# எமது பல்கலைக் கழகங்கள்

எமது பல்கலைக்கழகங்கள் சிருஷ்டி சிந்தனையைத் தூண்டுகின்றனவா அல்லது வெறுமனே சொல்லிக்கொடுக்கும் நிறுவனங்களாக மட்டுமேயுள்ளனவா என்பதே கேள்வி. இவ்வித ஐயப்பாட்டிற்குரிய ஆய்வு ஏதோ அவற்றுள் குறைபாடுகள் உண்டு என உணர்ந்த நிலையைக் குறிக்கும். அவை வெறுமனே சொல்லிக் கொடுக்கும் நிறுவனங்களாகவே இருக்கின்றனவென்றால் அவை பல்கலைக்கழகங்களாகா என்பது உட்கிடையெனத் தோன்றும்.

மேற்குறிப்பிட்ட முடிபுகள் சரியெனக் கொண்டால் இரு விடயங்களைப்பற்றிய முடிவு ஏற்கனவே கொண்டுள்ளதாக அமையும். அவையாவன:

1) பல்கலைக்கழகங்கள் வாயிலாக மாணவர்கள் சுயமாகவும் ஆக்க பூர்வமாகவும் சிந்திக்கப் பயிற்சி பெறுதலே நன்று.

2) சொல்லிக்கொடுப்பது என்பது சுயமாகவும் ஆக்க பூர்வமாகவும் சிந்திப்பதற்கு உதவாது; இடையூறாகவும் அமையும்.

முன்னம் கூறியது சரியெனக் கொண்டால் அல்லது கொள்கையளவில் அதிகார பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டால் மட்டுமே இரண்டாவது ஆய்வு பயனுள்ளதாக அமையும்.

பொன் இராமநாதன், பொன் அருணாசலம், கலாநிதி அதிகாரம் போன்ற பெரியார்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களின் நோக்கங்களைப்பற்றி ஆழமாகச் சிந்தித்தும் போராடியும் வந்திருக்கிறார்கள். ஏனையோர் நோக்கங்களைப்பற்றி ஏதேனும் கூறினால் பெரும்பாலும் கிளிப்பிள்ளைகளைப் போல வேறு சிந்தனையாளர்களது கருத்துக்களை மேடைகளில் கூறியும் கட்டுரைகள் எழுதியும் இருக்கிறார்கள். பொன். இராமநாதன் அவர்கள் தனது முயற்சியினால் தாபித்த பரமேஸ்வராக் கல்லூரியின் நாமமே இல்லாது போய்விட்ட நிலையில் இதனைப்பற்றிய ஆழமான சிந்தனைக்கும் முடிவுகளை அமுல் படுத்துவதற்கும் இடமில்லாது போய்விட்டது என்பதற்கு ஆதாரமாகின்றது. அதற்குப் பதிலாக இன, பிரதேச அடிப்படையில் கல்வி வசதிகளை எவ்வாறு பங்கிட்டுக் கொடுப்பது என்பதே விவாதத்திற்குரிய விடயமாகி விட்டது. பல்கலைக்கழகம் எதற்கு எனும் ஆய்விற்குப் பதிலாக பல்கலைக்கழகம் எவருக்கு எனும் ஆய்வே அதிகாரத்தில் உள்ளவர்களது சிருஷ்ட சிந்தனையைத் தூண்டுமாப்போல் இருக்கின்றது. நோக்கங்களைப் பற்றிய ஆழமான ஆய்வு நடத்தப்படுவதில்லை என்ற காரணத்தினால் நோக்கமற்ற உயர்கல்வி எனும் முடிவுக்கு வரமுடியாது. தெரிந்தோ தெரியாமலோ மறைமுகமாக ஏதோ ஒரு நோக்கம் இருந்தே தீர வேண்டும். இதனை வெளிப்படுத்துவதன் மூலமே சிருஷ்ட சிந்தனையைத் தூண்டும் கல்வியா அல்லது சொல்லிக் கொடுக்கும் கல்வியா நிலவுகின்றது என்பதனை நிர்ணயிப்பதற்கோ அதற்கு விளக்கம் தருவதற்கோ முடிகின்றது.

இதற்கு முன்பாக இவ்விரு கல்வி முறைகளை இனங்காண்பதற்குரிய வழிவகைகளை அறிதல் வேண்டும். அவ்வித பயிற்சி பெற்றவர்கள் மத்தியில் காணும் பண்புகளைக் கொண்டே எவ்வித கல்விமுறை நிலவுகின்றது என்ற முடிவுக்கு வரலாம். பல்கலைக் கழகங்களுக்கு அப்பாலுள்ள தாக்கங்களும் நிலவுவதனால் திட்டவட்டமான முடிவாயிருக்காது. பொதுப்பட மட்டுமே கூற இயலும்.

சிருஷ்ட சிந்தனையாளன் அல்லது சுயமாகவும் ஆக்க பூர்வமாகவும் சிந்திப்பவன் என்னும்போது கவியில் கம்பன் என்றோ நாடகத்தில் காளிதாசன் என்றோ விஞ்ஞான ஆராய்ச்சியில் ஐன்ஸ்ரைன் என்றோ கொள்ள வேண்டியதில்லை. இத்தகையோர் மனித வரலாற்றிலேயே மிகவும் அரிதானவராகவே இருந்திருக்கின்றனர். ஆகவே பெரும்பாலோ

ரிடம் காணக்கூடிய பண்புகளையே குறிப்பிட வேண்டும் இவர்கள் நாளுக்கு நாள் எழும் பிரச்சனைகளைப்பற்றி சுயமாகச் சிந்தித்து சந்தர்ப்பம் சூழலுக்கு ஏற்ப தகுந்த முடிவுகளைக்காண முயல்வர். கிளிப்பிள்ளைபோல சொல்லிக் கொடுத்தற்கு அப்பால் வேறொன்றும் தெரியாத நிலையிலும் அறிய விரும்பாத நிலையிலும் பிடிவாதத்தன்மையிராது கொடுக்கப்பட்ட தரவுகளினது உதவி கொண்டே கற்பனையூடாகவோ ஞான திருஷ்டியடைந்த பக்குவத்தினூடாகவோ தகுந்த முடிவுகளை அடைய முயல்வர். இங்கு பணிவு, அடக்கம், அறியும் ஆவல், பொறுமை, தளர்ச்சியின்மை, தன்னம்பிக்கை, வைராக்கியம் போன்ற நற்பண்புகளும் ஒருங்கிணைந்து நிற்கும். 'முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்' என்னும் முனிவன் கூற்று அவனை வழி நடத்தும். தான் நடத்தும் ஆய்வு எவ்வித தத்துவ பின்னணியைக் (Theoritical back round) கொண்டது என்பதை மறப்பதில்லை. எவ்வித பிரச்சனை ஆய்வைத் தூண்டிற்று என்பதும், ஆய்வு முறை எவ்வகையானது என்பதும், தனக்கு முற்பட்ட ஞானிகள் இவ்வித பிரச்சனைகளை எவ்வாறு அணுகினரென்பதும் அவனது நினைவில் நிற்கும். விடயம் அறிந்தவர்களிடம் கேட்டறியத்தயங்கவும் மாட்டார்கள். வேண்டா வெறுப்புடன் தம் தொழிலில் ஈடுபட மாட்டார்கள். ஓய்வை ஆர்வத்துடன் எதிர்பார்த்த வண்ணம் இருக்க மாட்டார்கள். சுருங்கச் சொன்னால் தாம் ஆற்றும் கடமைகளிலேயே நிறைவைக்கண்டு இன்புற முயல்வர். இத்தகையோர் தம் தெய்விகத்தன்மையை இழக்காது உண்மைக்காகப் போராட முயல்வர். 'மன்னவனும் நீயோ வளநாடு முன்னதோ உன்னை யறிந்தோ தமிழையோதினேன்' எனும் ஆண்மை அவர்களது இயல்பு. இது இறுமாப்பல்ல. நேர்மையினால் ஏற்படும் மிடுக்கு. இத்தகையோரது சாதனைகளே உலகிலுள்ள சிறந்த பல்கலைக் கழகங்களின் வரலாறாகிறது. இவர்கள் உருவாக்கிய குரு பரம்பரையே இப் பல்கலைக் கழகங்களில் காணும் கட்டுப்பாட்டின் காரணியாக அமைந்துள்ளது.

மறுபுரத்தில் சொல்லிக் கொடுக்கும் கல்வியின் பயனாக விளையும் பண்புகளைப் பார்ப்போம். பெரும்பாலும் மேற்குறிப்பிட்ட பண்புகளுக்கு எதிர்மாறானவையாகவே இருக்கும். இவர்கள் சொற்ப வித்தைகளில் மட்டும் அரை அவியல் பயிற்சி பெற்றவராகவே இருப்பர். கிளிப்பிள்ளைகள் போல் மனனஞ் செய்து தாமாகச் சிந்திக்கும் ஆற்றல் மங்கி யந்திரம்போல் இயங்கும் அல்லது இயக்கப்படும் மனிதராயிருப்பர். நவீன தொழிற்றுறைகளில் பெரும்பாலும் இவ்விதமானோரே தேவைப்படுகின்றனர். உழைப்புக்கு வசதியாக இருக்கின்றமையால் பெரும்பாலோர் இத்தகைய கல்வியையே விரும்புவர்.

இவ்விரு கல்வி முறைகளுக்குரிய பயிற்சி ஒழுங்கையும் நிறுவன அமைப்பையும் பார்த்தாலும் வேறுபாடு உள்ளது என்பதும் தெளிவாகத் தோன்றும். சிருஷ்டி சிந்தனையைத் தூண்ட உதவும் கல்வியில் ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கும். பயிற்சி முறை உரையாடல் உருவம் உள்ளதாக இருக்கும். ஆசிரியனோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பின் மூலம் அவர் கையாளும் முறைகளை மாணவன் அவதானித்த வண்ணம் இருக்கலாம். நெருங்கிப் பழகும் வாய்ப்பு என்றதும் மாணவன் ஆசிரியனது அன்பிற்கும் அருளுக்கும் ஆளாகிவிட்டான் என்பதையே குறிக்கும். மேலும் பயிலும்போது பயன்படுத்தும் நூல்களும் காலத்தால் பயன் மங்காது சிந்தனையைத் தூண்டும் நூல்களாகவேயிருக்கும் கலைத்துறையில் பெரும்பாலும் மாணவனது உள்ளப்பக்குவத்திற்கும் அனுபவரீதியாக உணர்ந்து சுவைப்பதற்குரிய நூல்களாக இருக்கும். சமூகவியல் விஞ்ஞானம் போன்ற துறைகளில் தன்னும் குறிப்பிட்ட தத்துவக் கொள்கையிலும் (Theory) அடங்கிய விவகாரங்களாக மட்டும் அமையாது. காலத்திற்கு காலம் பழைய கொள்கைகள் திருத்தியமைக்கப்பட்டு புதிய கொள்கைகள் உருவாகின்றமையால் முழுவதும் நிச்சயத் தன்மை வாய்ந்தமையல்ல என்பதும் அறிவுறுத்தப்படும். நிகழ்வுகளை அவதானிப்பதிலும் அவற்றிற்கிடையிலுள்ள தொடர்பை அறிவதிலும் மாணவன் பயிற்சி பெறுவான். வெவ்வேறு நாடுகளில் வாழ்க்கையை அணுகும் தத்துவப் பின்னணியும் இவ்வித கல்வி

முறையை வழி நடத்திச் செல்லும். (எமக்கும், முன்பு இவ்வித பின்னணியிலிருந்து என்பதை நினைவுறுத்தல் பயனுள்ளதாயமையும்). ஆசிரியனுடன் நெருங்கிப்பழகும் முறையாகையால் ஒரு சிலருக்கே இவ்வித கல்வி உரியதாக இருந்தது. ஆகவே மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையும் கடும் கட்டுப்பாட்டிற்குரியதாக இருந்தது. குறைந்த பட்சம் தகுதிவாய்ந்தவர்க்கெல்லாம் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் எனும் கொள்கை நிர்ப்பந்திக்கப்படும் நாடுகளிலெல்லாம் தரத்தில் பல வகைப்பட்ட நிறுவனங்களை காணலாம். இவையாவும் நாம் ஆராயும் பல்கலைக்கழக அமைப்பு உடையதாக இருக்க வேண்டியதில்லை. பல்கலைக் கழகங்களுள்ளும் தரவேறுபாடுகள் இருக்கும். (தரம் கூடிய சில பல்கலைக்கழகங்களில் பணவசதியற்றோர் சென்று படிப்பது கடினமானது என்பதையும் நாம் மறைக்க முடியாது).

மறுபுறத்தில் சொல்லிக் கொடுக்கும் கல்வி முறையாக இருந்தால் மாணவர் தொகை அதிகமாக இருப்பதே காரணம். இங்கு ஆசிரியருக்கும் மாணவருக்கும் தொடர்பு நெருங்கியதாக இருக்க முடியாது. நெருங்கிய தொடர்பின் காரணமாக ஏற்படும் நல்ல பயிற்சி முறைகளும் கையாளப்படமாட்டாது. தொகையின் காரணமாக சில கட்டங்களில் ஒலி பெருக்கியின் உதவியும் நாடப்படுகின்றது. இப்பொழுது வானொலியும் தொலைக் காட்சியும் பயன்படுத்தப்படும் நிறுவனங்களையும் காணலாம். உரையாடலுக்குப் பதிலாக ஆசிரியர் கூறுவது அத்தனையும் தேவவாக்காக எண்ணி குறிப்புகள் எடுக்கப்படும். 'கிளிப்பிள்ளைகள் போல மனனஞ் செய்து "வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்தலே நலம்' எனும் கோட்பாட்டிற்கிணங்க சோதனை வேளைகளில் விடைத்தாள்கள் வாயிலாகத் திரும்பிக் கொடுக்கப்படும். முழுமையும் மனனஞ் செய்ய வேண்டிய அவசியமில்லை. சோதனைக்குப் பிரயோசனமான சில பகுதிகளை மட்டும் மனனஞ் செய்தால் போதும் என்ற நம்பிக்கை மாணவர் மத்தியில் நிலவும். இதன் காரணமாக மாணவர்கள் விரிவுரைகளுக்கு ஒழுங்காக வரவேண்டும் எனும் நியதியுமில்லை. நூல் நிலையத்திற்குப் போய் பல புத்தகங்களை வாசிக்க வேண்டியது என்பதும் அவசியமாகத் தோன்றாது. எழுதிய குறிப்புகள் ஒழுங்காக இருந்தால் மட்டும் போதும். சோதனைக்கு சற்று முன்பாகவே மனனஞ் செய்யும் கருமத்தை ஆரம்பிக்கலாம். மாணவர்கள் இவ்வாறு நிறைவைக் காண இயலாத பட்சத்தில் குழப்பஞ் செய்வது சகஜம் என்றே கூறவேண்டும். விஞ்ஞானத் துறைகளிலும் இப்போக்குகளை ஓரளவு காணலாம். குறித்த தத்துவக் கொள்கைக்குள் அடங்கும் விவரங்களைக் குறிப்புகளாகக் கொடுத்தலும் ஆய்வு கூடத்தில் சில செயல் முறைகளைக் காட்டிக் கொடுத்தலும் மட்டுமே வழமையாகிவிடலாம். சுருங்கச் சொன்னால் இது ஒரு வித தொழில் நுட்பம் பயிற்சியென்றே (Technical Education) கூறிவிடலாம். நவீன உற்பத்தி முறைகள் ஏற்பட்டுள்ள இடங்களில் இவ்வித பயிற்சியே போதுமானதாகத் தெரிகின்றது. பெரும்பாலோருக்கு இவ்விதக் கல்வியே போதும் என்பதும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இவ்விதப் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களினது அமைப்பும் மாறுபட்டதாக இருக்கும். மாணவர் தொகை கூடக் கூட (செலவு அரசாங்கத்தின் பொறுப்பாகவே இருப்பதனால்) வசதிகளும் குறைக்கப்படும். விகிதாசாரத்திற்கேற்ப ஆசிரிய நியமனங்களும் ஏற்படாது. வேலைப் பொறுப்புகள் கூடும். இதன் காரணத்தினால் ஆசிரியர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்குரிய நேரமும் குறைக்கப்படும். ஆகவே விரிவுரைகளின் தரமும் குறையும். இவ்விதப் போக்குகள் நிலவும் இடங்களில் தரமுள்ள ஆசிரியர்களை நியமிப்பதும் அல்லது அத்தகையோரைத் தொடர்ந்தும் கடமையாற்ற வேண்டுவதும் கடினமாகிவிடும். நேர்மைக்கு விரோதமான செயல்களும் கூடிக்கொண்டே வரும்.

இவ்வாறு இருவித பல்கலைக்கழகங்களிலுமுள்ள பயிற்சி முறைகளை ஆராய்ந்த பின்னர் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் நிலையை ஆராய்வோம். சிருஷ்டி சிந்தனையைத் தூண்டும் கல்விக்கும் சொல்லிக் கொடுக்கும் கல்விக்குமுரிய சில அளவைகளைக் கண்டோம். அவற்றை பயன்படுத்தி எமது பல்கலைக்கழகங்களில் நிலவும்

கல்வி எத்தகையது எனும் முடிவுக்கு வரலாம். கற்பனையின் வாயிலாக உய்த்தறியும் விடயமல்ல. தகுந்த விபரங்களைச் சேகரித்து அளவைகளுக்கு ஏற்ப வகைப் படுத்தும் ஆராய்ச்சியாக இருத்தல் வேண்டும். அது ஒரு பெரும் முயற்சி. இக்கட்டுரையில், அவ்வாறு ஆராய்ச்சி செய்ததன் விளைவாகக் கொண்ட முடிவுகளை கூறுவதெனக் கொள்ளவில்லை. பல வருடங்கள் சேவை செய்ததன் பயனாக ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு சில பொதுப்படையான கருத்துக்களையே கூறமுடியும். இவையாவும் உண்மையென்று திட்டவட்டமாகக் கூறுவதற்குக் கட்டுப்பாடான ஆராய்ச்சி நடத்தப்படவில்லை. ஆகவே இக்கட்டுரையில் அடங்கிய கருத்துக்கள் விமர்சனத்துக்குரியவை. திருத்தியமைக்கக் கூடியவை. இவ்வித ஆய்வு இதுகாறும் நடத்தப்படாததால் அனுபவமுள்ள ஒருவர் ஆரம்பித்து வைத்தல் நலம் என்ற நம்பிக்கையோடேயே இக்கட்டுரை வரையப்படுகிறது.

உலகெங்குமுள்ள பல்கலைக்கழகங்களின் வளர்ச்சியைப் பின்னணியாக வைத்துக் கொண்டு அபிமானத்தோடும் அனுதாபத்தோடும் எமது நாட்டின் பல்கலைக்கழகங்களின் வளர்ச்சியை ஆராய்ந்தால், கையாளப்பட்ட கொள்கைகளும், அவற்றோடு இணைந்து எழுந்த நிறுவன அமைப்பும், பாடத்திட்டங்களும், போதனாமுறைகளும் சிருஷ்டி சிந்தனையைத் தூண்டுவதற்குத் தடைகளாக இருந்தனவென்றே கூற வேண்டும். அவ்விதத் தடைகள் இருந்தும் சுயமாகச் சிந்திக்கவும் ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபடக்கூடியோரும் எமது பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறினர் என்றால் வேறு சூழல் காரணங்களாலும், தகுதிபெற்ற சில ஆசிரியர்களது ஆசிகளாலும் உருவாயினர் என்றே கூறவேண்டும்.

1922ம் ஆண்டு ஆங்கிலேயர் எமது நாட்டில் பல்கலைக்கழக வளாகம் (University College) ஒன்றை அமைக்கும் போது அதற்குப் பின்னணியாக இருந்த தத்துவ நிலையைச் சற்று ஆராய்வோம். இது மேல்நாட்டு கல்வித் தத்துவத்தை தழுவியதாக இருந்தது. பிளேட்டோவின் கருத்துக்களுக்கு இணங்க "அறிவாளிகள் ஆட்சியாளராவதும் அல்லது ஆட்சியாளர் அறிவாளிகளாவதுமே" அன்று மேல்நாட்டு உயர் கல்வித் தத்துவமாக இருந்தது. பிரபுக்கள் வர்க்கத்தில் உள்ளோரே இவ்விதக் கல்விப்பயிற்சி பெற்று அரசியலிலும், இராணுவ மேற்படிகளிலும், திருச்சபையிலும் கடமையாற்றினர். உற்பத்தி முறைகள் இயந்திரமயமாக்கப்பட்டதும் பல்கலைக்கழகங்களின் தொகை கூட்டப்பட்டும் அமைப்புவிஸ்தரிக்கப்பட்டும் இருந்தது. பரம்பரை வசதியுள்ளவர்களோடு ஏனைய ஆற்றலும் வசதியும் உள்ளவர்களும் அனுமதிக்கப்பட்டனர். ஏனையோருக்குத் தொழில் நுட்பக்கல்வியளிக்கப்பட்டது (Technical Education). (எமது பாரம்பரியத்திலும் இவ்வித வேறுபாடு இருந்து தான் வந்திருக்கிறது. வேதியருக்கு உரிய கல்வியென்றும் ஏனையோருக்குக் குலக்கல்வியென்றும் இருந்தது. வேதியர்கள் குருசிஷ்ய முறைக்கேற்ப கல்வி பயின்றனர். இங்கு மனனஞ் செய்வது வற்புறுத்தப்பட்டாலும் பின்பு அவற்றுள் அடங்கிய விடயங்களைத் தியானிப்பதற்கு வேண்டியே மனனஞ் செய்தல் வற்புறுத்தப்பட்டது. சிலர், பலதுறைகளையும் இணைந்த பயிற்சியும் பெற்றனர். சமீப காலம் வரை சில பௌத்த பிக்குகள் சிங்கள, பாளி, சமஸ்கிருத மொழியிலும், சமய தத்துவத்திலும், ஆயுர்வேத வைத்தியத்திலும் பயிற்சி பெற்றுத் தத்தம் கடமைகளைக் கண்ணியமாகச் செய்து மக்கள் மத்தியில் மதிப்புப் பெற்றவர்களாக வாழ்ந்திருந்ததை நாம் அறிவோம். வெவ்வேறு குலங்களுக்குரிய கல்வி முறையிலும் இளைஞர்கள் சிறு வயது தொட்டே மூத்தோரது வழிகாட்டலில் தொழிலின் நுட்பங்களைக் கண்ணியமாகப் பயின்று வந்தார்கள். விஞ்ஞானத் தொழில் நுட்பங்களோடு இவை இணையாததனால் காலப்போக்கில் மதிப்பற்றனவாயின).

நவீன மாற்றங்கள் ஏற்படுமுன் இருந்த ஒக்ஸ்போர்ட், கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகங்களின் சிருஷ்டி சிந்தனையைத் தூண்டுவதற்குரிய ஒழுங்கு முறைகள் இருந்தன. தொழிற் புரட்சி ஏற்பட்டதும் அமைப்பு சற்று விஸ்தரிக்கப்பட்டு இலண்டன் பல்கலைக் கழகம் போன்ற நிறுவனங்கள் உரு

வாயின. இலங்கையில் உருவாகிய பல்கலைக் கழக வளாகம் அமைப்பு அளவில் இவ்விரு வித பல்கலைக்கழகத் தன்மைகளையும் ஒருங்கு இணைத்ததாகவேயிருந்தது. ஆங்கிலேயர் இந்நாட்டை தங்களது நலனுக்காக ஆண்டனர் என்பதை மறந்துவிடப்படாது. அரசின் நிருவாக அமைப்பின் கீழ்மட்டத்தில் உள்ள பொறுப்புகளை உயர் கல்விபெற்ற இந்நாட்டவரிடம் ஒப்படைக்க வேண்டியிருந்தது. தமது கலச்சாரச் சூழலில் கல்வியளித்தால் தோலளவில் கறுத்தவராக இருந்தாலும், மனப்பான்மையில் ஆங்கிலேயராக நடந்துகொள்ளக்கூடியவராய் இருத்தல் வேண்டும் என்பதே அவர்களது நோக்கம். இதனால் நடுத்தரப் பள்ளிக்கூடங்களைப் போன்று ஆங்கிலமே போதனா மொழியாக இருந்தது. ஆங்கிலத்தோடு, லத்தின், கிறீக் மொழிகளும் பயில்வது கௌரவமானதாகக் கருதப்பட்டது. விஞ்ஞானந்தன்னும் நடைமுறையில் பயன்படக் கூடிய விஞ்ஞானமாக அமையவில்லை. வெறுமனே தூய கொள்கையளவிற்குரியதாக (Pure theory) இருந்தது. வைத்தியக் கல்லூரியிலும் மேலைநாட்டு வைத்திய முறையே போதிக்கப்பட்டது.

இவ்வித கல்வி, வசதியுள்ள மிஷனரிமாரது கல்லூரிகளில் படித்தவருக்கே உரித்தாக இருந்தது. நாட்டின் சனத்தொகையோடு ஒப்பிடும்போது ஒரு சிலரே இவ்வசதியைப் பெறக்கூடியதாக இருந்தது. விசுவாசமான ஊழியர்களையே உருவாக்க முயன்றாராகையால சுயமாகச் சிந்திக்கும் பட்டதாரிகளை எதிர்பார்க்கவில்லையென்பது அறுமான முடிவு. பெரும்பாலான பட்டதாரி மாணவர்களும் இந்நாட்டு மொழிகளையும் கலாசாரத்தையும். விஞ்ஞான பாரம்பரியத்தையும், தரம்குறைந்ததெனப் புகட்டப்பட்டதைய மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டனர்.

ஆங்கிலமே போதனா மொழியாக இருந்ததனால் அந்நிய மொழிப்பயிற்சி போதாமையால் பலர் மனனஞ் செய்யும் பழக்கத்தைக் கையாண்டனர். மொழிப் பயிற்சிக் குறைபாட்டினால் சிலர் கணிதம் போன்ற (இங்கு மொழித்திறன் வற்புறுத்தப்படவில்லை) துறைகளில் பயிற்சி பெற முயன்றனர். இலக்கியம், சமூகவியற்துறைகள், விஞ்ஞானம், வைத்தியமாகிய துறைகளில் மேலை நாட்டு அனுபவங்கள், பிரச்சினைகள் சம்பந்தமான ஆங்கில நூல்களே பயன்படுத்தப்பட்டன. இவையாவும் தமது சூழலுக்கு அந்நியமாக இருந்ததனால், மனனஞ் செய்வதே விசேட தந்திரமெனக் கருதப்பட்டது. தமது அனுபவங்களுக்கும் பிரச்சனைகளுக்கும் இடமளிக்கப்படாததால் ஆக்கபூர்வமாகச் சிந்திப்பதற்கு இடமில்லாது போய் விட்டது. ஆங்கிலேயர் தமது பண்டங்களை (குறிப்பாக வைத்தியத்துறையில் தமது நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகள்) இங்கு விற்க முயற்சிக்கையில் சுயமாகச் சிந்திக்க உதவும் பயிற்சி ஆபத்தானது, என்பதும் தெளிவாயிருந்திருக்கும்.

தேசிய இயக்கத்தின் தாக்கம் காரணமாக இந்நாட்டுக் கலாச்சார அம்சங்களும் சேர்க்க வேண்டியிருந்ததனால் சமஸ்கிருதம், பாளி, சிங்களம், தமிழாகிய மொழிகளும் பௌத்த கலாச்சாரமும் கற்பிக்கும் துறைகளாக ஏற்படுத்தப்பட்டன. நாட்டுப்புறங்களில் அமைக்கப்பட்ட வசதி குறைந்த பள்ளிக்கூடங்களில் இருந்து வந்த மாணவர்களே பெரும்பாலும் இத்துறைகளில் பயின்றனர். பிரான்சிஸ் கிங்ஸ்பரி (தமிழ்) பெற்றி ஹைமன் (சமஸ்கிருதம்) போன்றோரே இத்துறைகளுக்குத் தலைமை தாங்கும்படி அழைக்கப்பட்டனர். தாம் மற்றைய துறைகளை விடக் குறைவில்லையெனும் அளவிற்கு விடயங்கள் நடைபெற்றன. மேலாராய்ச்சிப் படிப்புகளுக்கு ஆங்கிலேய நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்றனர் விரிவுரையாளர்கள். இதனால் இரண்டுங்கெட்ட நிலையிலேயே இத்துறை திண்டாடிற்று எனலாம்.

இக்கட்டத்தில்தான் காலஞ்சென்ற பண்டாரநாயக்கா ஆட்சி தேசிய மொழிகளைப் போதனா மொழிகளாக்கத் தீர்மானித்தது. மாற்றம் மொழியளவில் மட்டுமே அமுல் நடத்தப்பட்டது. அடிப்படை நோக்கங்களிலும் கற்பிக்கும் விடயங்களிலும் முறைகளிலும் மாற்றம் எதுவும் ஏற்படவில்லையென்றே கூறவேண்டும். பாடத்திட்டங்க

ளில் ஒருவித மாற்றமும் இல்லையாகையால் தேசிய மொழிகளில் மொழிபெயர்ப்பு நூல்கள் தட்டுப்பாடு ஏற்பட்டது. தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்கள் தொடர்ந்தும் ஆங்கிலத்தையே போதனா மொழியாகக் கையாண்டபடியால், மொழிபெயர்ப்பு முயற்சி முழுவதும் இலங்கையரது முயற்சியாகவே இருந்தது. போதிய பணவசதியின்மையால் ஒரு சில நூல்களே மொழிபெயர்க்கப்பட்டன. இன்று மொழிபெயர்ப்புக்குப் பதிலாக எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் ஆங்கிலம் கற்பித்து ஆங்கில நூல்களை வாசிக்கும்படி வற்புறுத்துகின்றனர். (இது எதிர்பார்க்கும் அளவிற்குப் பலன் தருமாப்போவில்லை.) அந்நிலையில் ஆங்கிலம் தெரிந்த விரிவுரையாளர்களது விரிவுரைகளே தேவவாக்காக அமைகின்றது. நூல் நிலையங்களில் மாணவர்கள் வந்து தத்தம் விரிவுரைக் குறிப்புகளை மட்டுமே படிப்பது இந்த அவல நிலையை விளக்கும்.

போதனா மொழிக்கொள்கை மாற்றம் பெரும்பாலும் கலைத்துறையையே பாதித்துள்ளது. ஏனைய துறைகளில் தொடர்ந்தும் (குறிப்பாக தமிழ் மாணவர் உள்ள பகுதிகளில் பட்டதாரிகள் ஏற்றுமதிப் பண்டங்களாகவும் கருதப்படுகின்றபடியாலும்) ஆங்கிலமே போதனா மொழியாக இருப்பதனால் மாற்றத்தின் விளைவுகள் பாரதூரமானதாகத் தென்படவில்லை. தொழிற்துறைகளில் விஞ்ஞானம் சார்ந்த பயிற்சி பெறுவோருக்கு உத்தியோக வசதிகள் ஓரளவிற்கு இருக்கிறபடியால் அவற்றுக்கு மதிப்புக் குறையவில்லை. இதனால் அத்துறைகளில் இடம் பெறப் போட்டி அதிகம். ஆகவேதான் இன்றைய அரசியல் வளர்ச்சிச் சூழலில் இன, மொழி, பிரதேச கோஷங்கள் கல்வித்துறையிலும் புகுந்துள்ளதை நாம் காணலாம். போட்டி வலுப்பெற்றமையால் பெரும்பாலான தகுதியுள்ள மாணவர்கள் (பள்ளிக்கூடங்களினமைப்பு சீரழிந்ததினால்) "டியூட்டறி'' வியாபாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு தமது ஆக்க சக்தியும் உடற்சக்தியும் தேய்ந்தநிலையில் சோர்வும் சலிப்பும் உள்ளவர்களாய் பல்கலைக்கழகங்களில் புகுவதை நாம் காணலாம். ஒருசிலர் நேர்மையற்ற வழிவகைகளைக் கையாண்டுள்ளனர் எனும் குற்றச்சாட்டும் பத்திரிகை வாயிலாய் நாம் அறிகிறோம். பள்ளிக்கூடங்களில் தாய்மொழியே போதனாமொழியாக இருக்கும்போது பல்கலைக்கழகங்களில் அந்நிய மொழியாகிய ஆங்கிலம் போதனா மொழியாக இருப்பது சிருஷ்டி சிந்தனையைத் தூண்ட இன்னொரு தடையாக இருப்பதையும் நாம் காணலாம். தன் துறையிலேயே ஆழமாகக் கல்வி பெற முடியாத நிலையில் பல கலைகளையும் கற்றும் பல்கலைக்கழகப் பட்டதாரியாக நிறைவுற்று வருவது எவ்வாறு என்பதே பிரச்சனை. சொற்ப வித்தைகளைக் கற்று வருபவர்களையே பட்டதாரியென அழைக்கும் நிலைக்கு வந்து விட்டோம்.

இதுவரை கூறப்பட்ட அல்லது மறைந்திருக்கும் நோக்கங்களினின்றும் முடிவுகளை உய்த்தறிதலும் அவற்றின் உண்மையை நிகழ்வுகளைக்கொண்டு வலியுறுத்தலுமே ஆய்வு முறையாக இருப்பதை வாசகர்கள் கவனித்திருக்கலாம் அடுத்து 'குறைபாடுகள் உண்டு என உணர்ந்த நிலை' எனக் கட்டுரை ஆரம்பத்தில் கூறியதைச் சற்று ஆராய்வோம்.

இதற்கு உட்கிடையாகவுள்ள முற்கற்பிதம் என்னவெனில் பல்கலைக்கழகங்கள் சிருஷ்டி சிந்தனையைத் தூண்டும் நிறுவனங்களாக இருத்தல் அவசியம் என்பதே. நோக்கங்கள் இந்த இலட்சியத்தை அடைவதற்குரியனவா எனும் ஆய்வே பிரதானமாக இருப்பதனாலேயே நோக்கங்களை இன்னதென இனங்கண்டு உய்த்தறி முறையைக் கையாண்டே இன்றைய நிலையில் 'குறைபாடுகள் உண்டு என உணர்ந்த நிலை' பெறும்போது ஏதோ "தரம் குறைந்தது'' அல்லது தரம் குறைக்கப்பட்டுள்ளது'' என்பதே முடிவு என்பதும் புலப்படும். 'தரம் குறைந்தது' என ஆணித்தரமாகக் கூறுவதற்கு 'நோக்கங்களை' பற்றிய ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. அல்லது நடத்தப்படுகின்றது என்பதே முடிபு. இவ்வித ஆய்வு நடத்தப்படவில்லை என்றும் நாடு போகும் போக்கில் நடத்தப்படமாட்டாது என்பதும் எமது முடிபாகும். 'தரம் குறைந்தது' எனும்

பொது நம்பிக்கை நிலவுமானால் இவ்வித கல்வியைப் பெற இத்தகைய போட்டி இருக்காது. விரும்பத்தக்கது எனும் பொது நம்பிக்கை நிலவுகின்றபடியால் தரமானது என்பதும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்றே கொள்ளலாம். ஆகவே சிருஷ்டி சிந்தனையைத் தூண்டும் கல்வியா அல்லது சொல்லிக்கொடுக்கும் கல்வியா என்பது உயர் கல்வி தேவைப்படுவோருக்கு (பெரும்பாலான பெற்றோருக்கும் அரசியல் வாதிகளுக்கும்) ஒரு முக்கிய பிரச்சனையாகத் தென்படாது என்றே முடிவு கொள்ளவேண்டும்.

மறுபுறத்தில் 'தரம் குறைக்கப்பட்டுள்ள' என்பது சில முதியோர் மத்தியில நிலவும் ஒரு பொது அபிப்பிராயமாகவுள்ளது என்றும் கூறலாம். அதாவது முன்புள்ள நிலையைவிட இன்று தரம் குறைவாயிருக்கின்றது என்பதே அவர்களது முடிவாகும். இது ஒரு சந்ததிக் கோளாறு என்றும் விளக்க இடமுண்டு. பொதுவாக ஒரு சந்ததியினர் தரம் ஏற்றுப் பழகி அனுபவித்த நிலையினின்றும் மாற்றம் ஏதேனும் ஏற்பட்டால் தமது காலத்து நிலையை விட மாறிய நிலை குறைவுள்ளது என்று கூறத் தயங்க மாட்டார்கள். இவர்களுள் சிலருக்கு (குறிப்பாகத் தமிழ் மக்கள் மத்தியில்) ஆங்கில மொழியின்மீது ஒரு விசேட பக்தியுண்டு என்றே கூறலாம். ஜப்பான், சீனா போன்ற முன்னேறும் (அல்லது முன்னேற விரும்பும்) நாடுகளில ஆங்கிலமொழி நவீன அறிவைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படக்கூடிய கருவியாகக் கருதப்படுகின்றது. எம்மவரோ அவ்வாறு அணுகாது ஆங்கிலத்தை ஆங்கிலேயர் போலப் பழகுவதே பண்புடையட என்றும் கருத்துள்ளவர்களாக இருக்கின்றனர். (ஜபபானியர்களும் சீன தேசத்தவர்களும் ஆங்கிலத்திலுள்ள தேவையான நூல்கள் அனைத்தையும் தத்தம் மொழிகளில் மொழி பெயர்த்துத் தமது மொழிகளைத் தகுதி வாய்ந்த போதனா மொழிகளாக வளர்த்துள்ளனர். தாய் மொழியின் வாயிலாகப் பயில்வதே விசேடம் என்பர் கல்விமான்கள். நாமோ அதனை ஏற்காது உயர் கல்விக்கென்று ஒதுக்கப்படும் பணத்தின் கணிசமான அளவை மாணவர்கள் ஆங்கிலம் பயில்வதற்கென ஒதுக்கி வீணாக்குகின்றோம்.) இத்தகையவர்களே தாய்மொழி போதனா மொழியான நிலையை ஏற்காது இதனால்தான் தரம் குறைந்துவிட்டது எனக் கூறித் திரிகின்றனர்.

பிரதேசரீதியாகவும் வர்க்கரீதியாகவும் கல்வி மேலும் வாய்ப்பு விஸ்தரிக்கப்பட்டதும் அவர்களுக்கு ஏற்க முடியாததாக இருக்கின்றது என்றும் கூறலாம். தொழில் வாய்ப்புக்கு உரியதாகையால் அதிகார பீடத்திலின்றும் அகற்றப்படுவதை அதிகாரத்தை அனுபவித்தோர் விரும்புவதில்லை. தமது பிள்ளைகள் தொடர்ந்தும் அதே அதிகார நிலையில் இருத்த வேண்டும் என்பதும் அவர்களது நிலைக்குக் காரணமாக இருக்கலாம்.

விஞ்ஞானமும், விஞ்ஞானம் சார்ந்த தொழில் வசதிக் கல்வியும் தரம் கூடியது என்பதும் ஒருவித நம்பிக்கை. தொழில் வாய்ப்புக்குரியதாகையால் தரமுள்ள மாணவர்கள் இத்துறைகளை விரும்பி நாடுவது இயல்பே. எஞ்சியோருக்கு மட்டுமே கலைத்துறையென்பது நம்பிக்கையளவிலும் நடைமுறையிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. மேலும், இத்துறைகளில் ஆங்கிலமே தொடர்ந்தும் போதனா மொழியாக இருப்பதனால் முன்குறிப்பிட்ட சிந்திக்கும் சூழலில் இவற்றுள் கலைத்துறை தரம் குறைந்தது என்பதும் உய்த்தறிந்து முடிவாக்கப்படுகின்றது. கலைத்துறையில் பொறுப்புள்ள சிலரும் இதனை ஏற்பதே விந்தையானதும் மனவருத்தத்திற்குரியதுமாக இருக்கின்றது. (மேலை நாட்டுப் பல்கலைக்கழகங்களுள் பலர் கலைத்துறையை மையமாக வைத்துக் கொண்டதனாலேயே தமது தனித்துவத்தைப் பெறுகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.)

போதனா மொழி மாற்றப்பட்டதனாலும், பல்கலைக்கழகப் படிப்பு வசதிகள் விஸ்தரிக்கப்பட்டு ஆராய்ச்சி வசதிகளுக்குரிய பணம் குறைக்கப்பட்டதனாலும், வருவாய் குறைந்ததனாலும் பல விரிவுரையாளர்கள் ஆங்கிலமே போதனாமொழியாகக் கொண்டதும் ஆராய்ச்சி வசதியுள்ளதும் வருவாய் கூடியது

மாகிய மேல் நாட்டுப் பல்கலைக்கழகங்களில் கடமையாற்ற விரைந்தோடுகின்றனர். சுதந்திர நாட்டிற்குரிய தேவைகளையும் கஷ்டங்களையும் உணராத தேசாபிமானமற்ற செயல் என்றே எதனைக் கூறவேண்டும்.

ஆங்கிலேயர் எமது நாட்டில் புகுத்திச் சென்ற உயர்கல்வித் தத்துவத்தை நாம் ஏற்போமாகில் இன்றைய நிலை சில அளவைகளுக்கு ஏற்ப தரம் குறைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் மறுக்கமுடியாது என்பது உண்மையே. தகுதி வாய்ந்த பல விரிவுரையாளர்கள் (குறிப்பாகத் தமிழர்கள்) வேலை தேடி வேறு நாடுகளுக்குச் சென்று விட்டார்கள். 'எங்கும் பல்கலைக்கழகம்' எனும் கொள்கையினாலும் ஏனைய துறைகளில் வருமாய் கூடுதலாக இருப்பதனாலும் தரமுள்ள விரிவுரையாளர்களை ஈர்த்தெடுப்பது கடினமாகிக் கொண்டே வருகிறது. மேலும் இரு மொழிகளும் (சிங்களமும், தமிழும்) போதனா மொழிகளாக இயங்கும் பல்கலைக்கழகங்களில் போதிய உயர்பயிற்சி பெற்ற ஆசிரியர் இன்மையால் தமிழ்ப்பகுதி பாதிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இதனால் சிங்களப்பட்டதாரிகளுக்குக் கிடைத்த பயிற்சியை விட தமிழ்ப் பட்டதாரிகளது பயிற்சி குறைவானது என்பதையும் நாம் ஏற்க வேண்டும். தாய்மொழியைப் போதனா மொழியாக்கிய துறைகளில் மொழியாக்கிய துறைகளில் மொழிபெயர்ப்பு நூல் தட்டுப்பாடு ஒரு புறம். பள்ளிக்கூடங்களில் தாய்மொழியில் படித்துவிட்டு பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்டு பயிலும் கஷ்டம் இன்னொரு புறம், முன்பிருந்த நிலையில் இருந்து தரம் குறைப்பதற்கு உந்துகின்றது.

இவை காரணமாக ''தரம் குறைக்கப்பட்டுள்ளது'' எனலாம். சொல்லிக்கொடுக்கும் கல்வி, இதுதான் என்றும் கூறி விடலாம். ஆனால் எவ்விதத் தத்துவ எல்லைக்குள் இவ்விதத் தீர்ப்பு அளிக்கப்படுகின்றது என்பதை நாம் மறந்துவிடப்படாது. ஆங்கிலேயர் புகுத்திய கல்வி போதனா மொழி மாற்றத்தோடு இலவசமாகவும் பரவுதலாகவும் விஸ்தரிக்கும்போது முன்புள்ள நிலையினின்றும் ''தரம் குறைக்கப்பட்டுள்ளது'' என்னும் முடிவுக்கு வருவது சுலபம். ஆனால் ஆரம்பிக்கும்போதே நோக்கம் சிருஷ்டி சிந்தனையைத் தூண்டுவதற்கல்ல என்பதை ஏற்றுக்கொண்டால் இன்றைய நிலையில் மட்டுமே பல்கலைக்கழகங்கள் ''சொல்லிக்கொடுக்கும் நிறுவனங்களாக'' மாறியுள்ளன என்பது முழுமையும் உண்மையாகாது.


கலாநிதி:
வே. இராமகிருஷ்ணன்
மெய்யியல் துறை,
யாழ்-பல்கலைக்கழகம்.


சர்வ வல்லமையுள்ள கடவுளுக்கு எதையும் சேமித்து வைக்க வேண்டிய அவசியமே இல்லை. அவர் அன்றாடம் தேவையாயுள்ளவைகளையே உண்டாக்குகிறார். ஆகவே தத்துவ ரீதியாக மனிதர்களும் அன்றாடத் தேவைகளுக்கு வேண்டியவைகளோடு திருப்தியாய் இருக்க வேண்டுமேதவிர, பொருள்களைச் சேர்த்துவைக்கக் கூடாது.

—காந்திஜி

BELIEVE IT
TRY ONCE AND
YOU WILL BE CONVINCED

FOR ALL TRAVEL PURPOSES

CALL

24252

GEMS TRAVEL SERVICES

83, YORK STREET
COLOMBO-1

WITH BEST WISHES

*From*

# PROMOTERS ENGINEERING COMPANY LTD.

**MECHANICAL, AUTOMOBILE, MARINE, PRODUCTION & CIVIL**

**Engineers**

**Specialists**

**IN CRANK SHAFT GRINDING REBORING & LINE BORING**

844, POINT PEDRO ROAD,
NALLUR,
JAFFNA.

## தொழிலதிபர்களே
## வீடு கட்டுவோர்களே

உங்கள் தொழிற்சாலைகள் - வீடுகள் -
அனைத்தையும் நிர்மாணிக்கத் தேவையான
சகலவித இரும்புக்கம்பி வகைகளுக்கும்
இரும்பு, அலுமினிய கல்வனைஸ்ட் தகரங்களுக்கும்
ஆணி வகைகள் அனைத்திற்கும்

மற்றும்

**SLon பைப்வகைகள் இணைப்புகள்**

யாவையும் நிதான விலையில் பெற எம்மை நாடுங்கள்

## விவசாயிகளே

உங்கள் பயிர்வளம் காக்கத்
தேவையான விவசாய கிருமிநாசிகள்
களைக்கொல்லி, பங்கசு கொல்லிகளான

- கல்கிசன்ஸ் பரத்தியன் E 50
- கல்கிசன்ஸ் ரெகுரே 40
- கல்கிசன்ஸ் எம். சி. பிஏ 40
- கல்கிசன்ஸ் எலோசால் 80 WP

அனைத்தையும் மேற்கு ஜேர்மனியிலிருந்து நேரடியாக இறக்குமதிசெய்து
விநியோகம் செய்கிறோம்

**உங்கள் தேவைகள் அனைத்திற்கும் எம்மை நாடுங்கள்**

# கல்கி சன்ஸ்

**147,** ஸ்ரான்லி வீதி,

தொலைபேசி: *7711* யாழ்ப்பாணம்.

COMFORTABLÆ ACCOMMODATION
PROMPT SERVICE
TASTY FOODS

VISIT

# Rex Grill Restaurant

1st Floor,
Rex Building,
16, Cotta Road,
BORELLA,
COLOMO-8

PHONE: 94145

# பேரங்கள்

பூத்துக் குலுங்கிடும்
பூவையர் வாழ்விற்காய்
காத்துக் கலங்குகிறார் பார் - அவர்
காத்துக் கலங்கிடும்
வாழ்வினைக் காசிற்காய்
கேட்டுத் தொலைகிறார் பார்

சாதி சமயத்தை
சீர்திருத்த வந்தவர்
சீதனம் கேட்கிறார் இங்கு - அவர்
ஓதித் திரிந்த
தத்துவம் யாவையும்
பாதியில் மறந்தனர் இன்று

சாற்றும் புராணத்தில்
ராமனைப் பெற்றவர்
சீதனம் கேட்கவுமில்லையே - இங்கு
இராமனைப் பெற்றவர்
ராட்சகர் போல் வர
தட்சணை கேட்குமோர் நிலையே

பட்டம் பதவிகள்
பல்கலை சென்றவர்
பண்பினில் அவர் ஒரு சிலர் - நல்ல
திட்டமும் உள்ளவர்
இலட்சம் இல்லையேல்
கட்டேன் என்கிறார் தாலி

சொந்த இனத்துப்
பெண்களின் வாழ்விற்கு
பேரங்கள் பேசிடும் இளைஞர்
அந்த இனத்தை
ஆண்டிட உனக்கொரு
நாடில்லாததும் ஒரு கேடா.

பொன் பாலராஜன்
(விசேட பொறியியற் பயிற்சி நெறி
பெற்றோலியத் தூய்சாலை, களனி)

இறக்குமதி செய்யப்பட்ட

இந்தியா "ராணி மார்க்" ஓடுகளும்

நம்பிக்கையான, நீடித்த பாவனைக்கு

"சுமிட்டோமோ" டயர் டியூப்புக்கள்

எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்

ஏக விநியோகஸ்தர்கள்:

# ஸ்டன் ரேடர்ஸ்

சேகரம் கட்டிடம்

188/3, ஆஸ்பத்திரி விதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 693

# ஈழத்துக் குழந்தைப் பாடல்கள்

கவிதை, சிறுகதை, நாவல் நாடகம் ஆகிய இலக்கியங்கள் குழந்தைகளுக்கென்றும் எழுந்துள்ளமையினைப் பலமொழிகளிலும் காணலாம். பொதுவாகப் பதினான்கு வயதிற்குட்பட்டவருக்கேற்ற இலக்கியங்கள் குழந்தை இலக்கியங்கள்- சிறுவர் இலக்கியங்கள் எனக் கருதுதப்படுகின்றன. பதினான்கு வயதிற்குட்பட்டவருக்கேற்ற இலக்கியங்களைப் பொதுவாகக் குழந்தை இலக்கியங்கள் எனக் கூறினாலும் குழந்தைகளின் வயதிற்கேற்ப அவை மேலும் வகைப்படுத்துவதுண்டு இத்தன்மை தமிழ்மொழியிற் சிறப்பாக இடம்பெறவில்லை. ஆனால் ஆங்கில மொழியில் செம்மையாக அமைந்துள்ளது. ஆங்கிலமொழியில் உள்ள குழந்தை இலக்கியங்களை இரண்டு வயதிலிருந்து ஆறுவயது வரையுள்ள குழந்தைகளுக்குரியவை, ஏழு வயதிலிருந்து பன்னிரண்டு வயது வரையுள்ள குழந்தைகளுக்குரியவை, பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட பதினான்கு வயது வரையுள்ள குழந்தைகளுக்குரியவை என வகைப்படுத்தியுள்ளனர். இவ்விதம் பலமொழிகளிலும் குழந்தைகளுக்கென்று எழுந்துள்ள இலக்கியங்களில் கவிதை இலக்கியமே அதிகம் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. இளம் பிராயத்திற்கும் கவிதைக்கும் உள்ள தொடர்பு மிகவும் இறுக்கமானதாகையாலும், ஓசை தாளம் அபிநயம் என்பனவற்றுடன் இணைந்த பாடல்களைக் குழந்தைகள் பெரிதும் விரும்புவார்களாயினும், குழந்தை இலக்கிய வகையில் பாடல்கள் முக்கியத்துவம் பெற்றிருக்கலாம்.

ஈழத்துக் குழந்தை இலக்கியத்தைப் பொறுத்தளவிலும் குழந்தைப்பாடல்களே முக்கியத்துவம் வகிக்கின்றன. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே ஈழத்தில் குழந்தைகளுக்கென்று பாடல்கள் எழத் தொடங்கின. அதுவரை தமிழ்மொழியில் பொதுவாகக் குழந்தைகளுக்குரியன எனக் கருதப்பட்ட பாடல்களே ஈழத்திலும் குழந்தைகள் மத்தியில் வழங்கி வந்தன. ஆங்கில மொழிக் குழந்தைப்பாடல்களின் வரலாற்றை நோக்கின் அங்கு வழிவழியாக வழக்காற்றில் இருந்த பாடல்களே தொடக்கத்தில் குழந்தைப்பாடல்களாக வழங்கப்பட்டமையினைக் காணலாம். அதேபோன்று தமிழ்மொழியிலும் மக்களிடையே வழிவழியாக வழங்கிய சில பாடல்களே முதலில் குழந்தைப்பாடல்களாக வழங்கின. 'கைவீசம்மா கைவீசு', 'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு', 'கிச்சுமாக்கந் தம்பளம்', 'நிலா நிலா வா வா நில்லாமல் ஓடி வா' என்பன அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. தமிழ்மொழியைப் பேசும் பிள்ளைகளிடையே இப்பாடல்கள் செல்வாக்குப்பெற்றுப் பலகாலமாகக் குழந்தைப்பாடல்களாகப் போற்றப்பட்டு வருகின்றன. ஈழத்திலும் இத்தகைய பாடல்களே தொடக்கத்திற் குழந்தைகளிடையே பெருவழக்குப் பெற்றிருந்தன. இன்றும் இப்பாடல்களைக் குழந்தைகள் படிப்பதைக் காணலாம். வழிவழியாக வழங்கிய இப்பாடல்களுடன் ஒளவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி என்பனவும் குழந்தைகளுக்கேற்றனவாகக் கருதப்பட்டன. ஈழத்தில் குழந்தை வகுப்புகளுக்குரிய பாடப்பத்தகங்களில் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை ஆத்திசூடி, கொன்றைவேந்தன் பாடல்களே அதிகம் இடம்பெற்றிருந்தன. இவ்விதம் தமிழ் மொழியில் வழக்கிலிருந்த வாய்மொழிப்பாடல்கள் சிலவும் ஆத்திசூடி கொன்றைவேந்தன் என்பனவும் குழந்தைகளுக்கேற்றனவாகக் போற்றப்பட்ட நிலையில், 20 ஆம் நூற்றாண்டில் பாரதி பாப்பாப்பாட்டினைப் பாடி, புதிய குழந்தைப் பாடல்கள் தோன்ற வழிவகுத்தும் கொடுத்தான். பாரதியின் பாப்பாப்பாட்டு குழந்தைகளுக்கேற்ற எளிய இலகுவான நடையில் குழந்தைகளை மகிழ்விக்கத்தக்க ஓசை நயத்தினை உடையதாக அமைந்ததெனினும் அதன் உள்ளடக்கம் ஓரளவு கடினமான

தென்றே கூறவேண்டும். எவ்வாறாயினும் குழந்தைகளுக்காக அவர்களுக்கேற்ற இலகுவான நடையில் எழுந்த பாரதியின் பாப்பாபாப்பாட்டு தமிழிற் குழந்தைப்பாடல்கள் எழ ஓரளவு முன்னோடியாக அமைந்தது என்பதனை மறுக்க முடியாது.

பாரதிக்குப்பின்னர் தமிழ்நாட்டிலும், ஈழ நாட்டிலும் குழந்தைகளுக்கெனப் பாடல்கள் பாடவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. அவ்வார்வத்தின் வெளிப்பாடு ஈழத்திலேயே முதலிற் காணப்பட்டது எனலாம். ஏனெனில் தமிழ்நாட்டில் குழந்தைப் பாடல்களின் முன்னோடியாகக் கருதப்படும் கவிமணியின் குழந்தைப் பாடல்கள் 1938ஆம் ஆண்டிலிருந்தே வெளிவரத்தொடங்கின. ஆனால் அதற்கு முன் 1935-ஆம் ஆண்டில் ஈழத்தவர் குழந்தைகளுக்குரிய பாடல் தொகுப்பு நூலொன்றினை வெளிப்படுத்தி விட்டனர். ஈழத்தில் 1926 ஆம் ஆண்டில் வெளிவந்த பாலர் மித்திரன் என்ற குழந்தைப்பத்திரிகையில் செய்யுள் திரட்டு என்ற பகுதி இடம்பெற்ற போதும் அப்பொழுது ஈழத்துப்புலவர்கள் குழந்தைப்பாடல்களை பாடுவதில் ஆர்வம் செலுத்தியதாகத் தெரியவில்லை. 1934 ஆம் ஆண்டிலேயே குழந்தைப் பாடல்களை இயற்ற வேண்டும் என்ற ஆர்வம் ஈழத்தவரிடையே ஏற்பட்டது. அவ்வார்வம் ஈழத்தவரிடையே ஏற்படக் காரணமாக இருந்தவர் க.ச. அருணந்தி ஆவார். அருணந்தி அவர்கள் 1934 ஆம் ஆண்டு வடபெரும்பாக வித்தியாதரிசியாக இருந்தபொழுது குழந்தைப் பாடல்களின் இன்றியமையாமையினையும் குழந்தைப் பாடல்கள் தமிழ்மொழியால் இல்லாத குறையினையும் உணர்ந்து தமிழ்மொழியிற் குழந்தைப் பாடல்களை ஆக்க வேண்டும் என விரும்பி, ஈழத்துப் புலவர்களைக் குழந்தைப் பாடல்களைப் பாடும்படி ஊக்குவித்தோர், அதன் பயனாகவே பிள்ளைப்பாட்டு என்ற குழந்தைப்பாடல் நூல் 1935 இல் ஈழத்தில் வெளிவந்தது. அது ஈழத்தில் எழுந்த முதற்குழந்தைப்பாடல் நூலாக விளங்குவதுடன் அமையாது தமிழ்மொழியால் எழுந்த முதற் குழந்தைப் பாடல் நூலாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

'பிள்ளைப்பாட்டு' என்ற நூலில் மா. பீதாம்பரம், சோமசுந்தரப்புலவர், சி. அகிலேசசர்மா, ச.பஞ்சாட்சரஐயர், சி. தங்கசாமிஐயர், N.S. முருகேசு, T.S. ஆழ்வாப்பிள்ளை, அ. சிறில், K. K. செபஸ்ரியாம்பிள்ளை. K. சின்னத்தம்பி, J.K. சினித்தம்பி, N. தம்பிப்பிள்ளை, க. அழகரத்தினம் ஆகிய பதின்மூவரின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பாடல்களில் பெரும் பாலானவை தனிப்பாடல்களாகவும் சில கதைப் பாடல்கள் (Narrative poems) ஆகவும் அமைந்துள்ளன. பாடல்கள் குழந்தைகளின் அனுபவத்திற்குட்பட்ட அவர்கள் கண்டும் கேட்டும் அறிந்த பொருட்களைப் பற்றிய பாடல்களாகவும் (உ+ம் அணில் அப்புலி தென்னை கிளி பறவை பசு புலி முதலானவை) நல்லொழுக்கத்தை ஊட்டும் பாடல்களாகவும் (உ+ம் ஒற்றுமையாக இரு, புத்தியாக நட, பொய் சொல்லாதே என்பன) காணப்படுகின்றன அத்துடன் இந்நூலில் குழந்தைகளின் வகுப்புத்தரத்திற்கேற்பப் பாடல்கள் முதலாம்படி (Grade I), இரண்டாம்படி (Grade II) எனப் பிரித்துப் போடப்பட்டுள்ளமையும் மனங்கொள்ளத்தக்கது. இவ்விதம் குழந்தைகளுக்கென வெளிவந்த முதற் பாடல் நூலான பிள்ளைப்பாட்டில் அமைந்துள்ள எல்லாப் பாடல்களும் சிறப்புடையன. குழந்தைகளுக்கு ஏற்றனஎனக் கொள்ள முடியாவிடினும் குழந்தைப்பாடல்களுக்குரிய பண்புகளைக்கொண்ட சில பாடல்களை இந்நூல் அறிமுகப்படுத்தியுள்ளது என்பதனைத் திடமாகக் கூறலாம்.

அருணந்தி அவர்களின் தூண்டுதலினால் குழந்தைப் பாடல்களைப் பாடியவர்களுள் சோமசுந்தரப்புலவர் ஒருவரே தொடர்ந்தும் குழந்தைகளுக்கேற்ற பாடல்களைப் பாடிக் குழந்தைக் கவிஞராகச் சிறப்புப்பெற்றார். ஈழத்துக் குழந்தைகளின் அனுபவத்திற்கு ஏற்ற சிறந்த குழந்தைப் பாடல்களைப் பாடியதன் மூலம் ஈழத்தில் குழந்தைப்பாடல்கள் எழுதுவோருக்கு முன்னோடியாக அமைந்த சிறப்பும் சோமசுந்தரப்புலவருக்கே உண்டு. சோமசுந்தரப்புலவர் அம்புலி, வெண்ணிலா, ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி, புழுக்கொடியல், ஆடுகதறியது, கடவுள் முதலான

தனிப்பாடல்களையும், தாடியறுந்தவேடன், பவளக்கொடி, கொழுக்கட்டைப் பொன்னன், இலவுகாத்தகிளி, மனம் நிறைந்த செல்வன், ஏருத மேட்டுக்கிரண்டுதலை ஆகிய கதைப்பாடல்களையும் குழந்தைகளுக்காகப் பாடியுள்ளார். இவையாவும் 'சிறுவர் செந்தமிழ்' என்ற நூலில் இடம்பெற்றுள்ளன. சோமசுந்தரப்புலவரின் குழந்தைப் பாடல்களைப் பொறுத்தவரை சில பண்புகளைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். சோமசுந்தரப் புலவரின் குழந்தைப்பாடல்கள் நீதிகளை நல்லொழுக்கங்களைப் போதிப்பனவாக அமைந்தமை முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. ஐந்து வயதில் இருந்து பத்துவயது வரையுள்ள பருவம் மனிதவளர்ச்சியில் முக்கியமான பருவம் என்பதும் அப்பருவத்திலேயே பிற்கால வாழ்க்கையின் போக்கு உறுதியடைகின்றது என்பதும் உளநூலார் கருத்து இத்தகைய ஓர் உளவியல் நோக்கில் ஆரம்பகாலக் குழந்தைக் கவிஞர்கள் தமது பாடல்களை ஆக்காவிடினும் குழந்தைகளுக்குச் சிறுவயதிலேயே நற்கருத்துக்களைப் போதிக்கவேண்டும் என்ற உணர்வுடன் குழந்தைப் பாடல்களை ஆக்கினர் என நிச்சயமாகக் கருதலாம். இத்தன்மையினைப் பலமொழிகளில் உள்ள குழந்தை இலக்கியங்களும் காட்டி நிற்கின்றன. சோமசுந்தரப்புலவரும் குழந்தைகளுக்கு நற்கருத்துக்களைப் போதிக்கவேண்டும் என்ற ஆர்வத்துடன் தமது குழந்தைப்பாடல்களில் நீதி போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். அடுத்துச் சோமசுந்தரப்புலவரின் குழந்தைப்பாடல்கள் ஓரளவு யாழ்ப்பாணப் பண்பாட்டினைப் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளமையும் கவனிக்கத்தக்கது. ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி, புழுக்கொடியல் ஆகிய பாடல்களை யாழ்ப்பாணத்துக் குழந்தைகளின் அனுபவத்தையொட்டி அமைத்த புலவர் யாழ்ப்பாணத்தாரின் பழக்கவழக்கங்கள் சிலவற்றையும் - அதாவது பலாவிலை மடித்துக் கூழ் குடித்தல், தேங்காய்ச்சொட்டுடன் புழுக்கொடியலை உண்ணுதல், முதலானவற்றையும் அவற்றில் விதந்து கூறியுள்ளார். மேலும் குழந்தைப்பாடல்களுக்கு உரியனவாகக் கூறப்படும் பண்புகளிற்சில சிறப்பாக ஓசை, அபிநயம், நகைச்சுவை, சேர்ந்துபாடுதல் என்பன சோமசுந்தரப்புலவரின் குழந்தைப் பாடல்கள் சிலவற்றில் சிறப்பாக இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஓசைச் சிறப்பினை ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி, பவளக்கொடி ஆகிய பாடல்களிற் சிறப்பாகக் காணலாம். எலியுஞ் சேவலும் என்ற பாடல் அபிநயத்துடன் நடிக்கக்கூடிய சிறந்த பாடலாகும். புழுக்கொடியல் ஆடிப்பிறப்பு என்பன குழந்தைகள் சேர்ந்து பாடுவதற்கு ஏற்றவை. தாடியறுந்த வேடன், கொழுக்கட்டைப் பொன்னன் ஆகிய பாடல்கள் சிறந்த நகைச்சுவை பயப்பன. இவ்வகையான சில பண்புகளைக் கொண்டுள்ள புலவரின் பாடல்களிற் சில தமிழ்நாட்டுப் புலவர்களின் பாடல்களுடன் ஒப்பிடுமிடத்து சிறப்புமேம்பட்டு விளங்குவதும் கருத்திற்கொள்ளத்தக்கது.

சோமசுந்தரப்புலவரின் காலத்தில் மூது தமிழ்ப்புலவர் நல்லதம்பி, யாழ்பாணன் ஆகியோரும் குழந்தைகளுக்குரிய பாடல்களைப் பாடியுள்ளனர். நல்லதம்பிப்புலவரின் குழந்தைப்பாடல்கள் அவரது கவிதைகளின் தொகுப்பாக வெளிவந்த 'இளைஞர் விருந்து' என்னும் நூலில் 'கதைப்பகுதி', 'குழந்தை இன்பம்' என்ற பகுதிகளிற் காணப்படுகின்றன. நல்லதம்பிப்புலவரின் குழந்தைப் பாடல்களும் சோமசுந்தரப்புலவரின் குழந்தைப்பாடல்களைப் போன்று குழந்தைகளின் அனுபவத்திற்கு உட்பட்ட பொருட்களைப் பற்றியனவாகவும் குழந்தைகளுக்கு நற்கருத்துக்களை ஊட்டுவனவாகவும் அமைந்துள்ள போதும் சோமசுந்தரப்புலவரின் குழந்தைப்பாடல்கள் பெற்ற சிறப்பினை அவை பெறவில்லை என்றே கூறவேண்டும். சில பாடல்களில் ஓசை நன்ருக அமையாததுடன் நீதி போதனைகள் மட்டும் தனியே எடுத்துக் கூறப்படுவதும் பாடல்களின் சிறப்பைக் குறைக்கின்றது. எனினும் நல்லதம்பிப்புலவரின் குழந்தைப் பாடல்களில் ''குஞ்சே குஞ்சே வாவா'' ''பாவைப் பிள்ளை'', ''கடலை'' முதலான தனிப்பாடல்களும் ''சிங்கமும் சுண்டெலியும்'' என்ற கதைப்பாடலும் சிறப்பானவையாகக் கூறத்தக்கன. யாழ்ப்பாணனின் குழந்தைப்பாடல்

கள் 'பாலர்கீதம்' என்ற பெயரில் நூலுருப்பெற்றுள்ளன, 'நல்ல பாப்பா' ஆட்டுக்குட்டி' 'எனது பட்டம்' முதலான குழந்தைகளுக்கேற்ற சில சிறந்த பாடல்களை யாழ்ப்பாணன் பாடியுள்ளபோதும், பிள்ளைகளுக்கு நற்கருத்துக்களைப் போதிக்கும் வகையில் அமைந்த அவரது பாடல்களில் பொருள் தெளிவும் ஓசைச்சிறப்பும் சிறிது குறைந்துள்ளன.

சோமசுந்தரப்புலவர், நல்லதம்பிப்புலவர், யாழ்ப்பாணன் ஆகியோருக்குப் பின்னர் ஈழத்தறிஞர்கள் பலர் குழந்தைப்பாடல்களை இயற்றியுள்ளனர். அவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் வித்துவான் வேந்தனார். வேந்தனார் பாடிய குழந்தைப் பாடல்கள் ''கவிதை பூம்பொழில்'' என்ற அவரது நூலில் குழந்தைமொழி என்ற பகுதியில் இடம்பெற்றுள்ளன. அதில் உள்ள முப்பத்தாறு பாடல்களில் பெரும்பாலானவை குழந்தைகளுக்கேற்ற சிறந்த பாடல்களாக விளங்குகின்றன. அம்மாவின் அன்பு, பாட்டி, எங்கள் வீட்டுப் பூனை, புள்ளிக்கோழி, அணில், ஊஞ்சல் ஆடுவோம், பந்தடிப்போம் முதலான பாடல்கள் குழந்தைகள் பாடி மகிழ்வதற்கேற்ற பொருளமைதியும் இலகுநடையும் ஓசையின்பமும் உடையன. ''நல்லூர்'' ''பண்ணைப்பாலம்'' ''கீரிமலை'' முதலான பாடல்கள் யாழ்ப்பாணக் குழந்தைகள் பாடிமகிழ்வதற்கேற்ற மண்வாசனை கொண்டவை. இவற்றைவிட அறிவுறுத்தற் பாடல்களாகவும் அறிஞரைப் போற்றும் பாடல்களாகவும் சில விளங்குகின்றன. பொதுவாகப் பார்க்குமிடத்து வேந்தனாரின் குழந்தைப் பாடல்கள் குழந்தைப்பாடல்களுக்கிருக்கவேண்டிய பல பண்புகளைக்கொண்டமைந்துள்ளன எனக் கூறத்தக்கனவாயுள்ளன. இவற்றால் சோமசுந்தரப்புலவரின் குழந்தைப்பாடல்களுக்குப்பின்னர் வேந்தனாரின் குழந்தைப் பாடல்களே சிறப்புப் பெறுகின்றன.

இ. நாகராஜன் பாடிய குழந்தைப் பாடல்கள் 'சிறுவர் பாடல்' என்ற பெயரில் வெளிவந்துள்ளன. நாகராஜனின் குழந்தைப் பாடல்களும் அதிகம் முன்னோர் மரபினை யொட்டியனவாக நற்கருத்துக்களைப் போதிப்பனவாகவே உள்ளன. அத்துடன் தனக்குமுன் குழந்தைப் பாடல்களைப் பாடிய கவிஞர்கள் பாடாத புதுப்பொருட்களைப் பற்றியும் சில பாடல்களைக் காலத்தோடு ஒட்டி நாகராஜன் பாடியளித்துள்ளார். புகைவண்டி, ஆகாயவிமானம், மெழுகுதிரி என்பன அத்தகையன. இவரது பாடல்களில் 'சட்டை' 'மிருகக்காட்சிசாலை' என்பன சிறந்த பாடல்களாகும். சோமசுந்தரப் புலவருக்குப் பின்னர் நாகராஜனே குழந்தைகளுக்குரிய சிறந்த கதைப்பாடல்களைப் பாடியுள்ளார்.

மேலும் வெ. விநாயகமூர்த்தியின் 'பாலர் பாமாலை' எம். ஸைபரின் 'மலரும் மணமும்' இ அம்பிகைபாகனின் 'அம்பிப் பாடல்' பா. சத்தியசீலனின் 'பாட்டு' 'மழலைத்தமிழ் அமுதம்' 'புத்தியால் வென்ற நத்தையார்', ச. அமிர்தநாதரின் 'பிஞ்சு உலகம்', சாரணாகையூமின் 'குழந்தை இலக்கியம்' என்னும் நூல்களும் தேனமுது இலக்கிய மன்றத்தினரின் வெளியீடான 'கனியமுது' என்ற நூலும் குழந்தைப் பாடல் நூல்களாக ஈழத்தில் வெளிவந்துள்ளன. இவற்றுள் சத்தியசீலனின் நூல்களும் அம்பியின் அம்பிப்பாடலும் சிறப்பாக கூறத்தக்க ஓரளவு குழந்தைகளின் வயது, மனவளர்ச்சி, மொழியாற்றல் என்பனவற்றிற்கேற்பக் கவிதைகளைப் படிமுறையாக பாடும் உணர்வு இவர்களுக்கு இருக்கிறது.

இவற்றை நோக்குமிடத்து 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை எழுந்த ஈழத்துக் குழந்தைப் பாடல்களின் வளர்ச்சிக்கு சோமசுந்தரப்புலவர், வேந்தனார், நாகராஜன், சத்தியசீலன், அம்பி ஆகியோர் குறிப்பிடத்தக்க தொண்டினைச் செய்துள்ளனர், செய்து வருகின்றனர் என்பது தெளிவாகின்றது. எனினும் ஏனைய மொழிகளில் உள்ள குழந்தைப் பாடல்களின் வளர்ச்சி பின்தங்கிய நிலையில் இருப்பதால் தமிழ்மொழிக் குழந்தைப்பாடல்கள் வளர்ச்சியை வேண்டிநிற்பது போல் ஈழத்துக் குழந்தைப் பாடல்களும் வளர்ச்சியை வேண்டிய நிலையிலேயே இருக்கின்றன.

ஆங்கில மொழியில் குழந்தைகளின் வயது, மனவளர்ச்சி மொழியாற்றல் என்பனவற்றிற்கு ஏற்ப படிமுறையாகப் பாடல்கள் பல உள்ளன. அத்துடன் குழந்தைகளின் அனுபவத்துக்குட்பட்ட பொருட்களைப் பற்றிய பாடல்களுடன் (Counting Rhymes) விடுகவிப் பாடல்கள் (Riddles) தலாட்டுப் பாடல்கள் (Lullabies) வேடிக்கைப் பாடல் (Nonsense Rhymes) என்ற வகையான பாடல்களும் உள்ளன. தமிழ் மொழியில் அழ. வள்ளியப்பா இவ்வகையான பாடல்கள் சிலவற்றைப்பாடி ஆங்கில மொழியில் இருப்பது போன்ற குழந்தைப்பாடல்கள் தமிழ் மொழியில் இல்லையென்ற குறையினை ஓரளவு நிறைவு செய்துள்ளார். எனவே ஈழத்தில் குழந்தைப் பாடல்கள் இயற்றுவதில் ஈடுபட்டுள்ளவர்களும் ஏனைய மொழிகளில் உள்ள குழந்தைப் பாடல்களைக் கருத்திற் கொண்டு குழந்தைகளின் பல வளர்ச்சி நிலைகளுக்கும் ஏற்ற, பல வகைப் பாடல்களையும் பாடி, எமது குழந்தை இலக்கியத்தை வளம் படுத்துவதில் முயற்சி எடுக்க வேண்டும்.

திருமதி கலையரசி சின்னையா

பசி தாகமில்லாத இறைவனுக்கு வேளாவேளைக்கு நீரும், உணவும் அளிக்கிறீர்கள். தூணிலும் துரும்பிலும் குடியிருக்கத் தகுதியுடையவனுக்குத் தனித்ததோர் இடவசதியும் செய்து கொடுக்கின்றீர்கள். உங்களுடைய அதே உணர்வும், செயலும் மனிதனுகப் பிறந்தும், மனித உரிமையற்று நிர்க்கதியாய் ஊர்ந்து செல்லும் மனித உருவங்களுக்கு அளிக்கப்படுமானல், அதுவே இறைவனுக்கு அர்ப்பணிக்கும் சிறந்த நிவேதனமாகும்.

-சுவாமி கெங்காதரானந்தஜி

நான் பிறந்தது என்ன நியாயத்தில்? எனது இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் என்ன சலுகை? எனக்கு வயோதிகம் வந்து விட்டால் யார் பொறுப்பு? அங்கஹீனமாகி விட்டால் யார் துணை? இங்கே யாருக்கு என்ன உத்தரவாதத்தை நீங்கள் தந்திருக்கிறீர்கள். பிறந்த குழந்தைகளுக்குப் பொறுப்பு ஏற்காதவர்கள், பிறக்காத குழந்தைகளைக் கண்டு அஞ்சுவதற்கு என்ன நியாயம் இருக்கிறது?

த. ஜெயகாந்தன்

சூரிய

பிரகாசம் கொண்ட

தரமான

தங்க நகைகளுக்கு

# சூரியா நகை மாளிகை

731, செட்டியார் தெரு,

கொழும்பு- 11

தொலைபேசி:- **20363**

**29847**

# அழிவு

கொப்புகள் சில தாவித்
தோப்புக் கரணங்கள் சில போட்டுச்
செல்லுமிந்த,
அணிலுமோர் நாள் இங்கு
அழுகி வீழ்ந்துபோம்
அதன்மேல் முளைக்கும் புல்மேல்
மீண்டுமொரு
அணில் வந்து விளையாடி, செத்து
அழுகி அழிந்து போம்
இங்கே விரிந்து கிடக்கும்
இந்த மண் மேல்,
அந்த நாளில் எத்தனை அழகிகள்
சிந்து பாடி, மெல்ல நடை பயின்றிருப்பர்;
எத்தனை இளந் தம்பதியர்
சித்தம் மறந்து திளைத்திருப்பர்
கற்பனை கொடி கட்டிப் பறந்த
சிற்பிகளெத்தனை பேர், செத்திருப்பர்;
செத்தொழிந்தவரெல்லாம்
செல்வது தானெங்கே?
நிர்ச்சலனமற்று, அங்கே
நீண்டு கிடக்கும், ஆகாயத்து வெளிகளின்,
ஆழங்களொரு பதில் சொல்லக் கூடுமோ?

-வ.ந. கிரிதரன்
கட்டடக்கலை,2ம் வருடம்
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.

*With The Best Compliments*
*from*

# BOND INSTITUTES

**274/2, HOSPITAL ROAD,**
**JAFFNA.**

BRANCHES-

**70, Hospital Road,**
**JAFFNA.**

**K-K-S- Road,**
**CHUNNAKAM.**

# எரிபொருள் தட்டுப்பாடு - சில தீர்வுகள்

உலகில் தற்போது சக்திக்கு பெருமளவு தட்டுப்பாடு ஏற்பட்டு வருகின்றது. பெற்றோல் போன்ற எரிபொருட்கள், அணு ஆகிய பொருட்களில் இருந்துதான் உலகின் சக்தித் தேவைகள் பெரும்பாலும் நிறைவு செய்யப்படுகின்றன. மனிதனின் அடிப்படையான இயல்பு வளர்ச்சியடைய வேண்டும்; முன்னேறவேண்டும்; வசதிகளைப் பெருக்க வேண்டும்; துன்பங்களைப்போக்க வேண்டும் என்பதாகும். வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளில் பெற்றோல் மின்சாரம் போன்ற மூலங்கள் மிகையாக நாளாந்த வாழ்வில் பயன்படுத்தப்படுகின்றன. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளிலும் மின்சாரம் பாவிக்கப்படுகின்றது. ஆனால் பற்றுக்குறை இருந்துகொண்டே வருகின்றது. வளர்சசி அடைந்த நாடுகளும் வளர்சசி அடைகின்ற நாடுகளும் தமது பாரிய திட்டங்களை பெற்றோலிய உற்பத்தி நாடுகளை நம்பியே தயாரிக்கின்றன. ஆனால் பெற்றோலியப் பொருட்களின் விலை அடிக்கடி பெற்றோலியம் உற்பத்தி செய்யபபடும் நாடுகளால் அதிகரிக்கப்படுவதால் வளர்ச்சி அடைந்துவரும் நாடுகள் தமது திட்டங்களை நிறைவேறற வேறு வளர்ச்சி அடைந்த நாடுகளின் உதவியை நாடவேண்டியிருக்கிறது. எண்ணை உற்பத்தி நாடுகள் 1968-ம் ஆண்டில் இருந்து படிப்படியாக மசகு எண்ணைக்கு (Crude oil) விலையை அதிரிகரிதது வந்து 1973-ம் ஆண்டு எண்ணையின் விலையைப் பன்மடங்காக அதிகரித்தது. அதன்பின் எண்ணை பாவிக்கும் வீதம் படிப்படியாகக் குறைய ஆரம்பித்த போதிலும் வளர்ச்சி அடைந்துவரும் நாடுகள் வளர்ச்சி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது கூடுதலான எண்ணையைப் பாவிக்கின்றன என்றுதான் கூறவேண்டும். ஆனால் காலப்போக்கில் அதாவது இந்நூற்றாண்டின் முடிவில் பெற்றோலியப் பொருட்களின் கொள்வனவு பெருமளவு குறைந்துவிடும் எனஎதிர்பார்க்கப்படுகின்றது. விஞ்ஞானிகள் பெற்றோலியப் பொருட்களில் இருந்து பெறப்படும் சக்திக்குப் பதிலாக மாற்றுப் பொருட்களில் இருந்து சக்தியைப் பெறுவதில் ஈடுபட்டுள்ளமையே இதன் காரணமாகும். உதாரணமாக சூரிய ஒளி, காற்று, கடல், உயிர்பொருள் ஆகியவற்றில் இருந்து எல்லாம் சக்தியைப் பெறலாம் என ஆரயய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். காலப்போக்கில் இவற்றில் இருந்து போதியளவு சக்தியைப் பெறலாமென ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றார்கள். தற்போது நாம் நீர்வீழ்சி, அணுச்சக்தி, பெற்றோலியம்போன்ற எரிபொருட்களை எரித்துப் பெறப்படும் நீராவியைப் பயன்படுத்தி மின்சாரம் பெறுகிறோம். இலங்கையைப் பொறுத்தமட்டில் எமக்குத் தேவையான மின்சக்தியை நீர்வீழ்சியைப் பயன்படுத்திப் பெறுகின்றோம். ஆனால் காலப்போக்கில் நீர்வீழ்ச்சியைப் பயன்படுத்திப் பெறப்படும் மின்சக்தி போதாமல் போகுமென்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர். ஏனெனில் அதிகளவு பாரிய கைத்தொழிற் பேட்டைகள் உருவாகுவதாலாகும்.

இதற்கு மாற்றீடாக கடலில் இருந்து மின்சக்தியைப் பெறமுடியும். கடல் மின்சக்தி ஆலை ஆண்டு முழுவதும் மின்சாரத்தைத் தரக்கூடியது. கடலில் ஆழப்போனால் நீர் குளிர்ந்து கொண்டேபோகும். புவிமத்திய கோட்டிற்கு அண்மையிலுள்ள எங்கள் கடல்களின் மேற்பரப்பு சாதாரண வெப்பநிலையிலிருக்கும் அதே நேரத்தில் அதன் ஆழத்தில் நீர் உறையும் வெப்பநிலைகளும் காணப்படுகின்றன. பூமியின் துருவப் பகுதியில் இந்தநிலைமை இல்லை. வெப்பவலயப் பகுதியில் வாழும் நாம் எமது கடல்களின் மின்சக்தி ஆலைகளை நிறுவலாம். மின்சக்தி ஆலைகள் நிறுவப்படும் கடல்களில் பின்வரும் இயல்புகள் காணப்பட வேண்

டும். கடலின் மேற்பரப்பு நீர் எப்போதும் 24°C க்கு குறைவானதாக இருக்கக்கூடாது. எப்போதும் கடல் நீரானது 3000 அடிக்குக்கீழ் 6°C ஆகவும் குளிரானதாகவும் இருக்கவேண்டும். கடும்புயல் அடிக்கடி கடலில் வீசக்கூடாது. வெப்ப மேற்பரப்பும் குளிர் ஆழநீரும் உள்ள வேறுபாட்டு இயல்பு கடற்கரையில் இருந்து ஐந்து மைல்களுக்குள்ளாவது இருக்கவேண்டும். நம் நாட்டில மேற்கூறப்பட்ட இயல்புகள் திருகோணமலைக் கடலிலும், மட்டக்கிளப்புக்கடலிலும் காணப்படுகின்றன. இங்கு கடல் ஆழத்துக் குளிர்நீர் சில மைல் தொலைவிலே பெறக்கூடியதாய் இருக்கிறது என ஆராய்ச்சி அறிக்கைகள் கூறுகின்றன. எனவே இங்கு தெளிவான வேறுபாடுடைய இரு வெப்ப அளவுகள் கொண்ட நீர்ப்படைகளைக் காணக்கூடியதாய் இருக்கிறது. உலகிலேயே திருகோணமலைக்கடலில்தான் மிகக்கூடிய வெப்பப்படித்திறன் கரையில் இருந்து இரண்டு மைல் தூரத்திற்குள், 6000 அடி ஆழத்தில் இருக்கிறது எனக் கூறப்படுகிறது. மின்சக்தியைத் தயாரிப்பதற்கான ஒழுங்கு பின்வருமாறு; குளிர்நீரை கீழ் இருந்து மேல் இறைக்கும் பொழுது கடலின் மேற்பரப்பில் உள்ள சூடான நீர் ஆவியாக்கப்படும். இது குளிர்சாதனப்பெட்டியில் உள்ள வாயுவின் இயல்பை உடையது. இத்தகைய ஆவியாதலின் மூலம் அமுக்கம் உருவாக்கப்படும். அமுக்கத்தில் இருக்கும் இந்த வாயு மின் ஆலைச் சுழற்சியின் சுழற்சியை ஏற்படுத்தும். சுழற்றி ஜெனரேட்டரை இயக்க ஜெனரேட்டர் மின்சாரத்தைத்தரும். வெளியேறும் வாயு ஒடுக்கப்பட்டு, கருவிராக்கி நீராக்கப்படுகின்றது. இந்தமுறை பூரண வெற்றியளிப்பதற்குக் காரணமாய் இருப்பது, வெப்பநிலை வித்தியாசமே. எவ்வளவுக்கு எவ்வளவு வெப்பநிலை வித்தியாசம் கூடுகின்றதோ அவ்வளவுக்கு உருவாக்கப்படும் சக்தியின் அளவும் கூடும.

எமக்குத் தேவையான இன்னொரு மாற்று உற்பத்திஸ்தான சக்தியானது உயிர்ப்பொருட்களில் இருந்து பெறப்படும் வாயு அல்லது உயிர்வாயுவாகும். தற்போது இந்த உயிர்வாயுவே தென் ஆசியாவிலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் மிகப்பரவலாகப் பாவிக்கப்படுகின்றது. இந்த உயிர் வாயுவானது மிக விரைவாகத் தீப்பற்றக் கூடியது. இது மீதேனையும், காபனீரொட்சைட்டையும் கொண்ட ஒரு கலவையாகும். இந்த உயிர் வாயுவானது சேதனவுறுப்புப் பொருட்கள் மெதனோபக்றீரியாவினால் அனரோபிக் சொதித்தலின் மூலம் பெறப்படுகின்றது. இந்த பக்றீரியாவானது பொதுவாக நிலத்திலும், நீரிலும், பன்றி, மாடு போன்ற மிருகங்களில இருந்து வெளிவரும் கழிவுப்பொருட்களிலும் காணப்படுகின்றன. வருங்காலத்தில எமது வீட்டுப்பாவனைக்குரிய சக்தியை பெனிஸ்ரம் (Pennisetum) பனிக்சாமி (Pannicum) ஆகிய இருவகைப் புல்லின உயிர்ப் பொருட்களில் இருந்து பெருமளவு பெறலாமென பூர்வாங்க பரீட்சார்த்த சோதனைகள் கூறுகின்றன. வழமையாக உயிர் வாயுவைத் தயாரிப்பதற்கு மாட்டுச்சாணியே உபயோகிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் பொருளாதார ரீதியில் நோக்கும்போது பெருமளவு உயிர்வாயுவைத் தயாரிப்பதற்கு மாட்டுச்சாணியை மாட்டில் இருந்து சேகரிப்பதிலும் பார்க்க பச்சைப் புற்களை அறுவடை செய்து நேரடியாக உயிர்வாயு தயாரிக்கும் கலத்தினுள் இடுவது சுலபம் போல் காணப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது. ஒளித்தொகுப்பு நடைபெறக்கூடிய அல்காவும் ஓர் சிறந்த உயிரியல் சக்தியைத் தரக்கூடியபொருள் எனத் தற்காலக் கண்டுபிடிப்புகள் கூறுகின்றன; இந்த அல்கா வளருவதற்குத் தேவையான சேதனவுறுப்புப் பொருட்களை வீட்டிலிருந்து பெறப்படும் கழிவுப்பொருட்களிலும்' பெரிய தோட்டங்களிலும் இருந்து பெறலாம். மீதேனைப் பெறுவதற்காக இந்த அல்காவானது அனரோபிக் நொதித்தலுக்குள்ளாக்கப்படும். அல்லது விலங்குகளுக்கு நேரடியாக உணவாகக் கொடுக்கப்படும். அல்கா உயிர்ப் பொருளில் இருந்து மீதேன் தயாரித்த பின் வரும் மீதியில் நைதரசனும் பொசுபரசும் காணப்படும். இது விவசாயத்தில் உரமாகப் பாவிப்பதற்கு ஓர் சிறந்த பொருளாகும். ஓர் ஏக்கர் அல்கா உயிர்ப்பொருட்களில் இருந்து பெறப்படும் கழிவுப் பொருள் 10 தொடங்கி 50 ஏக்கர் விவசாய நிலத்

துக்கு உரமாகப் பாவிக்கலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. ஐகோணியா கசிப்பா (Water hyacinth) என்னும் ஓர் வகை நீர்த் தாவரத்தை அனரோபிக் பற்றீரியாகொண்டு ஜீரணிக்கச் செய்தும் உயிர்வாயுவைத் தயாரிக்கலாம், என்பதைக் கண்டுபிடிக்க இந்தியாவிலும், இந்தோனேசியாவிலும் பரீட்சார்த்த முறைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது. இந்தியாவில உள்ள கரியாலு தேசிய கால்நடைப் பரீட்சார்த்த நிலையத்தில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின்படி சிறிது மாட்டுச் சாணிக் கூழ்ப்பொருளும் 5% காய்ந்த ஐக்கோணியா கசிப்பா (Water hyacinth) என்னும் நீர்த்தாவரமும் 55°C யில் 206 லீற்றர் உயிர்வாயுவை ஒரு கில்லோ கிராம் காய்ந்த பொருள் கொடுக்கின்றது. இதே மாதிரியான முடிவுகள் இந்தோனேசிய பட்ஜாட்ஜரான் பல்கலைக் கழகத்திலும் பெறப்பட்டது என அறிக்கைகள் கூறுகின்றன. இங்கு 253 லீற்றர் உயிர்வாயு பெறப்பட்டதாயும் 5% மீத்தேன் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. சீனாவில் மட்டும் 4·7 மிலலியன் உயிர்வாயு தயாரிக்கும் நிலையங்கள் உண்டு.

இலங்கையைப் பொறுத்த மட்டில் அநேக கிராமத்தவர்களும், தோட்டத் தொழிலாளர்களும் சமையல் வெளிச்சம் போன்ற தேவைகளுக்கான சக்தியை மண்ணெண்ணெயிலும், விறகுகளிலும் இருந்தே பெறுகின்றனர். விறகு இப்போது கிடைப்பது கஷ்டமாகவே இருக்கிறது. அத்துடன் மண்ணெண்ணெயும் எமது அரசாங்கத்தால் பாவனையாளருக்கு மான்யமாகவே கொடுக்கப்படுகின்றது. தற்போது கூட்டுத்தாபனம் ஒரு கலன் மண்ணெண்ணெய்க்கு கிட்டத்தட்ட பதின்மூன்று ரூபா நட்டமடைகின்றது. எண்ணெய் விலை கூடிக்கொண்டு செல்வதால் விரைவில் அல்லது காலப்போக்கில் இந்த மான்யம் அகற்றப்படும். இலங்கையைப் பொறுத்தமட்டில தற்போது தான் வேறு பொருட்களில் இருந்து தேவையான சக்தியைப் பெறுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. கிராமப் புறத்திலுள்ள மக்களுக்குத் தேவையான சக்திப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரு பரீட்சார்த்த உயிர்வாயு தயாரிக்கும் நிலையங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. ஒன்று கன்னொருவ மத்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்திலும், மற்றயது தென்பகுதியில் உள்ள பட்டியபொல என்னும் இடத்திலும். பட்டியப்பொல நிலையம் கன்னொருவ நிலையத்தை விட மிகப்பெரிறது. இந்நிலையத்தில் இருந்து பெறப்படும் சக்தி வாயுவாயுவில் இருந்து மட்டும் பெறப்படவில்லை, காற்று, சூரிய ஒளியில் இருந்தும் பெறப்படுகின்றது. கன்னொருவ நிலையத்தில் தயாரிக்கப்படும் உயிர்வாயானது இருபது பேருக்குத் தேவையான உணவைச் சமைப்பதற்குப் போதுமானது. டீசல் எண்ணெயால் இயங்கும் 5 குதிரைப்பரிவலுவுடைய ஓர் நீர் இறைக்கும் இயந்திரமும் இங்கு தயாரிக்கப்படும் உயிர்வாயுவால் இயங்குகின்றது.

பட்டியப்பொல நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரமானது ஒளியைப் பெறுவதற்கும், குடிநீர் இறைப்பதற்கும், நீர்பாய்ச்சுவதற்கும் உபயோகிக்கப்படுகின்றது. இந்நிலையத்தில் சக்தி உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருட்கள் (மாட்டுச் சாணி, காற்று, சூரியஒளி) வருடம் முழுவதும் போதியளவு கிடைக்கின்றது. இங்கு காற்றும் சூரிய ஒளியும் இலவசமாகக் கிடைக்கின்றது. இந்நிலையத்திலுள்ள உயிர்வாயு தயாரிக்கும் கலத்திற்கு கிட்டத்தட்ட இருநூறு மாடுகளில் இருந்து பெறப்படும் சாணம் தேவைப்படுகின்றது. இந்நிலையத்தில் இருக்கும் சூரியக் கலங்களைச் சூடாக்கவும் தேவையான சூரிய ஒளியும், காற்றலைகளை இயக்குவதற்கான காற்றும் ஆண்டு முழுவதும் போதியளவு கிடைக்கின்றது. இவை இரண்டும் குறைவாக இருக்கும் காலத்தில் மின்சாரத்தைப் பெற உயிர்வாயு உபயோகிக்கப்படுகின்றது. இங்கு உள்ள உயிர்வாயு தயாரிக்கும் கலமானது இன்னும் முழுமையாகப் பொருத்தப்பட்டு முடிக்கப்படாமையினால் சிறிதளவு மின்சாரமே உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனால் இவ்வாண்டின் நடுப்பகுதியில் இந்த நிலையம் முற்று முழுதாக இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு உள்ள உயிர்வாயு தயாரிக்கும் கலமானது 20 அடி ஆழமும் 6 அடி உயரமும், இதன் மேல்பாகம் 2½அடி விட்ட

*With The Best Compliments From*

# CeY-NoR

Karainagar

Tel. 804

**BRANCHES:**

- POLGAHAMULLA
- KALPITIYA
- KALKUDAH

**MANUFACTURES OF:**

FISHING BOATS
AND
FISHING NETS

**EXPORTERS OF:**

MARINE
PRODUCTS

மும் உடையது. இங்கு ஒரு நாளைக்கு 3000 க.அடி வாயு அல்லது இதற்குச் சமமான கில்லோவாற்று மணி மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றது. நொதிக்கும் கலத்திலுள் 2000-4000 இருத்தல் சேதனவுறுப்புக் கழிவுப்பொருட்கள் (மாட்டுச்சாணி, சல்வினியா, ஐக்கோணியா கசிப்பா) இடப்படுகின்றது. வாயு உற்பத்தியானவுடன் தலைகீழாக இருக்கும் கலம் மேல் எழும்பும். உற்பத்தி செய்யப்படும் வாயுவானது முழுக்கிராமத்திலும் உள்ள 200 வீடுகளில் வசிக்கும் 1800 பேருக்குத் தேவையான மின்சாரத்தையும் உற்பத்திசெய்கின்றது. அத்துடன் 37·5 கில்லோவாற்று மின்சாரம் உற்பத்தி செய்யும் ஜெனரேட்டரையும் இயக்குகின்றது. இந்த ஜெனரேட்டரானது முன்பு டீசல எஞ்சினையில இயங்கியது. தற்போது இது உயிர் வாயிவினாலும் 20% டீசலினாலும் இயங்குவதற்கு மாற்றப்பட்டிருக்கின்றது. இங்கு பொருத்தப்பட்டிருக்கும் எழுபது சூரியக் கலங்களில் இருந்து இரண்டு கில்லோவாற்று மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்தச் சூரியகலங்களில் 70% இங்கேயே உற்பத்தி செய்யலாம் என ஐக்கிய நாட்டு ஆலோசகர்கள் கலாநிதி ஐ. எச். உஸ்மேனி கூறுகின்றார். இந்த சூரியகலத்தைப் பாவித்து சூரியசக்தியை மின்சக்தியாகவும், பொறிமுறைச் சக்தியாகவும், பற்றரியை மின்ஏற்றுவதற்கும், நீர் இறைப்பதற்கும் வேறு தேவைகளுக்கும் உபயோகிக்கலாம்.

இங்கு பொருத்தப்பட்டிருக்கும் நான்கு காற்றாலைகளும் அவுஸ்திரேலியாவில் உள்ளதைப் போன்றதாகும். இது வழக்கமாக நீர் இறைப்பதற்கும் பயன்படும் காற்றாலை அன்று. இந்த நான்கு காற்றாலைகளின் உச்சிகளிலும் காற்றாடிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இக் காற்றாடிகள் காற்றுச்சக்தியை உபயோகித்து மின்சக்தியை உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர்களாகும். காற்றானது 20-25 மைல்/மணி வேகத்தில் வீசும் போது ஒவ்வொரு காற்றாலையும் 2 கில்லோவாற்று மின்சாரத்தை உற்பத்தி செய்யும். இந்நிலையத்தில் உள்ள சக்தி உற்பத்திப் பொருட்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் ஆனது ஒரு சேமிப்புக் கலத்தினுள் சேமிக்கப்படுகின்றது. இச் சேமிப்புக்கலமானது 150 கிலலோவாற்று சக்தியை சேமிக்கக்கூடியது. மின் உற்பத்தி பகல் வேளையில் அதிகமாக நடைபெறுவதால் சேமிப்பு மிகவும் அவசியமானது. இந்த மின் சேமிப்பானது இரவில் ஒளியைப் பெறப்பயன்படும். காற்று அல்லது சூரியஒளி இல்லாத சமத்திலும் கலத்தில் சேமிக்கப்பட்ட சக்தியைப் பாவிக்கலாம். இந்த மின் சேகரிப்புக் கலமானது நான்கு நாட்களுக்குப் போதுமான மின்சாரத்தை சேகரித்து வைத்திருக்கக் கூடியது. இந்த சேமிபபுக் கலத்தின் காலஎல்லை பத்து வருடங்களாகும். இப்படிச் சிறிய அளவில் தயாரிக்கப்படும் சக்தியானது கிராமப்புறத் தேவைகளை பூர்த்தி செய்வதினால் பாரிய ஜல, வெப்ப சக்தித்திட்டங்கள் நகரத்திற்கும், கைத்தொழிற் பேட்டைகளுக்கும் தேவையான சக்தியை தொடர்ச்சியாகக் கொடுக்கும் அத்துடன் ஜல வெப்பச் சக்தித்திட்டங்களில் இருக்கும் பழுவும் ஓரளவு குறைக்கப்படும். சமீபத்தில் வெளியான நியூ சயன்ரிஸ்ற் பத்திரிகை வளர்ச்சியடையும் நாடுகள் சூரிய சக்தியைப் பெறுவதில் அணுகும் தொழில் நுட்பங்களைப் பற்றி ஓர் எச்சரிக்கையை விடுவித்துள்ளது. அதாவது வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் போதியளவு சூரிய வெளிச்சம் இருந்தபோதிலும், சூரிய சக்தியைப் பெறுவதற்கான உயிர் மாற்றீட்டுப் பரிசோதனைகள் எல்லாம் வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளிலேயே மேற்கொள்ளப்படுகின்றது என்றும்; மூன்றாவது உலக நாடுகளில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் முன்னேறிய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவாகவும் ஆரம்ப நிலையில் இருப்பதாயும் இப்பத்திரிகை கூறுகின்றது. மேலும் இம் மூன்றாவது உலக நாடுகளில் இந்த வேகத்திலேயே தொழில் நுட்பம் முன்னேறுமானால் ஒருபோதும் மேற்கு நாடுகளில் உள்ள சூரிய உற்பத்தியாளர்களுடன் போட்டியிட முடியாது போகும் என்றும்; அவர்கள் உற்பத்தி செய்யும் உபகரணங்களிலேயே தங்கியிருக்க வேண்டும் என்றும் இப்பத்திரிகை கூறுகின்றது. எங்களுடைய சொந்த மூலவளங்களைப் பயன்படுத்தி உயிர் மாற்றீட்டுத் தொழில் நுட்பத்தை முன்னேறச் செய்தாலொழிய வருங்காலம் இருள்மயமானதாகவே இருக்கும்.

பொ. ந. குமாரதேவன்
பிரயோக விஞ்ஞானம் இறுதியாண்டு
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.

சகல விவசாய ரசாயனப் பொருட்களும்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை உரக் கூட்டுத்தாபனம், பெற்ரோலியற் கூட்டுத்தாபனத்தின்
ஏக விநியோகஸ்தர்கள்

**கைதடி கிறைன்டிங் மில்**

கண்டி வீதி,
கைதடி.

---

WITH THE BEST COMPLIMENTS
OF

# HARMONICS LTD.

123, Kumaran Ratnam road,

Colombo-2

# உறைத்திடும் ஓர் நாள்...

உழைத்து இளைத்து ஒரு கூட்டம்
உயர்வின்றித் தவித்திருக்க;
உடல் வருந்தி உழைக்கவெண்ணு
உழைப்பினை உறிஞ்சியருந்தி
உயர்ந்திடும் உத்தமரும்,
உயர்தொனிக் குரலெழுப்பி
உழைப்பின் உயர்வுரைத்து
உலகை அதிரவைக்கும்
உதவாக்கரைக் கூட்டங்களும்,
உயர்குடிக் கோமான்களும்
உண்டு உடுத்து சுகித்துயர;
உத்தமரெம் உழைப்பாளி
உணவும் உறையுளும்
உரிமையும் கிடையாது
உழைத்து இளைத்து உருக்குலைந்து
ஊனமுற்றுப் போகலானல்,
உணர்ந்து அதிர்ந்து
உரிமை பெறக் கிளர்ந்து எழுந்தால்
உயர் சட்டமும் திட்டமும்
உதவாது அப்போது
உலகின் நிலையே மாறுமப்போது
உலுத்தலுத்த முறைமைகள் நீங்கிட
உலகை பொங்க
செங்கதிரொளி வீசிடும்.

A.L.M. ஹுஸைன்
(தொழில் நுட்பம் இலத்திரனியற் பொறியியல்)

....மொறட்டுவைப் பல்கலைக்கழக
தமிழ்ச்சங்கத்தின் சேவைகள்
மேலும் வளர

எமது நல்லாசிகள்

**Kaddaively - Nelliady MPCS LtD.**
**KARAVEDDY.**

G.C.E. (O/L), G.C.E. (A/L) கலை, விஞ்ஞான, வர்த்தக
காலை மாலை வகுப்புகளும்
I.C.M.A., Sect., A&B, CHARTRED PRELLIM வகுப்புகளும்
யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களாலும், விரிவுரையாளர்களாலும் நடாத்தப்படும்.

**யாழ்நகரின் முன்னணி நிறுவனம்**
**The Jaffna Education Centre**

பதிவாளர்,
*22, ராமையா செட்டியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*(சாந்தி தியேட்டர் அருகில்)*

# வடமாகாணத்து வீடு அமைப்பு முறை

மிக அண்மைக்கால வடமாகாண வீடுகளை கருத்தில் கொள்ளும் போது, கருத்துக்களில் தங்களை தாமாகவே வழி நடத்திய மக்களின், திட்டமிடப்படாததும் அதே சமயம் மூட நம்பிக்கைகளுக்கு உட்பட்ட வீடுகளாகவே இருக்கின்றன. இந்த வீடுகளை அமைக்கும் மக்கள் தங்கள் சூழலின் கால நிலைக்கும், சூழலிலேயே கிடைக்கக் கூடிய மூலப் பொருட்களுக்கும், முன் கூட்டியே சிந்தித்து அமைக்ககூடிய திட்டமிடப்பட்ட அமைப்புக்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. எந்த ஒரு நாட்டிலோ அல்லது இடங்களிலோ அமைக்கப்படும் வீடுகளோ அன்றி கட்டடங்களோ முக்கியமான சில காரணிகளில் தங்கியிருக்கின்றன. அவற்றுள் முக்கியத்துவம் பெறுவனவற்றுள் சில:-

1. கட்டடம் கட்டப்பட இருக்கும் சூழலின் தட்ப வெப்ப நிலை மாற்றங்கள்.
2. அச்சூழலிலேயே சுலபமாக கிடைக்கக் கூடிய மூலப் பொருட்கள்.
3. அப்பொருட்களின் வாழ்வுக்காலம்.
4. தொழிலாளர்.

போன்றவையாகும்.

கட்டடச் சூழலின் கால நிலையைக் கருத்தில் கொண்டால் இலங்கையிலேயே அவை இடத்திற்கிடம் மாறுபடுகின்றன. ஒவ்வொரு இடத்தின் காலநிலைக்கேற்றவாறு நாம் வீட்டின் அமைப்பை மேற்கொள்ளல் வேண்டும். மலைநாடுகளில Kandian Roof எனப்படும் கூடிய சாய்வுள்ள கூரை அமைப்பு முறை மழை நீர் இலகுவாக வழிந்தோடுவதற்காக அமைக்கப்படுகின்றது. அதே அமைப்பு முறையை வருடத்தின் பெரும் பகுதி வெப்பம் கூடிய நாட்களாகவும் குறுகியபகுதி கடுமழை கொண்டதாகவும் இருக்கும் வடமாகாணத்தில் கையாள்வது அறிவீனச் செயலாகும். வடமாகாணத்தில் வீடுகளை அமைக்கும் போது பிரதானமாக வெப்பத்தினால் ஏற்படும் பிரச்சனைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

உதாரணமாக பண்டைக் காலத்தில் இருந்து வந்த நாற்சார் வீடுகளும் சிறந்த பெரிய விறாந்தைகளும் வடமாகாணத்திற்கு மிகவும் ஏற்ற ஒரு அமைப்பு முறையாகும். ஆனால் அத்தகைய வீடுகள் துரதிஷ்ட வசமாக பாதுகாப்புக் குறைவு என மக்களால் கருதப்படுகின்றமையால் அருகிக் கொண்டு வருகிறது ஆனால் நாற்சார் வீட்டு நடு முற்றத்தின் மேலே வலைகளை அமைப்பதாலும் கொங்கிறீற்று சட்டங்கள் (Concrete beams) இடைவெளி விட்டு அடுக்குவதன் மூலமும் பாதுகாப்பை பூரணமாக்கலாம். அதே சமயத்தில் நடுப்பகுதியில பூஞ்செடிகளை வளர்ப்பதன் மூலம் அழகையும் காற்றோட்டத்தையும் பெறலாம்.

தற்சமயம் வடமாகாணத்தில் கட்டப்படுகின்ற பெரும்பாலான வீடுகள் தேவைக்கதிகமான அளவில கொங்கிறீற்று (Concr-ete) பாவிக்கப்பட்டு மூடப்பட்ட வடிவங்களாக இருப்பதால் செயற்கைக் காற்றோட்டத்தை நாடவேண்டிய நிர்பந்தத்துக்குள்ளாக்கப் படுகின்றனர். மக்கள் மத்தியில் உள்ள மூட நம்பிக்கையும், இரத்தத்தில் ஊறிவிட்ட சாஸ்திர நம்பிக்கைகளும் இதற்கு ஒரு முக்கிய காரணமாக அமையலாம். சாஸ்திரத்தில் உள்ள சில உண்மைகளை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், சாஸ்திரம்தான் ஒரு வீட்டின் முழு அமைப்பையும் நிர்ணயிக்கின்றது என்ற கருத்து முற்றிலும் தவறானதாகும். மக்களினுடைய சாஸ்திர நம்பிக்கையை காரணமாக வைத்துக் கொண்டு சில சாஸ்திர வீட்டுப்பட வரைஞர்கள் தங்களின் பிழைப்பிற்காக மக்களைத் தவறான வழியில் நடத்திச் செல்கின்றார்கள். சரியாகத் திட்டமிடப்பட்ட ஒரு அமைப்பை ஒருவருக்கு எவ்வளவு தான் தெளிவாக விளங்கப்படுத்தினாலும் அவர் ஏற்றுக் கொள்ளாமல் விடுகின்ற நிலைக்கும், தொடர்ந்து அவர் சாஸ்திரத்தின் மூலம் தன்னைத்தான் திருப்தி செய்துகொள்வதாக நினைக்கின்ற அளவிற்கு வட

பல்சுவை மிகுந்த

✳ ஐஸ்கிறீம் ✳ ஐஸ் சொக்

✳ ஐஸ்பழம் ✳ குளிர்பானங்கள்

✳ கேக்வகைகள்

இவைகளுக்கு வல்வை நகரில்
சிறந்து விளங்குவது

# கிறீம் பரடைஸ்

வல்வைச் சந்தி,
வல்வெட்டித்துறை

---

இலங்கைத் தீவிலுள்ள ஏழைத்தமிழ் மாணவருக்கும்,
பின் தங்கிய பிரதேசத்து தமிழ் மாணவருக்கும்
உதவுமுகமாக இயங்கும் கல்விச்சேவை

- மாணவருக்கு பயன்படக்கூடிய கடந்தகால வினா விடைத் தொகுப்புகள், குறிப்புகள் என்பவற்றை மலிவு விலையில் வெளியிடுதல்.
- அஞ்சல் மூலம் மாணவருக்கு கல்விப்போதனை செய்தல்.
- ஏழை மாணவருக்கு கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தலும், புலமைப் பரிசில்கள் வழங்குதலும்.
- உயர்தர மாணவருக்கான பிரத்தியேக வகுப்புக்களையும், பரீட்சைக்கான விசேட கருத்தரங்குகளையும் நடாத்துதல்

# தமிழ்த் தேசிய கல்விச் சேவை

வல்வெட்டித்துறை.

மாகாண மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர். இப்படியான ஒரு நிலையிலிருந்து வடமாகாண மக்கள் விடுபடும் வரை திட்டமிட்ட அமைப்பு முறையை நடைமுறைக்குக் கொண்டு வருவது மிகவும் கடினமான ஒரு செயலாகும்.

வெப்பத்தினால் ஏற்படும் பிரச்சனையைத் தகுந்த கூரை அமைப்பின் மூலம் பெருமளவு குறைக்கலாம். கூரையினுடைய தன்மை அது அமைக்கப்படும் பொருளில் தங்கியுள்ளது. தட்டை ஓடு (Calicut tiles) அரை வட்ட ஓடு, கிடுகு, அஸ்பஸ்ரஸ் சீற், (Asbe-stos sheet) போன்றவை கூரை அமைப்பிற்குப் பாவிக்கப்படும் பொருளாகும். இவற்றைத் தகுந்த முறையில கையாளுவதன் மூலம் காலநிலைக்கேற்ற தரமான கூரைகளை அமைக்கலாம் மிக மிக முக்கியமாகக் கொங்கிறீற்றுக் கூரை (Flat roof) வடமாகாணத்திற்கு பொருந்தாத ஒன்றாகும். திடீரென ஏற்படும் காலநிலை மாற்றத்தின் காரணமாக கொங்கிறீற்றுக் கூரையில் வெடிப்பு ஏற்படுகிறது. இவ்வெடிப்பினூடாக வளியிலுள்ள நீர்த் திவலைகள் உட்சென்று அங்குள்ள இரும்புக் கம்பிகள் துருப் பிடிக்கின்றது. இதன் காரணமாக கூரையில் மேலும் வெடிப்பு ஏற்பட்டு கூரை கீழே விழக் கூடிய அளவு ஆபத்து ஏற்படலாம். 1955-ம் ஆண்டினை ஒட்டியுள்ள காலகட்டங்களில் வீடுகள் பல இத்தகைய கூரைகளைக் கொண்டனவையாக இருக்கின்றன. அதனால் ஏற்படுகின்ற கஷ்ட நஷ்டங்களை தற்சமயம அவ்வீடுகளில வசிப்பவர்கள் நிச்சயமாக உணர்ந்திருப்பார்கள் என நம்புகிறேன். பொருளாதார்ர ரீதியாக நோக்குமிடத்து தனிய ஓட்டினாலேயே வீடு அமைப்பது செலவு அதிகமானதாகலாம். இலங்கையைப் பொறுத்த வரையில் மரத்தட்டுப்பாட்டின் காரணமாக குறைந்த அளவு மரம் பாவிப்பதே உசிதமானதாகும். அஸ்பஸ்ராஸ் சீற் பாவிப்பதால் தேவைப்படும் மரத்தினளவைக் கட்டுப்படுத்தலாம். ஆனால் அதேசமயம் அங்கு வெப்பத்தினால் உண்டாகும் பிரச்சனை எழுகின்றது அஸ்பஸ்ரஸ் சீற்றின் பீலிகளுக்கிடையே அரைவட்ட ஓடுகளைக் கவிழ்க்கும் போது ஓட்டிற்கும் சீற்றிற்கும் இடையேயான இடைவெளியினூடாக வளியினால் வெப்பம் வெளிக்கடத்தப்படுகின்றது. இம்முறையைப் பின்பற்றுவதன் மூலம், மரத்தினது பாவிப்பை நாம் குறைற்கும் அதே வேளையில் எங்களுக்குத் தேவையான குளிர்ச்சியும் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. அரை வட்ட ஓடுகள் தனியப் பாவிப்பதால் ஏற்படும் சில பிரச்சனைகளையும் தவிர்த்துக் கொள்ளலாம். ஓடு அல்லது அஸ்பஸ்ரஸ் கூரையமைப்பைபுடைய சில பொது இடங்களில் ஓட்டின் உட்பகுதியில கிடுகினால் ஆன ஒரு படை (Ceiling) வேயப்படும் போது அதிகளவு குளிர்ச்சியை நாம் உணரக் கூடியதாயிருக்கும். யாழ், இத்துக்கல ஊரியில் இவ்வமைப்பு முறையை நாம் காணலாம். இப்படிப் பாவிக்கப்படும் கிடுகு நேரடியான வெய்யில், மழை என்பவற்றின் தாக்கத்தில் இருந்து தவிர்க்கப்படுவதால் ஏறத்தாள முப்பது ஆண்டுகளுக்கு பழுதடையாமல் இருக்கின்றது. இவ்வாறு இயற்கை வளங்களைத் தகுந்த முறையில் பிரயோகிக்கும் போது அவற்றின் வாழ் நாள் கூடுகின்றது.

இயற்கை வளங்களை மூலமாகக்கொண்டு அமைக்கப்படுகின்ற மிகவும் அழகான காலநிலைகளோடு ஒத்துப் போகின்ற சிறிய மண் வீடுகள் இன்றும் எங்கள் கிராமப்புறங்களில் காணக் கூடியதாயிருக்கிறது. இவ்வியற்கை வளங்களைக் கொண்ட வீடுகளின் வாழ்நாள் குறைவாக இருந்த போதிலும் அவற்றில் அனுபவிக்கக் கூடிய சுகங்களும் சுகாதார நலன்களும் தற்சமயம் அமைக்கப்படுகின்ற கொங்கிறீற்று வீடுகளில் அனுபவிக்க முடிவதில்லை. மண்வீடுகளில் மட்டுமே குளிர் காலத்தில் உஷ்ணத்தையும், வெயில் காலத்தில குளிரையும் அனுபவிக்கமுடியும்.

தவறான நம்பிக்கைகளும், திட்டமிடாத அமைப்பு முறைகளும், இயற்கை வளங்களின் புறக்கணிப்பும், சாஸ்திரத்தின் அளவுக்கதிகமான தலையீடும் இருக்கும்வரை வடமாகாண வீடு அமைப்பு முறையில் திருப்திகரமான மாற்றம ஏற்படாது. இவர்கள் சுயமாகச் சிந்தித்துச் சரியான அமைப்பு முறைகளை ஏற்கும் வரை நல்ல தரமான வீடுகள் தோன்றாது.

சி. குணசிங்கம்
கட்டடக்கலை, இறுதியாண்டு,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.

COURTESY! COMFORT!!
CONVENIENCE!!!

**VISIT**

# Subhas Tourist Hotels LTD.

15, VICTORIA ROAD,
JAFFNA.

phone:- **7228**

Facilities: ROOMS with ATTACHED BATHS, BAR
RESTAURANT, ROOM SERVICE,
CAR RENTALS

**Ceylonese and Western Cuisine**

---

## நகரத்தின் சிறப்புக்கு
## சைவ ஹோட்டல்

* அறுசுவை உணவு
* தரம்மிகு குளிர்பானங்கள்
* வெளிநாட்டு பட்டர் & மாஜரின் ஏகவினியோகஸ்தர்கள்
* தமிழனுக்கு தொண்டு செய்யும் அபிமான பத்திரிகை வீரகேசரி, மித்திரன் ஏக வினியோகஸ்தர்கள்

இவை அனைத்தையும்விட அன்பான உபசரிப்பு-
இன்றே விஜயம் செய்யுங்கள்

# நியூ சுத்தானந்த பவன்

பஜார் வீதி,
வவுனியா.

தொலைபேசி:- 395
தந்தி:- சுத்தம்

*With Best Compliments*

*Of*

# PL. SV. SEVUGAN CHETTIAR

No: 140, ARMOUR STREET,
COLOMBO-12

Dealers in

* TIMBER
* CHIP BOARD
* PLY WOOD
* WALL PANELLING
* PLYWOOD DOORS

Etc.

T.grams: **"WISDOM"**

☎ **24629**

WITH BEST WISHES

FROM

# ESWAR CORPORATION

18, Stanley Road,
JAFFNA.

---

*WITH THE BEST COMPLIMENTS OF*

# CARGILLS (CEYLON) LTD.

P. O. Box: 23
York Street,
COLOMBO.

**BRANCHES:**
KANDY
Nuwaraeliya.
Bandarawela.

# சமதர்மமும் சமூகதர்மமும்

உண்மையை ரசிக்கமுடியாது. ஆனால், அதனுடன் கலக்கலாம். உலகம் உண்மையை எதிர்கொள்ள அஞ்சுகிறது எனக் காந்தியடிகள் குறிப்பிட்டார். நான் நினைக்கிறேன்; உண்மையை அணுகும் மனோபாவம் இன்னமும் உலகிற்குக் கிடைக்கவில்லையோ! எதையும் புறத் தோற்றத்தினூடு பார்க்கப் பழகிக்கொண்ட இவ்வுலகம், சமுதாயத்தை வெறும் உடையினூடும், அந்தஸ்தினூடும், சாதிகளினூடும் பார்க்க முயலகிறது. காலத்தோடு சார்புடைய சுய மகிழ்ச்சியையும், இன்ப துன்பத்தையும் தன் அகத்திலே உருவாக்கிச் சமூக தர்மத்திற்கு உட்படாமல் தாறுமாறாக அலைகிறது. 'இஸ' வெறி, மத வெறி, நாகரிகப் போர்வை என்பவைகளால் மனவக்கிரம் அடைந்து உளவியலாளரின் ஆராய்ச்சிக்குட்பட்டிருக்கிறது.

'நான்', 'எனது' என்ற எல்லைக்குள் தன்னை நிலைநிறுத்திப் பார்க்கையில், சுய தர்மம் குறுகிக்கொண்டே போகிறது. உண்மையை உணர்ந்தவருக்கு நடைமுறைச் சிக்கலினால் ஏற்படும் தாக்கங்கள், 'நான்' என்ற அகந்தையை உருவாக்கமுடியாது. சமூக அவலங்களுக்கு எதிராகப் போராடும் மனோபாவம், உண்மையை அணுகும் ஆரம்பப் படியே. இச் சுயநலக் கலப்பற்ற போராட்ட உணர்வு தெய்வீகமானது; சாத்தியமானது.

மனித உணர்வின் நியாயமான பகுதிகளைக் கௌரவிக்க வேண்டுமென்ற நல்ல தன்மை மனிதனை விட்டு வெகுதூரம் விலகிச் செல்லும்போதே அடியிற் தேங்கிக் கிடந்த மிருக உணர்வு அவனை ஆக்கிரமிக்கிறது. தொழிலாளியை நசுக்கும் முதலாளியின் அடக்குமுறையை விட மோசமான, மிருகத்தனமான ஆக்கிரமிப்பை — மனவக்கிரிப்பை — வீட்டுரிமையாளர், வேலைக்காரச் சிறுவர் விவகாரத்தில் பல பரிமாணங்களினூடு வெளிப்படுத்துவதைக் காணலாம்.



தனக்கும்' தன் குடும்பத்துக்குமுள்ள உறவு சமுதாய சட்ட திட்டத்தை விட, உயர்ந்ததொரு தர்மத்தால் பிணைக்கப்பட்டிருப்பதாக எண்ணி, தனி மனித மதிப்பீடுகளையும், தனி மனிதனுக்கும், சமூகத் தர்மத்திற்கும் இடையேயுள்ள பிணைப்புகளையும் சீர்குலைக்க முயலுகிறான்.

'இன்னொரு சாரார்' 'என்னைப் பொறுத்தவரையில் இதுதான் சரி' என்ற தோரணையில் இரு தர்மங்களையும் மறுத்துத் தம் அக உணர்வுகளுக்குப் போலித் தன்மையளித்து உண்மைமை மறுதலிக்க முயலுகிறார்கள். தன் சுயதர்மத்தையே மலினப்படுத்துகிறார்கள். சாதிக் கொடுமை அகற்றல், சீதன ஒழிப்பு, மகளிர் சமத்துவம் என்றெல்லாம் வாய்கிழிய மேடையில் வீரம் பேசி, தாமே சமுதாய தர்மத்தின் பிரதிநிதிகளென்று தம்பட்டமடிப்போர், தமது குடும்ப உறவுக்கு இவையெல்லாம் வேண்டாத விடயமாகக் கருதுகிறார்கள்.

இறந்தகால மனித மதிப்பீடுகளின் நிகழ்காலப் பிரதிநிதிகளே இவர்கள். குடும்ப நெறிகளைக் கொச்சைப்படுத்திய ஆன்ம சோரம்போன இவர்கள் தான்; பெண்ணைத் தனது இனிய பாதியாக ஏற்காமல் இரட்டை வாழ்க்கை வாழ்கிறார்கள். கற்புக்கரசிகள் கண்ணகிகள் என்ற போர்வையில், பெண்ணின் சுயமரியாதையை — ஆன்ம சுதந்திரத்தை ஏற்க மறுக்கிறார்கள்.

குடும்ப நெறிமுறைகளைப் பொறுத்தவரை பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொண்டாலும், சமூக நெறிமுறைகளைப் பொறுத்தவரை அலட்சியமாகவும், நம்மோடு சம்பந்தமில்லாத விடயம் என்றும் புறக்கணிக்கின்றோம். ஒரு காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட தாசி முறை தற்போது மறுக்கப்பட்டுச் சமூக நியாயமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆதலால் சமூக நியாயங்கள் மாற்

றப்படக்கூடியவை என்பது புலனாகிறது. இன்னமும் ஐம்பது ஆண்டுகளைக் கடந்த சமூக நியாயங்களை, குடும்ப நியாயங்களாக ஏற்றுக்கொண்டு நிகழ்கால வளர்ச்சியைத் தடைசெய்கிறார்கள்.

தனி மனித ஆத்ம சுதந்திரத்தை அங்கீகரிக்க மறுக்கும் சமூகமானது — ஒரு சிறு குழுவினால் — தேசியப் பண்பாடென்றும், சமூகக் கலாச்சாரமென்றும் எதை யெதையோ புலம்பித் தனிமனித சித்தத்தின் அக உணர்வைச் சீரழிக்கின்றது.

பொருளாதார சமத்துவம் ஏற்படின் தனி மனித ஆத்ம உணர்வுகள் மேன்மையுறும் என்பது மார்க்ஸியவாதிகளின் எடுகோள். சுதந்திரச் சிந்தனையை வரவேற்க மறுக்கும் எதுவுமே தனி மனித ஆத்ம சுதந்திரத்தைக் குலைத்துவிடும். எமக்கு முன்னுள்ள சமுதாயத்தின் தொடர்ச்சியான நிகழ்கால 'நாம்' எதிர்காலச் சமுதாயத்தின் வேகமான வளர்ச்சிக்கு வித்திட்டுக் கொண்டுதான் இருக்கிறது. இயற்கையின் பிடியிலிருந்து விடுபட எத்தனிக்கும் மனித உணர்வு — பிரபஞ்சத்தை நோக்கியிருக்கும் விடுதலை உணர்வு — ரஷ்யாவிலென்ன, சீனாவிலும் எதிரொலித்துக் கொண்டுதானிருக்கிறது.

கம்யூனிஸம் வெறும் மனிதாபிமானத்திற்கு உட்பட்டது. அதன் அடிப்படையே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தான் என்றால் நாம் இன்னமும் மேலே செல்ல வேண்டுமென்ற நோக்கம் தாகமாகிறது. சமுதாயக் கொடுமைகளைக் கண்டு துடிப்பதும், அதற்கு வேறொரு சர்வாதிகாரம் தான் தேவையானது என்ற கொச்சையான கருத்து, நமக்கும் அந்தக் கருத்துக்குமிடையே ஒரு இடைவெளி இருப்பதை உணர்விக்கிறது. அடிப்படைச் சமூக தர்மத்தை, தனிமனித தர்மத்தைப் புறக்கணித்துக் கருத்துக்களை வலிந்து புகுத்தும் ஒரு அவசர மன ஓட்டத்தையே பெரும்பான்மையான தோழர்களிடையே அவதானிக்கக் கூடியதாயிருக்கிறதல்லவா?

எப்பொழுதும் நமக்கும் இயற்கைக்குமிடையே ஒரு இடைவெளி இருந்துகொண்டே இருக்கும். விஞ்ஞான வளர்ச்சியானது இதைக் குறுகச் செய்துகொண்டே இருக்கும்.

சமுதாய மக்களிடையே உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு இன்னும் எத்தனையோ விடயங்கள் தனி மனிதரிடையே இருக்கும் ஆக்கிரமிப்புத் தன்மைகள், சுதந்திரச் சிந்தனையை வரவேற்கத் திராணியற்றிருத்தல் என்பன நீக்கப்படல்வேண்டும்.

மனிதரிடையே இழையோடியிருக்கும் நுண்ணிய பலம்பொருந்திய ஆத்மீக உணர்வுகளைத் தட்டியெழுப்பச் சகல தோழர்களும் தமது புரட்சிகர, சமுதாய மாற்றத்திற்கான பயணத்தோடு இதையும் ஆழ்ந்து சிந்தித்துச் செயல்படட்டும். 'கடமையைச் செய்; பணியை எதிர்பாராதே' என்றே 'பிறருக்காக நாம்' என்றே இருக்கட்டும். தமது பணி, ஒரு பரிபூரண சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதே.

தோழர்களே! ஒரு சமதர்ம சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அறிவோடும், உழைப்போடும், இன்னும் ஏதோ ஒன்று அவசியமானதாக இருக்கிறதல்லவா!!

**தா. நவநீதன்.**

# பிரபஞ்சமே நீதான்!

அழகுரதம் மீதினிலே........ ஆடி வர, ஆடி வர
அண்ட புவனங்களசையும்
அகிலாண்ட திருமேனி, ஆடி வர, ஆடி வர
அவனியிலே மாரி பொழியும்.
பழகு தமிழ் நூருகிப் பாட்டுவரப், பாட்டுவர
பக்திநிலை முத்தி வழியும்.
பனிமலையில் அம்மனது பஞ்சரதம் ஓடிவர
பஞ்சநிலை இங்கு மறையும்.
கழுகுமனம் கொண்டவரும் காமாட்சி உன்வதனம்
கண்டு விடக் கருணை சொரியும்.
கஞ்சமலர் உன்னடிகள், தஞ்சமென வந்துவிட
கண்டவினை அன்று தொலையும்.
அழகுரதம் மீதினிலே அம்மையுமையானவளே
அப்பனுடன் ஆடி வருமாய்.
அந்தரிக்கும் எங்களது இந்தநிலை மாறிவிட
அம்பிகையே ஓடி வருவாய்.

— புதுவை இரத்தினதுரை

WORLD FAMOUS **MOMOI HI. TEST BRAND**

என்னும் **JAPAN COMPANY** இல் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட

வலைகள், நூல்கள் கம்பாகம் யாவனவும்
விற்பனைக்கு உண்டு

# A.S. VISHNUSUNDARAM & SONS

FISH CATCHERS, ICED FISH & DRY FISH MERCHANTS

## அ.சி. விஷ்ணுசுந்தரம் அன் சன்ஸ்

மீன்பிடிப்பாளர், உலர்ந்த மீன், குளிருட்டிய மீன் வியாபாரிகள்

**65, JAFFNA ROAD**
**VALVETTITURAI**

**Phone: 08&34**

**Grams: SITTAMPALAM**

## நமக்குத் தேவை!

## நாட்டின் அபிவிருத்தி!

சோறு வேண்டாம் சொகுசு வேண்டாம்
    சொந்தமாக எதுவும் வேண்டாம்
உரிமை பெருமை உயர்வு வேண்டாம்
    உயிரே கூட எமக்கு வேண்டாம்
வறுமை வெறுமை வந்த போதும்
    லாயை திறக்கும் உரிமை வேண்டாம்
வேறு எதுவும் வேண்டாம் எமக்கு
    வேலை கூலி உயர்வும் வேண்டாம்

பஞ்சம் பட்டினி வீட்டில் வந்து
    பசியால் குழந்தை பதறும் போது
நெஞ்சில் பாலோ சுரக்க முடியா
    நேச மனைவி கெஞ்சும் போது
அஞ்சு சதமும் கொடுக்க இயலா
    அவல நிலையில் இருந்த போதும்
பஞ்சம் பசி என்று சொல்லி
    பாவம் நாங்கள் செய்யமாட்டோம்

வயலை அறியா வகையில் வளர்ந்த
    பெரிய தரகு முத ாளிகளாம்
அயலில் உள்ள அவர்கள் வீட்டில்
    அஞ்சு வகையில் சோறு இருக்க
வயலில் நெல்லு விதைத்த எங்கள்
    வாயில் சோறு கிடையா வேளை
சுயமை என்றே கத்தி அவர்கள்
    கடும்நித் திரையை கலைக்க மாட்டோம்

அன்பளிப்பு

தங்க நகை மாளிகை

உரும்பராய்.

உரிமையாளர்

க. ச. கந்தையா

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்
தமிழ்ச்சங்கத்தின் பணிகள் வளர

எமது நல்வாழ்த்துககள்

உங்கள் சகலவிதமான படப்பிடிப்புத்
தேவைகளுக்கும்
நாடுங்கள்

ஈஸ்வரன் ஸ்ருடியோ

திருகோணமலையின்
சிறந்த படப்பிடிப்பாளர்கள்

5, பிரதான வீதி,
திருகோணமலை.

சிறந்த

அழகிய வேலைப்பாடுடன்
நீண்ட பாவனையுடைய வீட்டுத் தளபாடங்களுக்கு

கண்ணகி மரக்காலை

64 - 66, முகாந்திரம் தர்மலிங்கம் ரோட்,

வவுனியா.

அடுக்கு மாளிகை அபிவிருத்திக்கே
ROUND ABOUT உம் அபிவிருத்திக்கே
அடுக்கடுக்காய் வீதியில் கார்கள்
அதுவும் நாட்டின் அபிவிருத்திக்கே
விருந்து வேடிக்கை விளையாட்டெல்லாம்
வேண்டும் நாட்டு அபிவிருத்திக்கே
வளரும் இந்த நாட்டில் நாங்கள்
வறுமை என்று சொல்லலாமோ!

அந்நியன் நமது தேசத்திலே
ஆனந்தமாக களிப்பதற்கு
விண்ணை முட்டும் மாளிகைகள்
விரைவாய் எழும்பும் வேளையிலே
கண்ணை பறிக்கும் வண்ணங்களில்
கார்கள் வீதியில் பறக்கையிலே
எண்ணை இல்லை நீர் இறைக்க
என்று நாங்கள் ஏங்கலாமோ

தெள்ளிய நீலத் திரையினிலே
தெளிவான வெள்ளை முகில் கீற்று
மெல்லெனத் தெரியும் வேளையிலே
மேவிடும் உண்மை ஈட்டிகளாய்
நல்லவர் உள்ளத்தின் ஊடாக
நாறிடும் சமூகத்து நீதிதன்னை
கொன்றொரு உலகை பிரசவிக்க
கொள்கையை நமக்கு கொடுத்துவக்கும்

— காலேக் கவிஞன்

அன்பளிப்பு

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்
தமிழ்ச் சங்கத்திற்கு
எமது மனமுவந்த
அன்பளிப்பு

சிவம் இண்டஸ்றி

கைதடி சந்தி,

கைதடி.

நியூ விக்ரேஸ்
றெக்கோடிங் (B) பார்

23, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 7804

நகரிலே
தரமான ஹோட்டல்
இன்றே
விஜயம் செய்து பாருங்கள்

ஆடர் நகைகள்
உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்
ஒருமுறை விஜயம் செய்தால்
உண்மை விளங்கும்

திறீ கொயின்ஸ்
ஹோட்டல்

73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 8077

ச. தங்கராசா
யுவலறி மாட்

நகை வியாபாரமும்
நகை உற்பத்தியாளர்களும்

மார்கட் லேன்,
உடுப்பிட்டி.

# ஜனநாயகமும் இஸ்லாமும்.

**தட்:** இன்றைய பரந்துபட்ட உலக முஸ்லிம் நாடுகளில் ஜனநாயகம் மங்கிக் காணப்படுவதைப் பார்க்கும் பொழுது இஸ்லாமிய அரசியற் சிந்தனை ஜனநாயகத்தை மறுக்கின்றதா என எனக்கொரு ஐயப்பாடு எழுகின்றது.

**ரஹ்:** இஸ்லாம் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசியற் கோட்பாட்டை அளிக்கின்றது. முகம்மது நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் 1400 ஆண்டுகளுக்கு முன் உலகத்தின் முதலாவது இஸ்லாமியக் குடியரசை அமைத்தார்கள்

**தட்:** இந்த இஸ்லாமியக் குடியரசு ஒரு குடியரசாக அமைந்ததா அல்லது ஒரு எதேச்சதிகார அரசாக அமைந்ததா என்பதே என் சந்தேகம்.

**ரஹ்:** மக்காவை விட்டு நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்குச் சென்றபோது அங்குள்ள மக்கள் அவரை குதூகலமாக வரவேற்று ஏகோபித்த மனதுடன் அவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டனர்.

**தட்:** ஜனநாயகத்தில் கருத்துச் சுதந்திரம், அரசியற் சுதந்திரம் என்பன பேணப்படல் வேண்டும். இந்த விதத்தில் இஸ்லாமியக் குடியரசு சிறந்து விளங்கியதா?

**ரஹ்:** நபி (ஸல்) அவர்களைப் பார்த்து அல்லாஹ் சொல்கின்றான், 'நபியே மக்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டு அவர்களுடன் கலந்துரையாடி நீர் ஆட்சி பரிபாலிப்பீராகுக'' (குர்ஆன் 3:159). இதுதான் ஜனநாயத்தின் ஆணிவேர். சுதந்திரங்கள் எல்லாம் இதன் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன ஒழுக்கக்கட்டுப்பாடு, உலக வாழ்க்கையில் செய்ய வேண்டியவை - செய்யக்கூடாதவை, எதை உண்ணக் கூடாது, எதை உண்ணலாம் என்பது பற்றியெல்லாம் கட்டளையிடும் இறைவன், அரசியலைப் பொறுத்தவரையில் மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்டு ஆட்சி புரியும்படி கூறியுள்ளான். உலக ஜனநாயகத்தின் அடிப்படையே இதுதான்.

**தட்:** அரசியல் தவிர்ந்த மற்றைய விடயங்களில் குர்ஆன் திட்டவட்டமாகக் கட்டளையிடுகின்றதெனவும், அரசியலைப் பொறுத்தவரையில் அப்படியல்ல எனவும் நீங்கள் கருதுகிறீர்களா?

**ரஹ்:** அப்படிக் கருத முடியாது. அரசியலமைப்பு கலந்தாலோசித்தலின் மூலம்- மக்கள் அபைப்பாக- மக்களாலேயே உருவாக்கப்பட வேண்டும் என்றும் அது குர்ஆனுடைய சட்ட திட்டங்களுக்கமைவாக இருக்க வேண்டுமென்றும் கருத்துக் கொள்ளலாம்.

**தட்:** குர்ஆனை மருவித்தான் அரசியலைச் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனை- அதாவது அரசியற் சுதந்திரம் குர் ஆனுக்குள் அமைய வேண்டுமென்பது ஒரு பூரண அரசியற் சுதந்திரத்தை மறுக்கின்றது. ஜனநாயகம் இஸ்லாமிய உலகில் செழித்து வளராததிற்கு கட்டுப்படுத்தப்பட்ட அரசியற்

சுதந்திரம் ஒரு காரணமென நான் கருதுகிறேன்.

மற்றைய பாராளுமன்றங்களைப் பொறுத்தவரையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் சட்டங்கள் ஆக்கப்படுகின்றன. இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் சட்டம் குர்ஆனால் ஆக்கப்பட்டிருக்கின்றது. இதனால் மக்களுக்குப் பொறுப்பில்லாமல் - அவர்களுடைய சுயசிந்தனை கட்டுப்படுத்தப்படுகின்றது.

ரஹ்: அப்படியல்ல தவறு செய்து பிழையான வழியில் செல்லாமலிருப்பதற்கான அடிப்படை அம்சங்களைக் குர்ஆன் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. விரிவான தேவைகளுக்கு - கால தேச வர்த்தமானங்களுக்கமைய - குர்ஆனுடைய அடிப்படையிலே ஆராய்ச்சி செய்து, சட்டங்களை இயற்றுவதற்கு இஸ்லாமிய அரசியலமைப்பில் எந்தவிதமான தடையுமில்லை. இறைமை இறைவனுக்குத்தான் உரியதென்பதை நாங்கள் - முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்கிறோம், அதேபோல் சரியான வழிகாட்டுதல் இறைவனிடமிருந்துதான் மனிதனுக்குக் கிடைக்கிறதெனவும் நாங்கள் நம்புகிறோம்.

தட்: ஆனால் பொறுப்புக் கொடுக்காமல் பொறுப்புள்ள மனிதரை உருவாக்க முடியாது. நிச்சயமாக குர்ஆன் வழிகாட்ட வேண்டுமேயல்லாமல் சட்டங்கள் மக்களாலேயே ஆக்கப்பட வேண்டும் என்கிறது தான் ஜனநாயகத்திற்கு இட்டுச் செல்லக்கூடிய விடயம். அதாவது சட்டத்தை உருவாக்கும் உரிமையை மக்களால தெரிவு செய்யப்பட்ட சபைக்கு கொடுக்காத பட்சத்தில் - இறைவனால் கொடுக்கப்பட்ட ஒன்றாக இருக்கும் கட்டத்தில் அது பிரச்சினையாகின்றதல்லவா?

ரஹ்: உண்மையிலேயே இஸ்லாம் இறைவனுடைய சட்டத்தை அமுலாக்கும் ஒரு சந்தர்ப்பத்தைத்தான் மக்களுக்கு கொடுக்கின்றது. ஆனால் சில வரையறைகளுக்குட்பட்டு - குர்ஆனுக்கு மாறுபடாமல் சட்டம் ஆக்குவதற்குத் தடையில்லை. பெரும்பான்மை நினைத்த மாதிரி சட்டத்தை ஆக்கலாம் என்பதற்கு இஸ்லாத்தில் இடமேயில்லை.

தட்: அந்த வரையறைகளை எவ்வளவிற்கு நாம் குறைக்கிறோமோ அவ்வளவிற்கு மக்கள் பொறுப்புள்ளவர்களாக மாறுவார்கள் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

ரஹ்: எவ்வளவிற்கு வரையறைகளைக் குறைக்கிறோமோ அவ்வளவிற்கு மக்கள் தவறான வழியில் போய்விடுவார்கள் என்பது தான் உண்மை.

தட்: அப்படியானால் மக்களை நீங்கள் நம்புகிறீர்களில்லை.

ரஹ்: மக்களை நம்புவதல்ல பிரச்சினை. மக்களுடைய அறிவு எல்லைக்குட்பட்டது; இறைவனுடைய அறிவு பரிபூரணமானது. ஒரு குழந்தையினுடைய அறிவைவிட அதன் தந்தையினுடைய அறிவு பரந்துபட்டது. எனவே பிள்ளை தவறான வழியிலே வீழ்ந்து மீள முடியாத அழிவிற்குப் போய் விடாமலிருப்பதற்காக தந்தை பின்வருமாறு அறிவுறுத்துகின்றார். அந்த எல்லையிலே நீரோடை இருக்கின்றது; அது ஆழமானது; அந்த நீரோடையில் வீழ்ந்தால் நீ மீளமுடியாது...

தட்: அப்படிச் சொல்லுங்கள். நீரோடையில் விழுதல் பிழை என்று சொல்லுங்கள். ஆனால் நீரோடையில் விழாதே என்று சொல்லும்போது பிரச்சனையாகின்றது. அதாவது தனி மனிதனுக்குத் நிர்மாணிக்கும் உரிமையைக் கொடுங்கள் என்று சொல்கிறேன். தெய்வீக அறிவை மக்களுக்குக் கொடுத்துச் சட்டம் இயற்றும் பொறுப்பை மக்களிடமே கொடுக்கக் குர்ஆன் அனுமதிக்காதா?

ரஷ்: நீரோடையிலே விழுவது பிழை என்று மட்டும் சொல்லி, விழவேண்டாமென்று கட்டளையிடாவிட்டால் குழந்தை நீரோடையில் விழுந்து மீள முடியாமல் அழிந்துவிடும். குர் ஆனிலே சொல்லப்பட்ட அடிப்படை உண்மைகள், நபி (ஸல்) அவர்களுடைய போதனைகள், அன்னாரின் தோழர்களின் போதனைகள் இல்லாதவிடத்து உங்கள் சொந்த அறிவைப் பயன்படுத்தி முடிவை எடுங்கள் என்றுதான் சொல்லப்படுகின்றது. குர் ஆனின் வரையறைக்குட்பட்டுச் சட்டதிட்டங்கள் ஆக்கும முறைக்கு நபியவர்கள் ஒரு கருவூலமாக இருந்திருக்கின்றார்கள். "பல தரப்பட்ட அபிப்பிராயங்கள் தலைவர்கள் மத்தியில் நிலவுவது எனது சமூகத்தின் அருட் கொடையாகும்" என நபி (ஸல்) அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பல விதமான கருத்துக்களும், அபிப்பிராயங்களும், அரசியல், சமூக மற்றும் துறைகளில் அலசப்பட்டு ஆதாரங்களுடன் நிரூபிக்கப்படுவதுதான் இஸ்லாத்தின் அடிப்படை. துரதிஷ்டவசமாக அரசியலில் இது சரியான முறையில் பின்பற்றப்படவில்லை. வர்க்க சுயநலமுடைய சக்திகள், குடும்ப ஆதிக்கத்தையும், சொந்த ஆட்சி முறையையும் அமைத்து மனிதரைச் சுரண்டும் நோக்கத்தோடு இஸ்லாத்தின் அடிப்படைத் தத்துவத்திற்கு மாறாகச் செயற்பட்டதே இதற்குக் காரணமாகும்.

தட்: ஒரே சமுதாய ஜனநாயகக் கோட்பாட்டுக்குள் நின்று இரு வழிகளைக் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பம் இருத்தலே - ஜனநாயகம். குர் ஆனை ஒரு நிரந்தர வாக்காக ஏற்று குர் ஆனை மையமாக வைத்து ஒரு பிரச்சனையைச் சிந்திக்கையில் இரு பெரிய வழிகள் பிறக்கவேண்டும். ஒரு வழியை ஒரு கட்சியும், மற்ற வழியை மற்றக் கட்சியும் ஆதரிக்கவேண்டும். அவற்றுக்கிடையேயுள்ள போட்டி ஒன்றை ஒன்று அழிக்கும் அளவுக்குச் செல்லக்கூடாது. இது இஸ்லாத்தில் சாத்தியமானதா?

ரஷ்: நபியவர்கள் மக்காவைக் கைப்பற்றி அங்கு ஆட்சியமைத்து ஏக அரேபிய தேசமனைத்துக்கும் அதிபதியானபோது, அவரைக் கொலைசெய்ய முயற்சித்த பல புரட்சித் தலைவர்கள் ஒழிந்து வாழத் தலைப்பட்டார்கள். ஆனால் நபியவர்கள் அவர்களை மன்னித்துத் தன்னுடைய அரசியலமைப்பிற்குள் இடம்பெறச் செய்தார்கள். எதிர்க்கட்சியையும் எதிர்ப்பையும் ஒழிக்கக்கூடாது என்பதற்கு இதுவே அடிப்படையாகும்.

தட்; முகம்மது நபி (ஸல்) அவர்கள் அரசியற் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது மிகப் பெரிய சிந்தனையாளராக, பண்பாளராக இருந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு சாதாரண மனிதன் அரசியற் பொறுப்பை ஏற்கும்பொழுது உருவாகும் பிரச்சனைதான் மிக முக்கியமானது.

லெனின் இருந்தபோது ரஷ்யாவில் எந்தவிதமான பிரச்சினையும் எழவில்லை. ஐந்து ஆண்டுக் காலம் ரஷ்யாவில் உலகப் புகழ்பெற்ற முறையில் அரசாட்சி நடைபெற்றது. லெனின் இறந்தபிறகு லியோன் ரொஸ்கி கம்யூனிஸ சித்தாந்தத்திற்குள் சுதந்திர சிந்தனையை வைத்திருக்க வேண்டுமெனப் பாடுபட்டார். ஆனால் அது சாத்தியமாகவில்லை. இறுதியில் ரஷ்யாவின் ஆட்சிப் பொறுப்பு ஒரு சிறு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. இது லெனினோ, கார்ல்மார்க்ஸோ கனவிலும் நினைக்காத ஒன்று.

இதுபோலத்தான் நபிகள் நாயகத்திற்குப் பிறகு இஸ்லாத்தின் வழிப்பட்டு அரசியலை நடத்தியபோது ஜனநாயகம் சாத்தியமாகவில்லை. இதற்குக் காரணம்?...

ரஹ: இஸ்லாத்தையும், கம்யூனிஸத்தையும் நீங்கள் ஒப்பிட்டுப் பேசுகிறீர்கள். இஸ்லாம், அதிகாரம் ஒரு பகுதியில் குவிந்துவிடப்படுவதை, அது எந்த வர்க்கமாயிருந்தாலும் சரி, ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினரிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்படுவதை முழுதாக எதிர்க்கிறது, கம்யூனிஸ சித்தாந்தம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதை வைத்துத்தான் உருவாக்கப்பட்டது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி, இந்த ஜனாதிபதியைச் சரியான முறையில் வழிநடத்த ஒரு பாராளுமன்றம், இவர்கள் குர்ஆனுடைய சட்டத்தைப் பின்பற்றவேண்டும் என்ற கட்டுப்பாடு, குர்ஆன், ஹதீது, "இஜ்மா", "கியாஸ்" என்ற நான்கு நடைமுறைகளில் முன்மாதிரி இல்லாதவிடத்துச் சொந்த அபிப்பிராயத்தைப் பயன்படுத்தி ஆட்சி செய்யவேண்டுமென்ற அமைப்பு -- இதுதான் இஸ்லாமிய அரசியலமைப்பு. இங்கு எதேச்சாதிகாரத்திற்கோ, சர்வாதிகாரத்திற்கோ இடமில்லை.

நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு சந்தர்ப்பம் பார்த்திருந்த முஆவியா என்பவர் இஸ்லாமிய ஆட்சியை அழித்துத் தன்னை அரசனாகப் பிரகடனம் செய்ததுடன் மீண்டும் ஜனநாயகம் தழைத்துவிடுமோ என்று பயந்து, தன் மகன் எஸிதே தனக்குப் பிறகு அரசாளவேண்டுமென்று உயிலும் எழுதி வைத்துவிட்டுப் போனார், எஸிது முஸ்லிம்களிடம் இந்த உயிலைக் காட்டித் தன்னை அங்கீகரிக்கும்படி கூறியபோது, முகம்மது நபி (ஸல்) அவர்களுடைய பேரன் ஹஸரத் ஹுஸைன் (ரலி) இதனை அங்கீகரிக்கவில்லை. இஸ்லாம் அரச பரம்பரைக்கோ, ஒரு குடும்பத்திற்கோ உரிய சொத்தல்ல என எதிர்த்தார். இதன் காரணமாகத்தான் இஸ்லாமிய வரலாற்றிலே மிக முக்கியமான "கர்பலா" யுத்தம் நடைபெற்றது; இஸ்லாமிய ஜனநாயகம் கருவறுக்கப்பட்டது. ஆனால் நவீன உலகில் இஸ்லாமிய ஜனநாயகம் நடைமுறைக்கு வருமென இன்று முஸ்லிம் நாடுகளில் நிகழ்ந்துகொண்டிருக்கும் தொழிலாளர் போராட்டங்கள் எடுத்துக்காட்டுகின்றன

தட: மக்களால் தெரிவுசெய்யப்பட்ட கலீபாவையும், இரு கட்சிகள் இருக்கும் பாராளுமன்றத்தையும் இஸ்லாம் வரவேற்கிறது என்று கூறுகிறீர்கள், இருந்தும் இஸ்லாமிய உலகம் ஜனநாயகத்தை யதார்த்த ரீதியில் புறக்கணிப்பதற்குக் காரணங்கள் கூறுவீர்களா?

ரஹ: இந்தக் கர்பாலா யுத்தத்திற்குப் பிறகு இஸ்லாமிய அரசியல், மீண்டும் அரசர்களுடைய கையிலே போய்ச் சேர்ந்துவிட்டது.

தட்: இதற்கு அந்த மக்களைத் தானே குறை சொல்லவேண்டும்?

ரஹ: மக்களைத்தான் குறை சொல்லவேண்டும். ஆனால் இந்த அரச ஆதிக்கத்தைத் தூக்கி எறிந்து ஜனநாயகத்தை உருவாக்கக்கூடிய சக்திகள் அப்போது பலிதமாகவில்லை. இற்றைக்கு 1300 வருடங்களுக்கு முன் பிரபுத்துவ அடிமைச் சமுதாயமாயிருந்த அராபிய சமுதாயத்தில் இன்றைய உலகிலும் காணமுடியாத, சகலராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு ஜனநாயக அரசாங்க அமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அது சுமார் ஐம்பது ஆண்டுக் காலம் நடைமுறையில் இருந்தது என்பது ஒரு ஆச்சரியமான விடயந்தான். முகம்மது நபி (ஸல்) அவர்களுக்குப் பின் வந்த நான்கு கலீபாக்களும் மக்களாலேயே தெரிவுசெய்யப்பட்டார்கள். அதன் பின் தான் நிலைமை சிக்கலடைந்தது.

தட்: கலீபாக்கள் எவ்வளவு காலம் அரசாளலாம்?

ரஹ. தன் கடமையைச் சரியாகச் செய்யும்வரை அரசாளலாம்.

தட்; அவர் பிழை செய்யும்வரை காத்திராமல் ஒரு குறிக்கப்பட்ட காலவரையைக் கொடுக்கும் முறையை இஸ்லாம் வரவேற்காதா?

ரஹ: வரவேற்கத்தான் வேண்டும். ஆனால் காலத்தின் கோலம், கர்பலா யுத்தத்திற்குப் பிறகு சிந்தித்து முடிவெடுக்கக்கூடிய அரசியல் சிந்தனையாளர்கள் இஸ்லாத்தில் உருவாவது தடைப்பட்டே வந்திருக்கிறது.

தட்; புதிய சிந்தனையாளர்களை உருவாக்கத் தவறியது இஸ்லாத்தின் குற்றம் தானே?

ரஹ: அப்படியல்ல, ஜனநாயக சிந்தனையாளர்களை உருவாக்கக்கூடிய சூழ்நிலை இஸ்லாத்தில் ஏற்படவில்லை; மன்னராதிக்கம் ஏற்பட்டதும் அது தொடர்ந்து வலுவடைந்துகொண்டே போனது. இறுதியில் ஏழைகள் நசுக்கப்பட்டு அவர்கள் புரட்சி செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகிய போது ஐரோப்பிய நாகரிகம் முஸ்லிம் நாடுகளை அடிமைப்படுத்தியது. இப்போது தான் மீண்டும் முஸ்லிம் நாடுகளில புரட்சி உருவாகக்கூடிய சூழ்நிலை உருவாகிக்கொண்டுவருகிறது; அரபு நாடுகளில் தொழிற்சங்கங்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். இன்று ஈரானில் புரட்சி நடந்தமைக்குக் காரணம், அங்குள்ள எண்ணெய்த் தொழிலாளர்கள்தான். ஆனால் சரியான இஸ்லாமிய அரசியலமைப்பை உருவாக்கிக்கொடுக்க வல்ல அரசியல் சிந்தனையாளர்கள் அங்கு காணப்படவில்லை. இஸ்லாமிய அரசியலமைப்பு என்ற பெயரில் புதிய வகையிலான எதேச்சாதிகார ஆட்சியை உருவாக்க முயற்சிகள் நடக்கின்றன.

தட்; அப்படியானால் அரசியல் சிந்தனையை இஸ்லாமிய சமுதாயத்தில் வளர்க்க என்ன செய்யலாம்?

ரஹ்: அது தொழிலாளர்களால் தான் முடியும். தொழிலாளர்களும் விவசாயிகளும், வறுமைப்பட்ட சமுதாயத்தின் நிரந்தரமான சக்திகள். இந்த இரு சுரங்களும் வலுவடைந்தால் ஜனநாயகம் வலுவடையும். நான் அறிந்த வரையில் ஈரானிய நாட்டிலே முதலாளித்துவ அமைப்பின் கீழ் தான் அரசிலமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இஸ்லாமிய அரசியலமைப்பைப் பொறுத்தமட்டில் அது பொருளாதாரச் சமத்துவம் உடையதாயிருக்கவேண்டும். நபியவர்கள் இஸ்லாமியக் குடியரசை மதினாவில் முதன்முதலாக அமைத்தபோது, அங்குள்ள செல்வந்தர்களை நோக்கி, ''உங்களுடைய செல்வங்களைப் பகிர்ந்தளித்துக்கொள்ளுங்கள்'' என்று கூறினார்கள். இந்த அடிப்படையில்தான் இஸ்லாமி ஜனநாயகம் அமைந்துள்ளது. ஆட்சியின் கடமை தனிமனித சுதந்திரத்தைக் காப்பாற்றுகின்ற அதே வேளையில் தனிமனித சுதந்திரம் எல்லை கடந்துபோய் மற்றவர்களைச் சுரண்டுவதைத் தடை செய்கின்றது.

அரபுநாட்டின் ஆட்சியாளராக முகம்மது நபி (ஸல்) அவர்கள் இருந்தும் திறைச்சேரிப் பணத்தைச் சொந்தத் தேவைக்குப் பாவிக்காமல் எளிய வாழ்வு வாழ்ந்தார்கள். பல நாட்கள் அவரும் அவருடைய மனைவிமக்களும் பட்டினியாக இருந்தும், அரசாங்க, பொதுச் சொத்தில் கைவையாமல் சீவியம் நடத்திய வரலாறு உலக சரித்திரத்தில் எங்கேயும் காண முடியாததொன்று. பல ஆண்டுகள் ஆட்சி செய்து அராபிய சாம்ராச்சியத்தை உருவாக்கிய நபி (ஸல்) அவர்கள் இறந்தபோது மாவரைக்கும் ஓர் அம்மியும், நீர் சேகரித்து வைக்கும் ஓர் தோல் கூசாவும், படுத்துறங்கும் ஓர் ஓட்டைக்கட்டிலும்தான் அவர் விட்டுச் சென்ற சொத்துக்கள். பொருளுடைமை எதுவுமற்ற, தியாகியான ஒருவர்தான் கலீபாவாவதற்கு. ஜனாதிபதியாவதற்குத் தகுதியுடையவர், என்பதே நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலாகும்.

தட்: ஜனாதிபதி மிகக்குறைந்த சொத்துக்களை வைத்திருப்பவராக அல்லது சொத்துரிமை எதுவுமற்ற ஒருவராக இருக்கவேண்டுமென்பது வரவேற்கத்தக்கதுதான். அடுத்ததாக செல்வந்தர்களுக்கு வரிவிதிப்பதை இஸ்லாம் வரவேற்கின்றதா?

ரஹ்: ஆம்

தட்; செல்வந்தர்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நடுத்தர வர்க்கத்தையும், பாட்டாளி வர்க்கத்தினரையும் காப்பாற்றலாம். ஒரு நடுத்தர வர்க்கம் ஜனநாயகத்தின் ஆணிவேர் என அரசியற் சிந்தனையாளர்கள் கூறுவார்கள். நடுத்தர வர்க்கம் அழியும்போது சமுதாயம் இரு மோதும் வர்க்கங்களாகின்றது. நடுத்தர வர்க்கத்தின் வளர்ச்சிக்கு தலையீட்டை இஸ்லாம் அனுமதிப்பின் அது ஜனநாயகத்திற்கு முக்கிய பங்கு கொடுக்கும் விடயமாகும்.

ரஹ்; இன்றைய மேற்கு நாட்டு ஜனநாயகம் நடுத்தர வர்க்கத்தையும், பாட்டாளி வர்க்கத்தையும் வறுமையில் வாடும் நிலையிலும் அவர்களைச் சுரண்டக்கூடிய மேலாதிக்க நிலையில் பணக்கார வர்கத்தினரையும் உருவாக்கி

யிருக்கிறது. மேலும் ஜனநாயகம் பேசும் இந்த மேற்கு நாடுகள் ஏகாதிபத்திய நாடுகளாக இருந்து மற்றைய நாடுகளைச் சுரண்டியே தம்மை வளர்த்தன. இப்படிச் சுரண்டப்பட்ட நாடுகளிலெல்லாம் புரட்சியும் குழப்பமும் ஏற்பட்டு அந்நாடுகள் சுதந்திரமடைந்ததால், இந்த மேற்கத்திய ஜனநாயக நாடுகளில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு, வேலை நிறுத்தங்களும் குழப்பங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இன்று மேற்கத்திய ஜனநாயகத்தின் தாயென வர்ணிக்கப்படும் பிரித்தானியாவில் உருவாகியிருக்கும் அரசியல் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் அது ஏகாதிபத்தியத்தன்மையை இழந்ததுடன் பிரித்தானிய பணக்காரவர்க்கம் அங்குள்ள அரசியலமைப்பைப் பயன்படுத்தி உள்நாட்டில் வர்க்க சுரண்டலை அனுஷ்டிப்பதேயாகும்.

தட்: ஆனால் அவர்கள் தற்போது முகம்மது நபியவர்கள் சொன்ன விடயத்தை அனுஷ்டிக்கத் தொடங்கி விட்டார்களென்று நினைக்கிறேன்.

ரஹ்; பேனட்ஷோ என்ற அறிஞர் இந்த 20.ம் நூற்றுண்டுக்கிடையில் இங்கிலாந்து தேசம் முழுவதும் முகம்மது நபி (ஸல்) அவர்களுடைய இஸ்லாம் மார்க்கத்தையே பின்பற்றும் என்று தனது ஓர் நாடகத்தில் பல ஆண்டுகளுக்கு முன் எழுதியுள்ளது நிதர்சனமானுல்தான் சுரண்டலற்ற ஒரு சமுதாயத்தை பிரித்தானிய பாராளுமன்றம் உருவாக்க முடியும்.

தட்: மார்க்ஸிஸ சித்தாந்தப்படி, காலப்போக்கில் நடுத்தரவர்க்கம் அழிந்து, இரு வர்க்கங்களாகி, தொழிலாள வர்க்கம் முதலாளி வர்க்கத்தை அழித்து ஆட்சியை உருவாக்கும். பிரித்தானியாவில் அவ்வாறுன எதேச்சதிகார அரசமையும் சந்தர்ப்பம் உருவாகாமல் தடுப்பதற்காக, நடுத்தரவர்க்கத்தையும் பாட்டாளி வர்க்கத்தையும் காப்பாற்றவேண்டியுள்ளது. வெளிநாடுகளை ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் பிரச்சனை இல்லை. ஆனால் அவர்கள் இன்று கஷ்டப்பட்டே நம்மைப்போல் ஜனநாயகத்தை காப்பாற்றுகிருர்கள். நடுத்தர, பாட்டாளிவர்க்கங்களைப் பாதுகாப்பதற்கும், ஒரு வழி கூட்டுறவு முறை இம்முறையை இஸ்லாம் வரவேற்குமா?

ரஹ்: அதைவிடச் சிறந்த ஒரு பொருளாதார அமைப்பாகத்தான் இஸ்லாமிய பொருளாதார அமைப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கூட்டுறவுமுறையிலே இலட்சம் முதல்போடும் பணக்காரன் சொற்ப காலத்தில் பலலட்சம் பணக்காரனுகி விடுகிருன். எனவே அந்த அமைப்பும் சுரண்டலுக்கு வசதியானதாகவேயிருக்கின்றது.

தட்: அடுத்ததாக மிகமுக்கியமான கல்வி விடயத்திற்கு வருவோம். முகம்மது நபியவர்களை ஒரு படியாத நபி என்று சொல்லுவார்கள். எழுத வாசிக்கத் தெரியாதிருந்தும் அவர் கல்வியை மிகவும் விரும்பினுர். ஆனல் இஸ்லாமிய சமுதாயம் கல்வியில் ஈடுபாடில்லாமல் வளர்ச்சியடையாமல் இருக்கின்றது. அதற்கு காரணமென்ன? நபிகள் நாயகத்தினது அதிகம் படிக்க வேண்டுமென்ற சிந்தனையை எவ்வாறு செயற்படுத்தலாம்?

*With Best Compliments*

*Of*

# *Pradeep Karmeeka Aiyathanaya*

226, GODIKAMUWA

MAHARAGAMA.

ரஹ்: நான் ஏற்கனவே உங்களுக்குக் கூறியமாதிரி இஸ்லாமிய ஜனநாயகத்தின் அடிப்படை பொருளாதார சமத்துவமும் கல்வி வளர்ச்சியுந்தான் இந்த இரண்டும் மிகவும் துர்ரதிஷ்டவசமாக, மன்னராதிக்கத்திற்குட்பட்ட முஸ்லிம் நாடுகளிலே வெறுத்தொதுக்கப்படுகிறது. பொருளாதார சமத்துவம் ஒடுக்கப்படுகிறது. கல்வி மிகவும் மோசமான முறையில் மதிப்பீடு செய்யப்படுகிறது. பிற்காலத்தில் மன்னராதிக்கத்தின் செல்வாக்கிற்குட்பட்ட அறிஞர்கள் மார்க்கக்கல்வியை மட்டும் கற்றால் போதும் என்னும் அளவிற்கு கல்வி கற்பதைத் தடைசெய்தார்கள்; சிந்தனையை எவ்வளவு தூரம் ஒடுக்க இயலுமோ அவ்வளவு தூரம் ஒடுக்கினார்கள். முஸ்லிம் உலகிலேயே கல்வியில் மிகச்சிறந்த நாடு பாகிஸ்தான் ஆனால் அங்கு எழுத வாசிக்கத் தெரிந்தவர்களின் தொகை சுமார் பதினைந்து வீதமாகவே இருக்கிறது. இந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது கல்வி உதாசீனம் செய்யப்படுவது திட்டமிட்ட செயலாகவே தெரிகிறது.

தட்; மக்கள் தலைவனான பூட்டோவைக் கொலை செய்த பிற்பாடு பாகிஸ்தானில் தேர்தல் வைக்கப்படுமெனப் பலதடவை அறிவிக்கப்பட்டது. இப்படிப் பலதடவை மீண்டும் மக்கள் ஆட்சி கொண்டுவரப்படும் என்ற ஜனாதிபதியின் அறிவித்தலுக்கு அங்குள்ள மக்கள் விழிப்புணர்ச்சியுடன் இருப்பதே காரணம். ஆகவே அங்கு கல்வி பயன் கொழுத்திருக்கிறது. அது மட்டுமல்ல பாசிஸ்தான் மக்கள் பிரித்தானிய மக்களுக்குக் கீழிருந்து பாராளுமன்ற ஜனநாயக சம்பிரதாயத்தை அதிக காலம் பயின்றிருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் அந்த ஜனநாயகத்தை இழந்துவிட்டார்கள்.

ரஹ்; கவலைக்குரிய விடயம் என்னவென்றால் - பாகிஸ்தானாயிருந்தாலும் சரி, ஈரானாயிருந்தாலும் சரி இஸ்லாமிய அரசியலமைபபு ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு சரியான வழிகாட்டுவதாக இஸ்லாமிய அரசியலமைப்பு அரசியல் சிந்தனையாளர்களால் வெளியிடப்படவில்லை.

இன்றைய முஸ்லிம் சர்வகலாசாலைகளில் உள்ள மாணவர்கள் எல்லோரும், மேற்கு நாட்டுப் பாராளுமன்ற முறை கூடாது என்கிறார்கள்; கம்யூனிஸத் தத்துவம் கூடாது என்கிறார்கள்; இஸ்லாமிய ஆட்சி முறை வேண்டும் என்கிறார்கள். ஆனால் இஸ்லாமிய ஆட்சி முறை என்னவென்று கேட்டால், திருடியவனின் கையை வெட்டுவது போன்ற ''சரி-அத்'' ஆட்சி என்கிறார்கள். இதுதான் இஸ்லாமிய ''சரி-அத்'' ஆட்சி முறை என்றால், அது உண்மையிலேயே சிந்திக்கவேண்டிய ஒன்றுதான். ஏன் இஸ்லாமிய ''சரி-அத்'' ஆட்சியில் திருடியவனின் கை வெட்டப்பட்டது? செல்வம் பகிர்ந்தளிக்கப்பட்டு, ஏழை எளியவர்கள் என்றில்லாமல் எல்லோரும் சந்தோஷமாக வாழக்கூடிய நிலைமை உருவாக்கப்பட்டு, அப்படி ஒரு ஆட்சியின் கீழ் ஒருவன், இன்னொருவனின் பொருளைத் திருடினால், அது தேவையினால் ஏற்பட்டதல்ல; அது, அவன் செல்வம் சேர்க்கவேண்டுமென்ற பேராசையினால் ஏற்பட்டது என்ற நிலையில் அச்சட்டம் அமுல்செய்யப்பட்டது.

தட்: அப்படியான ஒரு பூரணமான இஸ்லாமிய தர்ம சமுதாயத்தில்கூட, ஒரு குற்றம் செய்தவனுக்கு ஏன் கையை வெட்டவேண்டும்? அவனது பிரச்சனை, உளவியல் பிரச்சனையா என ஆராய்ந்து, அவனுக்கு அதற்கேற்ற வைத்தியத்தைச் செய்து, ஒரு புது மனிதனாக உருவாக்கி, ஏன் அவனைச் சமுதாயத்தில் அங்கம் வகிக்க விடக்கூடாது?

ரஹ: இஸ்லாமிய அரசியல் அமைப்பிலே நீதிபரிபாலனம் தனி இடத்தை வகிக்கின்றது. இஸ்லாமிய நீதித்துவம், ஒரு பெரிய கடல; ஒருவன் திருடினான் என்றால் எந்தக் கட்டத்திலே அவன் செய்தான் என்பது விசாரிக்கப்பட்டு, அவன் மனோவியாகூலத்தினால் செய்தானா என்பது ஆராயப்பட்டு, அவன் பேராசையினால் செல்வம் சேர்ப்பதற்குத் திருடினான் என்பது தெளிவாக அறியப்பட்டாலே அவன் கை வெட்டப்படும்.

தட்; பரந்த கல்வியறிவுதான் பல கோணங்களிலிருந்து சிந்திக்கக்கூடியவர்களையும், சிந்தனைப் போராட்டத்தையும் உருவாக்குகிறது. இது ஜனநாயகத்திற்கு அவசியம். இஸ்லாமிய சமுதாயம், கல்வியில் ஈடுபாடில்லாமல், வளர்ச்சியடையாமலிருக்கிறது; சிந்தனையாளர்களை எவ்வாறு இஸ்லாம் உருவாக்கபபோகின்றது?

ரஹ்: பரந்த கல்வியால் உருவாகும் உயர்ந்த சிந்தனையாளர்களால்தான் இஸ்லாமிய அரசியலமைப்பை உறுதிப்படுத்தமுடியும், மன்னராதிக்கத்திற்கும், ஏதேச்சாதிகார ஆட்சிகளுக்கும் உட்பட்டிருக்கும் இன்றைய முஸ்லிம் நாடுகள், பரந்த கல்வியை வேண்டுமென்றே புறக்கணிக்கின்றன. ஆனால் இந்த நிலை மாறி, முஸ்லிம்கள் பாந்த கல்வியைப் பெறும் சந்தர்ப்பங்கள் உருவாகி வருகின்றன. ஏழை எளிய மக்களும், தொழிலாளர் - விவசாயிகளும் எவ்வளவுதூரம் இஸ்லாமிய சமுதாயத்தில் செல்வாக்கையும், வலுவையும் பெறுகிறார்களோ, அவ்வளவுதூரம் பரந்த கல்வி ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. அரசியல் சிந்தனையாளர்களை உருவாக்குவதற்கு முன்னோடியாக மக்கள் மத்தியிலே புரட்சி இயக்கங்களும், செயற்பாடுகளும் தோன்றும் என்பது சரித்திரம் படிப்பிக்கும் உண்மை. இன்று முஸ்லிம நாடுகளில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிற போராட்டங்களையும், புரட்சிகளையும் நீங்கள் அறிவீர்கள். மத்திய கிழக்கு அராபிய நாடுகளிலும், ஈரானிலும், பாகிஸ்தான் போன்ற முஸ்லிம் நாடுகளிலும் ஏழை எளியவர்களான மத்திய வகுப்பினரும், தொழிலாளர், விவசாயிகளான பாட்டாளி வர்க்கத்தினரும் கபீட்சமும், சுதந்திரமும் உள்ள ஒர இஸ்லாமிய சமுதாயத்தைக் காணும் துடிபபோடு போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரபு நாடுகளிலும், ஈரானிலும், மற்றைய முஸ்லிம் நாடுகளிலும், எண்ணெய்த் தொழிலாளர் இயக்கங்களும், மற்றும் தொழிலாளர் சமாசங்களும் படிப்படியாக அரசியற் செல்வாக்கும், பலமும் பெற்றுவருகின்றன. முஸ்லிம் உலகில் காணப்படும் இப்புரட்சிப் போராட்டங்கள் திசைதிருப்பப்பட்டு, நாஸ்திகத்தை அடிப்படையாகக்கொண்ட கம்யூனிஸ சர்வாதிகாரம் ஏற்பட இடமளிக்கப்படக்கூடாது. இஸ்லாமிய சிந்தனையாளர்கள்தான் இதை நெறிப்படுத்தவேண்டும். வரட்டு வேதாந்தமும், குருட்டுக் கொள்கைளும் இனிமேல் முஸ்லிம்களுக்கு வழிகாட்டமுடியாது. குர்ஆனிலும், நபி (ஸல்) அவர்களின் நடை

முறையான ஹதீதிலும் காணப்படும் உண்மைகளுக்கு முஸ்லீம் சிந்தனையாளர்கள் சரியான விளக்கம் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் மீள முடியாத கம்யூனிஸ சர்வாதிகாரத்தில் முஸ்லீம் உலகம் விழுவதை யாரும் தடுத்து நிறுத்திவிடமுடியாது. இந்தச் சிந்தனையாளர் வரிசையில் எனக்கும் ஓர் இடம் கிடைத்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்! இந்தப் பணியில் என்னால் ஏதாவது செய்யமுடியுமானால், அது முஸ்லீம் உலகத்திற்கு நான் ஆற்றுகின்ற பெரிய பணியாக இருக்கும்.

தட்: ஜனாப் ரஹுமான் அவர்களே! நீங்கள் உருவாக்க நினைக்கும் அந்தப் புதிய உலகம், இஸ்லாமியக் குடிபரசாக இல்லாது, ஜனநாயக இஸ்லாமியக் குடியரசாக அமையட்டும் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்!

எம். ஏ. சி. ஏ. ரஹ்மான்
எஸ். தட்சணாமூர்த்தி

(இலங்கை வானொலியில் ஜனாப் எம். ஏ. சி. ஏ. ரஹ்மானும், திரு. எஸ். தட்சணாமூர்த்தியும் நடாத்திய ஒரு கலந்துரையாடலே மருவி, அவர்களால் இச்சஞ்சிகைக்காக விரிவாகச் செய்யப்பட்ட ஓர் பேட்டியாகும்.)

அரசியல்
ஒரு நாடகம்!
ஏழையிடம் ஓட்டையும்
பணக்காரனிடம்
தேர்தல் செலவுக்குப்
பணத்தையும் பெற்றுக் கொண்டு
இருவருக்கும்
மற்றவரிடமிருந்து
பாதுகாப்பு அளிப்பதாக
உறுதி கூறும்
ஓரங்க நாடகம்

பிரியா
(பிரசுரமானது)

# APEX
# Consulting Engineers

(MULTI DISCIPLINED ENGINEERING CONSULTANCY SERVICE)

*For*

*Your Design requirments*

*of*

*Buildings*

*Structural Engineering*

*Irrigation*

*Water Supply*

*Road Works*

*AirConditioning*

Telephone: **83774**

43, NELSON PLACE,

COLOMBO-6.

# சித்தர் சிந்தையிலே....

நட்டகல்லைத் தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே,
சுற்றி வந்து முணுமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா!
நட்ட கல்லும் பேசுமோ. நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ.

- சித்தர் சிவவாக்கியர்

தாய்மொழி பேணார்; நாட்டினை நினையார்;
தம்கிளை, நண்பருங்கிரங்கார்;
தூயகல் அன்பால் உயிர்க்கெலாம் நெகிழார்;
துடிப்புறும் ஏழையர்க்கருளார்;
போய்மலை ஏறி வெறுங் கருங்கற்கே
பொன்முடி, முத்தணி புனைவார்
ஏய்ந்த புன் மடமை இதுகொலோ சமயம்
ஏழையர்ங் கிரங்குமென் நெஞ்சே

- நடங்கண் சித்தர்

உழைப்பே மனிதனின் உன்னத ஆற்றல் – கடும்
உழைப்பினுல் வந்ததே உயர்வு முன்னேற்றம்
உழைத்துப் படைத்தது மானிடம் அன்றே – அட
அதனின் உயர்ந்தது உண்டெனல் நன்றே?

மனிதனுக்கு மேலொரு தெய்வமும் இல்லை – இந்த
மானுடம் போலொரு மெய்மையும் இல்லை
மனிதன் இயற்கையின் எதிரொலிச் சின்னம் – உழைப்பு
மனம் இல்லையேல் அவன் விலங்காண்டி இன்னும்

உழைக்காமல் உண்ணுவோர் தீயபாழ் உள்ளம் – இந்த
உலகத்தில் தோற்றிற்று மதமான பள்ளம்
பிழையே பிழைப்பாக்க சாதிகள் தந்தார் - மக்கள்
பேதத்தில் வாழ்வைச் சுரண்டி உவந்தார்.

- உலோகாயதச் சித்தர்

*With The Best Complimets*
*From*

# MEENA JEWELLERS

98, SEA STREET
COLOMBO–11

*Live it up go places*
*With Jewellery by*
*Meena Jewellers*

For Exclusive Jewellery
Genuine 22 Carats
Soverign Gold
Meena Jewel

Telephone: **22585**

# பரிசிலனை

பூமித் தாயின் இராக்காலப் பௌர்ணமியில் — செங்காவி மணல் குளித்த வடலிப் பரப்பில் — கதவுகள் அற்ற குடிசைகளில் காற்று, நதிகள் சலசலப்பதைப் போல் — என் வாழ்வில் சயனித்த சம்பவங்கள் — ஞாபகத் திரைக் கீற்றோவியமா இன்றன.

பீத்தோவன் போன்ற ஸாகித்தியகர்த்தாக்களின் சங்கீத ரூபலாவண்யங்களைப் போல்—

ரவிவர்மா என்ற சைத்ரீகனின் தூரிகைகள் தீட்டாத ஓவியப் புஷ்பங்கள் அவை.

அந்த நிஷ்டைப் பூக்களின் தபசுரங்களாய் — என் மன வெளிக்கரையின் சம்பவ நிகழ்வுகள்!

அவை துறவறம் பூணுத என் எழுத்து வரிகளின் — வார்ப்புகள், வடிவங்கள் ஆகின்றன.

சிருஷ்டிக்கத் தெரியாதவர்கள் விமர்சகர்களான ஒரு தேசத்தின் இலக்கிய அவலங்கள் இதில் கிடையாது.

இலக்கியத்தில் கூம்பிப்போன உணர்வுகள் நாடு கடத்தப்பட்டுவிட்டதால்—

இளமை ஊஞ்சலிடும் எல்லையற்ற சிருஷ்டித் தாக்கத்தோடு கூடிய, ஆத்ம ஆவேசங்கள் குடியுரிமை பெற்றுவிட்ட ஓர் இதயத்தின் சித்திரிப்புகள் ஆகின்றன.

— அந்த
நிகழ்வுகள்,
நிஷ்டைப் பூக்கள்,
உஷ்ண மூசுக்கள்,
உஷைகால மௌனங்கள் —

ஒரு சமகால எழுத்தாளனின் — சம்பவத் தரிசன விமர்சனங்கள் ஆகின்றன.

சரித்திர முக்கியத்துவம் பெறாத அந்த நிகழ்வுத் தரிசனங்களை இங்கே ஒரு மௌன ஆராதனையோடு = மறு பரிசிலனை செய்து பார்க்கிறேன்.

சூரியனின் ஒளி மண்ணில் கால் ஊன்றினாலும், பூமிக்குள் வேரோட முடியாத காரணத்தால் — புழுதித் தரைகளைச் சூடேற்றிவிட்டு இரவுக்குள் நித்திரை கொண்டுவிடுவதைப்போல் —

சோகங்கள் உணர்வுக் கொதி நீராடி, மனதுக்குள் வேரோடிச் சென்று மௌனச் சமாதியாகிவிடுகின்றன.

குற்றங்கள் தவறுகளாகக் கொள்ளப்படும்போது — தவறுகளே குற்றங்களாகக் கணிக்கப்படுகின்ற சமூக நீதிதான் விசித்திரமானது.

வெள்ளைத் தாளில் தீர்ப்புகள் எழுதப்பட்டாலும் இருண்ட சிறைச்சாலைகளில் தான் தண்டனைகள் நிறைவேற்றப்படுவதைப்போல் —

பருவகால நில நயனங்களில் பூத்த உறவுகள், சோகத்தில் ஜீரணிக்கப்பட்டு மௌனத்தில் முற்றுப்பெறுகின்றன.

சந்திரிகை உலாவரும் நிசப்த இரவுகளில் அந்த உறவுகள் கல்லறைப் புஷ்பங்களாகின்றன.

பூமியின் குழந்தைகளாகவே மனிதர்கள் பிறந்தாலும் — சிலரது வாழ்க்கையில் மட்டுந்தான் சிரிப்புக்கள் இரகப் பிரவேசம் செய்கின்றன.

பலரது வாழ்வு பௌர்ணமியின் வரவிற்குத் தவமிருக்கும் அமாவாசைகளாகி விட்டன.

பூமியின் சொர்ப்பனம் கொடி நிறைந்து வழியும் நுரைப் பூக்களாயின் —

பாலைவனத்துக் கனவுப் பூமியேன் கனவாய்த் தகிக்கிறது.

ஒருசில பேரீச்ச மரங்களைக் கடந்து செல்லும் ஒட்டகங்களின் பாத யாத்திரை எந்தக கிராம ராஜ்யத்தை நிர்மாணித்து விடப்போகின்றது?

கல்லறைகளில் எல்லாம் ஞாலப் புஷ்பங்கள் பூப்பதில்லை. சிலரது கல்லறைகளில் மட்டுந்தான் இன்னும் சில சந்தனக் குச்சிகள் புகைந்துகொண்டிருக்கின்றன.

விருந்துப் பண்டங்களை நினைத்துக் கொண்டே பசிக்கு விருந்தாகிப்போனவர்களின் முக தரிசனங்களைப் பார்த்துக் கொண்டே இன்றும் சில புளியேப்பக்காரர்கள் புண்ணிய பூமிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

வாழ்க்கைச் சுமைகளால் கூனிப்போன வாலிபம், முதுமை அடையும் இத்தேசத்தில் பிரச்சினைகளைப் பற்றிக் கோஷமிடுபவன் தலை வணங்கி விடுகிறான். பிரச்சினைகளால் கூனிப்போனவர்கள் சுமைதாங்கியாகிவிடுகின்றனர்.

விலாசமில்லாத காரணத்தால் அழகுகள் இன்னும் விநியோகிக்கப்படாமலே வீதியில் உறங்கிக் கிடக்கின்றன. இதனால் தான், தவறான விலாசத்தில் சில அசிங்கங்கள் விலைபோகிவிடுகின்றன.

நம்மில் பலரின் தாகத்துக்குக்கூடத் தண்ணீர் கொடுக்காத காரணத்தால், வேலி அடைப்புகளுள் கிணறுகள்கூடச் சிறை வைக்கப்படுகின்றன. ஆனால், மனித உரிமைகளுக்கு விழா எடுக்கும் மகத்துவமும் இந்த விசித்திரப் பூமியில்தான் நடைபெறுகின்றது.

கனவுப் பூமியில் கற்பனை மலர்களே பிரசவிக்கப்படுவதால் — மனோரதியப் பாடல்களே மனனம் செய்யப்படுகின்றது.

ஆனால்—

சமுதாய உஷ்ண மூச்சுக்களால் அந்தக் காகித மலர்கள் உதிர்ந்தும் போய்விடுவதைக் காணுகின்றேன்.

உழைப்பவர் வியர்வைத் துளிகள் உதிர்ந்து கனல் மணிகளாய் நிறைந்துகிடக்கின்றன.

கதிர்களைச் சுமக்கும் அந்தக் கைகளோ, குடிசைக்குள் கஞ்சிப் பானையைத் துளாவுகின்றன.

புத்தகங்களில் தத்துவப் பாடலைப் படிக்கப் போனவர்களின் வாழ்க்கையே ஒரு தத்துவமாகிவிட்டதாம். அந்தத் தத்துவப் புத்தகங்களை எடுத்துப் பார்த்தேன். எழுத்துப் பிழைகளே மலிந்து கிடப்பதால் கருத்துப் பிழைகளே கண்ணை உறுத்துகின்றன.

கையில் விஷக் கோப்பையை ஏந்திக் கொண்டு, சிந்திக்கக் கற்றுக் கொடுத்த கிரேக்கக் கிழவனைப் படித்துவிட்டு — புழுதிப் புகை மூழ்கிய வீதியில் நடந்தபோது — கையில் தகரப் பேணிகளை ஏந்திக் கொண்டு யாசிக்கும் ஏழைச் சிறுவர்களே எதிர்ப்படுகின்றார்கள்!

அந்தச் சூரியனைப் பந்தாடி, அக்கினிக் காற்றில் மூச்சு விடுவோம் என்று கூறியவர்கள், மழைக்காலக் குளிர் காற்றைத் தாங்கமுடியாமல் அடுப்புக் கனலில் அனல் காய்கிறார்கள். வெய்யிலைக் கண்டு விசிறிக் கொள்கிறார்கள்.

வகை வகையான உணவுகள் இருந்தும்கூட, உண்ண முடியாமல் சிலர் உறங்கிப் போகிறார்கள்—

உறக்கத்தில் மட்டும் இந்த உலகை மறந்தவர்கள், விழித்துக்கொண்டபோது உணவுக்காக ஊர்வலம் போகிறார்கள்.

கால நதி புதிய கரைகளைத் தோற்றுவித்துப் பூமியில் புனலாய் ஓடிக்கொண்டிருக்கையில்—

சிலர் பழைய கங்கைக் கரைகளில் தண்ணீர்ப் பந்தல் போடுகிறார்கள் தாகசாந்தி செய்வதற்காக!

சப்த சந்நிதியில் ராக வழிப் பாடல்களைச் சுமந்தபடி — சந்திரை இரவுகளில் அவன் கவி லயங்கள், சமுதாய வீதிகளில் அவன் காற் சுவடுகள் பதிகின்றன.

--ஈழவாணன்

# விமர்சனம் - ஒரு நோக்கு

ஒருநாட்டின் கலை இலக்கிய வளர்ச்சிக்கு விமர்சனம் இன்றியமையாதது. முக்கியமாக புதுமையானதொரு கலையாக்கத்தின் ஆரம்ப வளர்ச்சிக் கட்டத்தில் அதை இரசிகர்களுக்கு ஆக்க பூர்வமான கருத்துக்களை எடுத்துக் காட்டுவதிலும் கலா விமர்சகர்களின் பணியைக் கலைஞர்கள் எதிர் பார்க்கின்றனர்

எமது நாட்டின் கலைவிமர்சன வளர்ச்சியை நோக்குவதெனில் கலைஞன் விமர்சகர் இரசிகர் (பொதுமக்கள்) ஆகிய மூன்று உறுப்பினர்கட்கும் உள்ள உறவை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒரு கலையுடன் விமர்சகனானவன் நெருங்கிய தொடர்புடையவன் எனினும் கலையாக்கப்படைப்பில் நேரடியாக இவன் ஈடுபடுவதில்லை. விமர்சகனுக்கும், கலைஞனுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு இதுவே. மறுபுறத்தில் விமர்சகனானவன் முதலில் ஓர் இரசிகனே; நாம் அநுபவித்த கலையைப் பற்றி மிக உன்னிப்பாக ஆழமாக அறிய - ஆராய முற்படும்போது, இரசிகர்கள் விமர்சகர்களாக மாற முற்படுகின்றனர்.

முக்கியமாக கலையின் வரலாற்றையும், மரபையும், அதன் சமுதாயப் பணியையும் இவர்கள் கவனிக்கும் போது கலை வளர்ச்சிக்கான ஆக்கப் பாதையையும் கலையின் அழிவுப்பாதையையும் சுலபமாக இனங் கண்டு கலைஞர்களுக்கும் இரசிகர்களுக்கும் தமது கருத்துகளை முன்வைக்கின்றனர். கலைஞர்கள் விழிப்புடனும் உற்சாகத்துடனும் பணி புரிய இத்தகைய விமர்சனங்கள் உதவுகின்றன மறுபுறத்தில் கலையின் சிறப்பு அதன் பணி போன்ற அம்சங்களை முன் வைத்துக் கலையை ஜனரஞ்சகப்படுத்துகின்றனர். விமர்சகர்கள் கலையை உன்னிப்பாக ஆராய்ந்ததன் பயனாக விமர்சகனானவன் கலையை ஓர் உயர்ந்த தளத்தில் நின்று நோக்க முடிகின்றது. இதனால சாதாரண இரசிகர்கள் பார்த்து அநுபவித்த அதே கலை நிகழ்ச்சியின் சமுதாயவியல், அறிவியல், ஆக்கவியல் ரீதியிலான குணும்சங்களை இரசிகர்களுக்கு எடுத்துக்காட்டி, அக்கலையானது தொடர்ந்து வாழ உதவுகின்றனர் விமர்சகர்கள்.

இதுகாறும் கூறியதிலிருந்து கலைஞனும் இரசிகனும் சந்திக்கும்போது அங்கே விமர்சகன் பிறக்கிறான் எனும் முடிவுக்கு வருவோம். வரலாற்று ரீதியாக நோக்கும்போது சில கலைகள் வழக்கொழிவதையும், அவற்றை ஆதரித்த சமூகம் மறைந்து, புதிய சமுதாயம் பரிணமித்ததையும் காண்போம். இந்நிலையில் அங்கு எஞ்சி நிற்பது அக்கலைகள் பற்றி விமர்சகர்கள் எழுதிவைத்த விமர்சன இலக்கியமே. உதாரணமாக, சிலப்பதிகார காலத்திய கலைகள் மறைந்துவிட்டன. அன்றைய சமூகம் மாறிவிட்டது. ஆயினும் அக்காலத்திய கலைகளை நாம் இன்று ஓரளவேனும் புரிந்து கொள்வதற்கு உதவுவது இளங்கோ அடிகள் போன்ற கலா விமர்சகர்களின் எழுத்துக்களே. ஆகவே கலையின் வரலாற்றைப் பேணுவதற்கும் விமர்சன இலக்கியம் இன்றியமையாதது.

இத்தகைய முக்கியமான சமூகப்பணியினைப் புரியும் விமர்சகனுக்கு வேண்டிய தகைமைகள் யாவை? குறிப்பாக நாட்டியக் கலையை மட்டும் எடுத்துக்கொண்டால் விமர்சகர்களின் தகைமைபற்றி சிறில் போமன் (Cyril Beaumart) கூறியவை கவனத்திற்குரியது. போமன் அவர்கள் பிரெஞ்சு நாட்டிய உலகில் புகழ்பெற்ற அறிஞரும் விமர்சகரும் ஆவர். அவர் கூறுகின்றார். - "பலே நடன விமர்சகனுக்கு உலக நாட்டிய வரலாற்றின் அறிவு வேண்டும். நடனத்தின் பரிணும வளர்ச்சி, அதற்குத் தனிப்பட்ட நாட்டிய மேதைகளின் பங்கு, நாட்டிய அமைப்பாளர்களும் அவர்களின் தனிப்பட்ட பாணிகளும் கொள்கைகளும் என்பவற்றில் பரிச்சயம் வேண்டும். பொதுவாகக் கலையின் வரலாறு பற்றியும், சிறப்பாக அரங்கக் கலைகளின் வரலாறு பற்றியும் அறிவு வேண்டும்.

இசை, இசை அமைப்பாளர்கள் அவர்களின் சாதனைகள் பற்றியும் ஓரளவு தெரிய வேண்டும் இசைக்கும் அசைவுக்கும், வர்ணத்துக்கும், அமைப்புக்கும், உணர்ச்சி வசப்படக் கூடியவனாக இருத்தல் வேண்டும் நாட்டிய அமைப்புப் பற்றி அறிவியல ரீதியிலான விளக்கம் வேண்டும்''

இங்கு கூறப்பட்ட தகைமைகளைப் பார்க்கும்போது திகிலாக இருப்பினும் யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த விமர்சகர்களுக்கு இத்தகைமைகள் உள்ளதை நாம் அவதானிக்க முடியும்.

மேற்கத்திய பலே நடன விமர்சகரின் இக்கூற்று. எமது நாட்டியக் கலைக்கும் முற்றிலும் பொருந்தும். சிறில் போமன் தான் கூறிய தகைமைகள் மிககடினமானவையாகத் தான் தென்படலாம் என்றார். ஆயினும் விமர்சகன் எவ்வாறு உருவாகின்றான் என ஆழ்ந்து சிந்திக்கும்போது, இது ஒன்றும் வியப்புக்குரியதல்ல. சாதாரண இரசிகன் ஒருவன் கலையின் தாக்கத்துக்குட்பட்டு ஆராய முற்படும்போது போமன் கூறிய தகைமைகளை இயல்பாகவே பெற முடிகின்றது. இதன் பின்னரே அவன் கலையைப் பொதுமக்கள் மத்தியில் விமர்சிக்க முன்வருகின்றான்.

ஆகவே கலை, இலக்கிய விமர்சனத்தில் ஈடுபட விரும்புபவர்கட்கு, அடிப்படைத் தகைமையாக ஏதாவதொரு துறையில் விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து பயிற்சி பெற்ற அறிவுத் திறன் மிக முக்கியம் என்பது எனது கருத்து. கலை, இலக்கிய விமர்சனத்தில் இறங்கும்போது, இந்த அறிவுத் திறனானது குறிப்பிட்ட கலை. இலக்கியத் துறையையும் வரலாற்றுச் சமூகவியல் ரீதியில் ஆராய்வதற்கு வேண்டிய பழக்கத்தை அளிக்க வல்லது. சுருங்கக் கூறின், கலா விமர்சகன் விஞ்ஞான ரீதியில் சிந்தித்து ஆராயத் தகுந்தவனாக இருத்தல் வேண்டும்.

சிறந்த விமர்சகர்களின் எண்ணிக்கை பெருகும்போது, நாட்டின் பல பாகங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகள் விமர்சனத்திற்குள்ளாகும்.

ஆகவே இன்றைய நிலையில், பெரும்பாலும் விமர்சகர்கள் இல்லாத அரங்குகளிலேயே, விமர்சனம் வலிமைபெறாத சபைகளிலேயே எமது கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இத்தகைய ஒரு வெற்றிடத்தில் உரம் அற்ற உடலைக் கிருமிகள் தாக்குவதுபோல, விமர்சகர் என்ற போர்வையில் இலவசமாகக் காட்சியைப் பார்ப்பதற்கு, ஒருசிலருக்கு நுழைய வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்நோய்க்கு மருந்து, வெறுமனே நோயைத் திட்டுவதல்ல; சிறந்த விமர்சகர்களை உருவாக்கக் கலைஞர்களும், இரசிகர்களும் முயலவேண்டும். இரசிகர்களும், கலைஞர்களும் சந்திக்கும்போது விமர்சனத்துக்கான களம் அமைக்கப்படுகின்றதென நான் முன்னர் கூறியதை நினைவிற்கொள்ளல் இங்கு பொருத்தமுடையதாகும்.

உதாரணமாகக் கருத்தரங்குகள் நடாத்தி, அவற்றில் பங்குபற்றிக் கலைஞர்களும், விமர்சகர்களும் கருத்துப் பரிமாறுவதால் புதிய இளம் விமர்சகர்களை உருவாக்கமுடியும்.

--கார்த்திகா கணேசர்.

*WITH THE BEST COMPLIMENTS*

*FROM*

# SIEDLES CINE RADIO

9, 10 CONSISTORY BUILDING

COLOMBO - 11

*For the Construcrion of*

*Mondern Houses, stoves*

*and*

*Other Buildings*

*Contact*

# J. EDIRISINGHE

BUILDING CONTRACTOR

54, Wathapola Road,

Pallimulla,

PANADURA.

## மொழி

ஒலி செல்வதற்கு
ஒரு ஊடகம் தேவை
ஓம்..........ஓம்..........
அதுதான் உண்மை
என்றார்கள்
விஞ்ஞான மாணவர்கள்
மொழியும் ஒரு
ஊடகந்தான்........
கணநேர நிசப்தம்
குமுறினர்
எழுந்தனர்
ஊடகம் உதவியது
நீ துரோகி....
குலத்தைக்
கெடுக்க வந்த
கோடரிக் காம்பு....
மொழி எங்கள்
உயிர்!
ஆரவாரங்கள்....
குழப்பங்கள் ...
கூச்சல்கள்....
உண்மை
உணர மறுக்கப்பட்டது
கலகங்கள்....
இரத்தக் களரிகள்....
இறுதியில் நீண்ட
மௌனம்....

## காலம்

நான் என்ற முனைப்பு
எனக்கிருக்கு மட்டும்
காலம் இங்கு என்றும்
வாழ்ந்து கொண்டேயிருக்கும்
நான் என்ற நினைப்பு
அழிந்தொழியும்போது
காலம் என்பதற்கு
கருத்தொழிந்து போகும்

## சத்யங்கள்

தத்துவத்தின் சத்துவங்கள்
செத்த பிணமாகையிலே
செத்த பிணமொன்று
தத்துவமாயிற்று

- ந. சிவசக்தி

NEWMAN, ELECTRIC MOTORS

FREDERICK PARKOR STONE CRUSHERS

&

CONCRETE MIXERS

LISTER DIESEL ENGINES

SOLE AGENTS

**Harrisons Lister Engineering**

**(Colombo) LTD.**

**45, Morgan Road,**

COLOMBO-2.

Telephone:- **31744, 45, 46.**

# செயற்குழு உறுப்பினர் 1979-80

1) காப்பாளர்
பேராசிரியர் P. D. குணதிலகா

2) துணைக்காப்பாளர்
திரு. க. சிவசுப்பிரமணியம்

3) பெரும் பொருளாளர்
திரு. வே. இளங்கோ

4) தலைவர்:
து. சண்முகானந்தக்குமார்

5) துணைத்தலைவர்:
செ. தருமகுலராசா

6) செயலாளர்:
க. சிவராசா

7) இளம் பொருளாளர்
இ. சிவமோகன்

8) இதழாசிரியர் குழுத்தலைவர்
இ. சாந்தினி
பிரதிநிதிகள்

9) மு. அமிர்தநாயகம்
ஏ. உலகசேகரம்
(பொறியியல் முதலாம் வருடம்)

10. ந. சோமஸ்கந்தன்
(பொறியியல் மூன்றும் வருடம்)

11. வே. விஜயநாதன்
(பிரயோக விஞ்ஞானம் இரண்டாம் வருடம்)

12. ந. சிவசக்தி
(பிரயோக விஞ்ஞானம் மூன்றும் வருடம்)

13. ந. குலயேந்திரன்
(கூட்டிக்கலை முதலாம் வருடம்)

14. இரா. லே. இரவிச்சந்திரா
(கட்டிடக்கலை இரண்டாம் வருடம்)

15. ந. ஸ்ரீபாஸ்கரன்
(தொழில் நுட்பவியல் முதலாம் வருடம்)

*With Best Compliments*

*Of*

# PREMIER ENGINEERS LIMITED

* *Marine*
* *Mechanical*
* *Civil*
* *Foundry*
* *Estate*
* *Electrical*
* *Air Conditioning AND*
* *Refrigeration Engineers*

15, Morgan Road
P. O. Box 646
COLOMBO-2

Telephone: **20171, 20172, 20173**

*First in the field for Under - water hull Cleaning Using Hydralically Operated Brush - Bouy*

''You see, ஒரு capitalist government இதற்கு கீழே இந்த unemploymen problems, cost of living பிரச்சனை இவை தீரவே போறதில்லை.''

',No...no... You can't say like that. போனமுறை அவன்கள் கூடாதென்றுதான் இவன்களுக்குப் போட்டோம். But they were hundred times better. அடுத்த முறை அவன்கள்தான். They can solve these problems to at little extent. These buggers are useless''.

',I don't believe. இனிமே leftist, socialist government ஐத்தான் நம்ப வேண்டும். இவனுகளைச் சுட்டுத்தள்ளிவிட்டு, அவன்கள் ஆட்சியைப் பிடிக்க வேண்டும்.

''Then, we will be treated as slaves. அடிமையாக நடத்துவான்கள் எங்களை. அடிமை வாழ்வு யாருக்கு வேண்டும்; அதைவிடச் சாகலாம்.

ராணியின் தலையைத் துடைத்து, மருந்து போட்டுக்கொண்டிருந்த துளசி பல்லை நெருமிக் கொள்கிறாள்.

—ராட்சசன். இவளை எப்படி நடத்துகிறாய் மடையா. ஒரு அடிமையை விடக் கேவலமாக இந்த உயிரை வதைக்கிறாய். படிப்பறிவில்லாத, உலகம் தெரியாத, அப்பாவியான இந்த வேலைக்காரப்பெண் ஏதோ சொல்லிவிட்டாள் என்பதற்காக senior executive ஆன - நீ - எந்தப் பெரிய கம்பால் தலையிலடித்தாய்; சின்ன விரல் போகும் பள்ளம் - இவள் உச்சந் தலையில - இன்னும் ரத்தம் வருவது நிற்கலை. socialism வந்தால் உன்னை அடிமையாக்கிவிடுவார்கள் என்று bristol புகைத்து soda குடித்து உரையாடுகின்றாய். மனிதப் பிறவியா நீ--

இரத்தம் வருவது நிற்கலை. உச்சித் தலைமயிரை வெட்டியே ஆகணும், கொஞ்சம் dettol ஆல் துடைத்துத் தன்னிடமிருந்த tetracycline ஐ அந்த உச்சிப் பள்ளத்தில் கொட்டினாள்.

''Cigarettes வாங்கமுடியாமல்தான் அவர் ஒரே irritated ஆக இருக்கிறார். அந்த நேரததல் இவள் ஏன் வாய்காட்டினாள். அதனால் வந்த வினைதான் இது''. ஒரே குரலில் அனைவருடைய அபிப்பிராயமும் இது. மருந்து போடக் கூட அருகில் வரப் பயம். 'அவர் கண்டால் கரைச்சல்' என்று பதுங்கி வந்து விடுப்புப் பார்த்தார்கள்.

- ஓ - நாள் முழுதும் வேலை செய்கிறாள். வீடு polish பண்ணி - lawn cut பண்ணி - ஒரு மூட்டை உடுப்புத் தோய்த்து - அரிசி இடித்து - சமைத்து - bath rooms, toilet கழுவி - இத்தனையும் செய்யும் ஒருத்திக்கு இல்லாத irritation ஆ, அவருக்கு -

அன்றொரு நாள் மத்தியானம், துளசி சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். திடீரெனக் குசினியிலிருந்து கேட்ட சப்தங்களால் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

For

Tasty Vegetarian food

Why not step into

# MAHAJANA CAFE

10A, BAPTIST CHAPEL ROAD

Colombo-7

(Close to Viharamahadevi park)

Tetephone: 92428

''போடி வெளியே... எதிர்த்தா பேசுகிருய்... அத்தனை திமிரோ! உனக்கு... எளிய சனியன். இன்றைக்கே தொலைந்து போய்விடு''

இந்த ரீதியில் கூச்சல் தொடர்கிறது. சாப்பாட்டை விழுங்கித் தொலைத்து விட்டு -- hall கதிரையொன்றில் ஓடிவந்து அமர்ந்து கொள்கிருள்.

- ஆண்டவரே அவளை அடிகளிலிருந்து காப்பாற்றும் - மனிதர்கள் இப்படிக்கூட நடந்துகொள்வார்கள் என அன்றுதான் அவளுக்குத் தெரியும். பயத்தில் உடல் சில்லிட்டுப்போனது. மதியம் ஒரு மணி இருக்கும் எல்லோரும் படுத்தாயிற்று. தண்ணீரைச் சாக்காகக்கொண்டு குசினிக்குள் சென்றவள், ராணியைப் பின் முற்றத்தில் கண்டாள். சுவருடன் சாய்ந்த நிலையில் மௌனமாகக் கண்ணீர் வடித்தபடி...

''ராணி... சாப்பிட்டாயா...''

''இல்லை...''

- வீட்டினுள் வந்தால் காலை முறித்துவிடுவேன். எங்கேயாவது போய்த் துலை -

அவர் வார்த்தைகளைத் துளசி நினைத்துக்கொண்டாள். ரயில் பிடித்து இன்னுமொரு நகரத்திற்குப் போகவும் தெரியுமோ... இந்தப் பேதைக்கு. அந்தத் துணிச்சல்தானே அவ்வார்த்தைகளின் வடிவம்.

துளசி திரும்ப வந்து hall இல் அமர்ந்துகொள்கிருள். மணி நான்காகிறது. மகளைக் கூப்பிடுகிருர் -

''தேத்தண்ணி வைக்கச் சொல்லு.''

''ராணி...! tea க்குத் தண்ணி வை.''

- தொடர்ந்து குசினியில் மெல்லிய ஓசைகள்... ராணி வேலைகளைத் தொடங்கிவிட்டாள் - நல்ல தந்திரம். ஒரு மணிச் சாப்பாடு முடிந்தால் நாலு மணி tea வரை - ராணி அவசியமில்லை. அவர்களுக்கு - அந்த நேரத்தில் தேசப் பிரஷ்டம் - பசியுடன் - வலியுடன் - அழுதபடி. அவள் வெளியில் நிற்பதால் - யார் நித்திரைக்குப் பங்கம். இந்தச் சம்பவம் துளசியைக் கொஞ்சம் பாதித்துத்தான் விட்டது.

- இங்கு மனிதர் சாப்பிட்ட கோப்பை கழுவுவதில்லை. மேசையிலேயே ஒரு கிண்ணத்தில் கை கழுவி.. அது நாகரிகமாம் - சாப்பிட்ட கோப்பையை இன்னொருத்தர் கழுவுவது அநாகரிகம் இல்லையா -

வார்த்தைக்கு வார்த்தை யாரைப் பார்த்தாலும் நுனி நாக்கில் கொஞ்சும் ஆங்கிலத்தில் that bugger... this bugger... எனச் சரளமான வார்த்தைப் பிரயோகங்கள்... இதுவும் நாகரிகமோ...

ராணிக்குக் கிடைக்கும் உபசரிப்புகளில் மாற்றம் எதுவுமின்றி நாட்கள் கழிந்தன.

ஒரு நாள் ராணியின் தந்தை வந்திருந்தார் - மகளைப் பார்க்க - உண்மையான காரணம் வேறு - ஏதோ அலுவல் - ராணி சும்மாதானிருந்தாள். ஆனல் அவர் ''போயிட்டு வாறேன்'' என்று புறப்படுகையில் விம்மியழத் தொடங்கி

With the best compliments

of

# GRIP METAL PRODUCTS

171/2, Abdul Jabbar Mawatha

Colombo-12

Telephone: 34407

விட்டாள் - அங்குதான் தொடங்கியது பிரச்சனை - தகப்பனுக்கோ இது வேண்டாத சுமை - மேலதிகமாக ஒருத்திக்குத்தான் சாப்பாடு என்றாலும்... பகீரதப் பிரயத்தனமல்லவோ - அவர் - தட்டிக்கழிக்க - இவள் மேலும் அழ - அந்தச் சந்தர்ப்பத்தில் - இவர்கள் ராணியின் கையை இறுகப் பிடித்து, 'போ உள்ளே...' என்று வெருட்டினார்கள்.

''நீங்க அடிச்சாலும் சரி... நான் போகத்தான் போறேன்...'' தகப்பனுக்கு என்ன தோன்றியதோ 'புறப்படு' என்றார்.

- ஆண்டவரே ஒரு சகாப்தம் ஒய்ந்தது - பிறகு இவள் ஒருத்தி செய்த வேலைகளை இவர்களெல்லாம் தங்களுக்குள் பங்குபோட்டுச் செய்தபோதும்கூட, ஒவ்வொருத்தருக்கும் மூச்சிரைத்தது.

- இந்தத் தோட்டக்காரச் சனியன்களுக்கு இப்ப கொஞ்சம் வசதி கிடைக்குதோ இல்லையோ, திமிர் பிடித்துவிட்டது. ஒரு பெட்டை பிடிப்பதென்றால் எவ்வளவு கஷ்டம்.

- என்ன மாதிரி மாய்மாலம் பண்ணினாள், அங்க கிடந்து காயட்டும் - குமரி - இந்தச் சாப்பாடு (காய்ந்த, பழைய மிச்சம் மீதிகள்) இனி எங்க கிடைக்கும் அதுக்கு -

- சனியன் துலைந்தது நல்லதிற்குத்தான் - என்ன மாதிரி அவளைப் பார்த்தம் (இரவு ஏற்பட்ட - ஏற்படுத்திய - தலைக் காயத்திற்குக் காலையில் dispensary க்கு அனுப்பி doctor's fee கொடுத்து மருந்து போட்டது.)

விமர்சனங்கள் - அவளின் எதிர்பாராத பயணத்தைப் பற்றி இதற்கெல்லாம் துளசி மௌனமான சாட்சி.

'வேலைக்காரர்களை, வீடுவீடாகச் சென்று பொலிசார் பதிவுசெய்வர்.' 3-11-79 'வீரகேசரி'யில் செய்தித் தலைப்பு.

- அட, எங்கள் நாட்டிலா? பரவாயில்லையே. வேலைக்காரர்கள் எனும் ஜன்மங்களைக் கவனிக்கவும் கருணை பிறந்துள்ளதோ -

- வீடு உடைத்துத் திருடுதல், களவு, கொள்ளை ஆகியவற்றில் இவர்களுக்கும் தொடர்பிருக்கலாமெனப் பொலிசார் கருதுகின்றனர்...

- வேலைக்காரர்கள், பொலிஸ் வேலைக்காரர் பதிவாளரிடம் பதிவுசெய்யப்பட்டால அவர்களது நடமாட்டங்களைக் கண்காணிக்கவும், அதேசமயம், அவர்களைத் தெரிந்துகொள்ளவும் உதவி அளிக்குமெனவும் பொலிஸ் ஆணையாளர் திரு. பிராங் சில்வா கருதுகின்றார்.

செய்தி தொடர்கிறது இப்படி.

- ஓகோ அடிவாங்கி - தப்பியோடி, அவர்கள் பொலிசில் புகலடைகையில் - அதைக் கவனிக்க ஆளில்லை. அப்போதும் பட்டியல் தயாரித்து, வேலைக்காரர்களை அடிப்பவர்களைப் பிடித்திருக்கலாந்தானே, செய்யமாட்டார்கள். ஒரு சதத்திற்குப் பெறுமதியற்ற சனம் - சாப்பிட வழியில்லாத சனம், கடை ரகம். இவர்கள் பொருட்டு எங்கள் உயர்ரகப் பிரஜைகளை - மனிதரை உயிருடன் உறிஞ்சக்கூடிய வலிமை வாய்ந்தவர்களை எதிர்க்கலாமா - அந்தக் கனவான்களை நீதிமன்ற வாசற்படி மிதிக்க வைக்கலாமா - நகரில் இருக்கவும், வாழவும் தகுதியும் - மரபும் - உள்ள மக்களைக் காப்பதல்லவோ நகர்க் காவலரின் கடமை - இதை மீறினால்... ஓ... சமுதாய அழுக்குகள் அழிந்துவிடுமே.

- இ. சாந்தினி

*With The Best Compliments*

*of*

# Grant, Kenyon & Eckhardt (Lanka) Ltd.,

49/17, Iceland Bldgs

Colombo-3

Sri Lanka

P. O. Box 1119

Telegrms:- 'kenyoneck'
Colombo

Telephone: 28641, 26043, 36550

# ஆத்மாவின் சன்னதங்கள்

வாடிக்கிடப்போரே! வாருங்கள் எம் கவிதை
நாடி, நரம்புகளில் நல்லரத்தம் பாய்ச்சிவிடும்
அஞ்சிக் கிடக்கும் அடிமைச் சிறுமதியை
நெஞ்சு நிமிர்த்தி நெடுந்தொலைவு செல்லவைக்கும்
வாழ்க்கைப் பயணத்தின் வழிகாட்டிகள் நாங்கள்!
ஏழ்மை இருட்திரையை எரிக்க வந்த மின்மினிகள்!
இருள் சூழ்ந்த வானத்தின் இடிமுழக்க மின்னல்கள்!
வைகறையின் ஒளிக்கீற்று, வசந்தத்தின் உயிர்த்துடிப்பு!
பொய்மைக் கருவறுத்துப் போலிகளை வேரறுக்க
ஆர்ப்பரித்துப் பொங்குகிற ஆத்மாவின் சன்னதங்கள்!
ஊர்விழிக்க ஒலிக்கின்ற உதயத்தின் மணியொலிகள்
எங்கும் மனிதகுல எழுச்சிகளை நாடி நிதம்
பொங்கும் புதுப்புனல்கள்! புதுயுகப் பூபாளங்கள்!
நாங்கள் யார்? கவிஞர்கள்! நாங்கள் யார்? கலைஞர்கள்!!
கவிதைகளே எங்கள் கனல் கக்கும் ஆயுதங்கள்
கலைவடிவம் எங்களது கனவுகளின் பிரதிமைகள்
உலகெங்கும் எங்களது உணர்வுகளின் தாக்கங்கள்
புலர்விக்கும் புது உலகை மலர்விக்கும் புதுயுகத்தை
இறுகிய சிந்தனைகளையும் குறுகிய வட்டங்களையும்
உதறி எறிந்து உன்னதமாய் மனித குல
விதிகளையே மாற்றிவிட விரைகின்றோம்! சத்தியத்தின்
தரிசனங்கள் கண்டதனால் தடம்பார்த்து நடக்கின்றோம்
எரிதழலாய எழுகின்றோம் எங்கெல்லாம் மனிதகுலம்
அறியாமை இருட்சிறையில் அழிகிறதோ அங்கெல்லாம்
ஒளியாக எம் கவிதை ஓடிவரும், ஆத்மாவை
ஒளியாக்கும் வரையெமக்கு ஓய்வில்லை, ஓய்வில்லை!

– ப. ஆனந்த்பிரசாத்

*Soon at Majestic*

The biggest grossing motion picture of all time

WINNER OF 7 ACADEMY AWARDS

# STAR WARS

in 70 m m & Stereophonic Sound

from 20th Century Box

# நோக்குகள்

கேள்விகள் - பதில்கள் தாராளமாகப் பல சஞ்சிகைகளிடையே காரசாரமாகப் போடப்படும் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு வருகிறது. கேள்விகள் கேட்கப்படுவதும், அதை ஒரு சிந்தனையாளரிடம் விட்டுவிடுவதும் தான் மரபு. இங்கு கேட்கப்படும் கேள்விகள் பல கோணங்களிலிருந்து, புதிய பரிணாமங்களின் வெளிப்பாடுகளை வெளிக்கொணரும் நோக்கத்தோடு அணுகப்பட்டவை என்று நாம் உணருகிறோம். எமக்கு எக்காலத்திலும் தேவையானது உண்மையை அணுகும் ஒரு சார்பற்ற - விஞ்ஞான பூர்வமான விளக்கமே. இது, சமுதாய சடத்துவ மதிப்பீடுகளை, புரட்சிகர மாற்றத்திற்கான தன்மைக்கு இட்டுச் செல்வதாயின் அது நமக்குக் கிடைத்த பெரு வெற்றி.

பதில்கள் எக் கோணத்திலிருந்து பார்க்கப்பட்டவை என்பது எமது பிரச்சினை அல்ல. தனி மனிதரை துண்டு துண்டாகக் கூறு போட்டு அவர்களின் ஆளுமையை போட்டு உடைத்தோ - அல்லது அவர்களின் தனித்துவத்தைச் சந்தேகித்துச் சந்திக்கிழுக்கும் நோக்கமோ எமக்கில்லை.

சரித்திரங்கள் மாறலாம். கருத்துக்கள் மாறலாம். ஏன்? விஞ்ஞான உண்மைகள் கூட மாறலாம் - மாறுகிறது. அதுதான் வளர்ச்சி. தனி மனித - சமூக உறவுக்கான சடத்துவ மதிப்பீடுகளை உயர்வானதாக்கும், விரிந்த வலுவான சிந்தனையை உருவாக்கும் விஞ்ஞான பூர்வமான அணுகு முறையே இலக்கிய சிருஷ்டி கர்த்தாக்களின் இதயமாக வேண்டும்.

சில சிந்தனையாளர்கள் இக் கேள்விகளைப் புறக்கணித்தும், 'இதிலிருந்து நாம் முரண்பட்டுள்ளோம் ஆகையால் பதிலளிக்க முடியாது' என்றும் கூறி ஒரு வகையில் தப்பித்துக் கொள்ள முயன்றுள்ளார்களென்று நினைக்கிறோம். எமது பரந்த நோக்கைப் புரிந்து கொண்டு, எம்மைக் கௌரவித்து - மனித உணர்வுகளை மதித்து - தம்மால் இயன்றவரை அழகாகவும், மிகச் சிறப்பாகவும் பதில்கள் தந்த 'இவர்களை' நாம் என்றும் மதிக்கிறோம்.

எதற்குமே முடிவான - தீர்க்கமான முடிவை எதிர்பார்க்கும் 'குறுகிய - கற்பனை வாத சிந்தனைகளிலிருந்து' நாம் வேறுபட்டு நிற்கிறோம் என்று வாசகர்கள் உணர்ந்தாலே போதும்!

— மலர்க் குழு —

# கலை மனோரசனைக்கு மட்டுமாக இருக்கலாகாதா?

Art - can't it be for the sole purpose of being appreciated and enjoyed by the mind?

கலையினது பிறப்பிடமும், வாழ்வும், வளர்ச்சியும் கூட சமூகத்திலேயே ஏற்பட முடியும். றொபின்சன் குருசோ போன்ற தனியொரு மனிதனைக் கொண்ட சமூகத்தில் கலைக்கு இடமில்லை. எனவேதான் கலை தனிப்பட்ட மனிதனின் மனோரசனைக்கு மட்டும் இருக்க முடியாது. மாறாக அது சமூகத்தினது மாற்றத்திற்கும், மலர்ச்சிக்கும், உயர்விற்கும் வழிவகுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். கலை எவ்வளவு காலம் வாழ்ந்துள்ளது என்பதனை விட சமுதாயத்தில் எதனைச் சாதித்துள்ளது என்பதற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

R. ஜெயரெட்ணராஜா

சமுதாய உணர்வு குன்றியவர்கள், சமுதாய மாற்றத்தை விரும்பாதவர்கள் தம் வர்க்க நலனைக் காப்பாற்ற கலை மனோரசனைக்கு மட்டுமே என்றே கூறுவர். கலை அகநிலை சார்ந்தது; வளர்ந்துவரும் மனித சமுதாயத்தின் அனுபவத் தொகுப்பை முன்வைத்து அகநிலையை மேலும் வளர்ப்பதன் மூலம் மனித சமுதாயத்தின் புறநிலை வாழ்வையும் மேம்பட்டது செய்யும் உந்து சக்தியாக கலைகள் வளர்க்கப்பட வேண்டும்.

செ. கணேசலிங்கம்

கலை என்றால் என்ன என்பதற்கு என் கருத்தை விபரிக்க வேண்டும். கலை என்பது மனதின் அழகியல் ரீதியான வெளிப்பாடு! கோடுகளாக-சித்திரமென்றும், ஒலியலைகளாக - இசையென்றும், அசைவுகளாக - நாடகமாகவும் பல்வேறு கோலங்களில் கலை வெளிப்படுகிறது.

சுதந்திரமான மனதின் வெளிப்பாடுகள் ஆக்கபூர்வமான படைப்புகளை கலையுலகில் உருவாகின்றன. இந்நிலையில் கலை ஒரு பிரச்சாரக் கருவியாக பயன்படுத்தப்படும். இக்காலகட்டத்தில் கலைஞனின் நிலையை எவரும் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. 'பிரச்சாரம்' என்ற தேவை ஒரு தாக்கமாக கலைஞன் மீது தொழிற்படும் வேளையில் அவன் தன் சுதந்திர தன்மையை இழந்து விடுகிறான். அந்நிலையில் உருவாகும் படைப்பு அவனது திணிக்கப்பட்ட தேவைக்காக சமுதாயத்தினது தேவைக்காக வலிந்துருவாக்கப்பட்ட (forced) வெறும் கலை வடிவமாக அமைகிறது. Creativity is lost!

கலைஞன் சுதந்திரமானவன்! அவன் சிந்தனை சுதந்திரமானது. பாந்து விரிந்த சிந்தனை வெள்ளத்தை சமுதாயத் தேவையென்ற குறுகிய வாய்க்காலில் திசை திருப்புவது விரும்பத்தக்கதல்ல! வாய்க்காலில் புகும் அத்தருணமே வெள்ளம் தன் புனிதத் தன்மையை இழந்துவிடும்! கலைகள் சுதந்திரமானவைகளாக இருக்கட்டும்! அவற்றைப் புரிய சமுதாயம் தன்னைப் புரிந்து கொள்ளட்டும்.

ஆ. ஜெகசோதி

தாராளமாக இருக்கலாம். அப்படித்தான் இருந்தும் வருகிறது. ஆனால் மனோ ரசனை எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும்? மனங்களின் பண்பாட்டு வளர்ச்சிக்கேற்ப ரசனைத் தன்மை மாறுபடுகிறது. நவீன வாழ்க்கையின் நெருக்குவாரம் காரணமாக மன எரிச்சல், மன விரக்தி மிகுந்த இக்காலத்தில் எல்லோருக்குமே இவற்றிலிருந்து தற்காலிக விடுதலையாவது கொடுப்பது புண்ணியமாகும். வாழ்க்கை சிக்கல்களை சிறிது நேரம் மறப்பதற்கு பலர் கலையை நாடுகிறார்கள். வேறுபலர் இச்சிக்கல்களை விளக்கவும் அவற்றை முடிந்தால் தீர்க்கவும் கலை ஒரு சாதனமாக அமைய வேண்டும் என வாதிடுகிறார்கள். சமூக மாற்றங்களின் முன்னோடியாக கலை அமைய வேண்டும் என்று கூறுகின்றனர்.

உன்னதமான கலை, இச் செயற்கைப் பாகுபாடுகளை கடந்து மனதில் ஒரு புதிய பரிணாமத்தை தொடுவானம் போல் கோடி காட்டுகிறது. மனத்தின் பாலைவனப் பிரதேசங்களிலும் பசுமையான நம்பிக்கையை வேர்விடச் செய்கின்றது. இருண்ட மூலைகள் சுடர்கின்றன. இப்படியான நேரடி அனுபவத்தின் பின்னர் அக்கலைப் படைப்பின் நோக்கம் பற்றிய சந்தேகங்கள் இருக்காது; என்பதுடன் கலை கலைக்காகவோ அல்லது வேறு எதற்காகவாயினும் இருந்து விட்டுப் போகட்டும் என்ற உணர்ச்சிதான் மேலோங்கும்.

''உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்று பதவி கொள்வர்''

பி. குமாரபாரதி

A work of art can only be appreciated by both 'body of soul' if its viewers can identify with the exprience it represents, can relate to the impressions and feelings it creates. Therefore, a true work of art does not only reproduce reality-it enables us to perceive of that reality in its totality; as long as art continues to serve the interests of capitalism, as it must in a capitalist society,

the view of the world that is presented to us by these works of art is warped and distorted in keeping with the capitalist world-view. This is why we maintain that only art which represents the needs, interests and aspirations of the working people can be called true 'art'.

**Lionel Bopege**

ஏன் ரசனை என்று சொல்லாமல் 'மனோரசனை' என்று சொல்கிறீர்கள்? பொதுவாய் மனம் என்கிறபோது உலகத்திலே இல்லாத, யதார்த்தமாகாதவற்றின் இடம் என்றும் ஒரு கருத்து வருகிறது. 'ஒருவனது மனத்துக்குத் தோன்றியது', 'அவனது மனோ இயல்பு' என்பன போன்ற சொற்றொடர்களிலே உலகப் பொது இயல்போடு பொருந்துவதாகக் கோரிக்கை விடாத, ஒரு விசித்திரம் அல்லது தனிப்போக்கு என்று அனுமதிக்கிற தொனி வருகிறது. உங்களுடைய கேள்வியிலிருக்கிற 'மனோ' என்பதற்கு இப்படிப் பொருள் கொண்டால் கலை இப்படி இருக்க முடியாது என்றுதான் சொல்லவேண்டும். தனித்துவமான விசித்திர சுகத்திற்கென்று கலை இருக்க முடியாது. கலை என்பது வேறு சில நடவடிக்கைகளைப் போலப் பூரணமாய் விதிகளால் இறுக்கப்பட்டதல்ல என்பது உண்மை எனினும் இங்கும் விதிகள் உள. நெகிழும் விதிகள் எனினும் விதிகளே. பலராலும் பகிரப்படுகிற, புரிந்து கொள்ளப்படுகிற, விமர்சனத்துக்குள்ளாக்கப் படுகிற, ஒருவர் விட்டதை மற்றவர் தொட்டு விருத்தி செய்யக்கூடிய - இப்படிப்பட்ட ஒரு மனித நடவடிக்கைதான் இதுவும். இத்தகைய ஒரு கருத்துப் பின்னணியிலேதான் 'ரசனை' என்கிற கருத்துக்கும் இடம் இருக்கிறது. தனி மனிதன் ஒருவனுக்கு ஏற்படுகிற சுகானுபவத்தை [இந்த அனுபவம் என்கிற சொல்லிலும் விசித்திரமானது என்கிற தொனி வரும்] மனோ ரசனை என்று கொண்டால் அது ரசனையும் அல்ல.

ஒரு காரியத்தை நன்கு செய்கிறபோது அது கலையாகிறது என்று கொள்ளலாம். காரியத்தின் பயன்பாட்டினால் வருகிற திருப்திக்கும் மேலாக அது செய்யப்பட்ட விதத்திலிருக்கும் நேர்த்தியும் எங்களை லயிக்க வைக்கிறது. இப்படி அது ரசனைக்குரியதாகிறது. காரியம் ரசனைக்கென்று செய்த ஒன்றல்ல - ஆனால் செய்த காரியத்தில் ஒரு உபரியான முயற்சியும் அந்த முயற்சியில் இருந்து வருகிற உபரியான லயிப்பும் இப்படி, ஒரு நடவடிக்கையிலே இன்னொரு பரிமாணம் ஏற்பட்டுப் போகிறது. காரியத்தின் நோக்கம் எதுவோ அதனை வலியுறுத்துவதே இந்த உபரியின் நோக்கம் என்றும் அவ்வாறு வலியுறுத்தாத போது இந்த உபரி ஒரு சீர்கேடு என்றும் கொள்பவர் உளர். ஆனால் இந்தப் பயன்பாட்டு வாதம் மனித வாழ்க்கையை மிதமிஞ்சி எளிமைப்படுத்திப் புரிந்து கொள்வதாகவும் தோன்றலாம்.

கட்டிடக் கலை போன்ற வினைக் கலைகளைப் பற்றி எழாத கேள்வி நுண்கலைகள் என்பவற்றைப் பற்றி எழுகிறது. இவை எதற்காக இருக்கின்றன, என்ன தேவையைத் திருப்தி செய்கின்றன என்ற கேள்வி அடிக்கடி எழுகிறது. இவற்றின் தேவை நிறுவப்பட்டிருந்தால் அந்தத் தேவையின் பெயரால் அவை வழங்கியிருக்கும் என எண்ணத் தோன்றுகிறது. நீண்ட மனித வரலாற்றிலே சில காலங்களில் சில இடங்களில், உபரியைத் தனி நடவடிக்கையாய் விருத்தி செய்து விதியமைத்து விமர்சிக்கிற அவகாசமும்

வசதியும் சில கூட்டத்தினர்க்கு இருந்திருக்கிறது. எனவே இவை, வேறு வேளைகளிலும் வேறு இடங்களிலும் வேண்டா வழக்களாய்த் தோன்றுவதில் வியப்பில்லை.

மனித நடவடிக்கை ஒன்றைப் பற்றி இப்படி இருக்கலாகாதா என்று கேட்கும் போது அதற்கு அதிகார பூர்வமாக விடை சொல்லும் அறிவு எங்கிருந்து வரலாம்? மனித வாழ்க்கை முழுவதற்கும் சில சில நோக்கங்களே இருக்க வேண்டும் என்று விதித்து வைத்திருந்தால் அங்கிருந்து, ஒவ்வொரு நடவடிக்கைக்கும் இருக்க வேண்டிய நோக்கத்தை உய்த்துணரலாம். மனித வாழ்க்கையைப் பற்றிச் சட்டமியற்ற முடியா தெனின் கலை இப்படி இருக்க வேண்டும் என்றும் சட்டமியற்ற முடியாது. அனைத்தை யும் எப்படிப் புனரமைப்புச் செய்தல் வேண்டும் என்று எல்லாவற்றிற்கும் நீலப்பதிவு கள் வைத்துக் கொண்டிருக்கும் சித்தாந்திகளுக்கு தேவைகள், நோக்கங்கள் பற்றிய கேள்விகள் இயல்பாய்த் தோன்றுவது தற்செயலல்ல.

சில வகைகளில் அமைந்தாலன்றி ஒரு கருத்து சாத்தியமில்லாத குழப்பமாகி விடும். இந்த அடிப்படையில் விமர்சித்தல் இயல்வதே. முக்கோணம் எனின் நான்கு பக்கங்கள் இருக்கலாகாது என்று சொல்ல இயல்வது போல, கலை மனோரசனைக்காக (நான் கொண்ட பொருளில்) மட்டும் இருக்க முடியாது என நான் சொன்னது இந்த நியாயத்தைக் கொண்டே மனித வாழ்வு எப்படி அமைய வேண்டும் என்பது பற்றிய எனது இலட்சியத்தைக் கொண்டு அல்ல.

செ. பெ. காசிநாதன்

தியாகமும், ஞானமும் படைத்த நமது சுதந்திரப் போராட்ட வீரர்களும், சோசலிசச் சித்தாந்தங்களும் ஒன்றுபட்டு ஒரு புதிய உலகத்தை வார்க்க வேண்டிய தருணம் இன்னும் இங்கு வாய்க்க வில்லையா? — என்றெல்லாம் ஏங்கித் தவிப்பதே ஓர் இலக்கிய இதயம்.

— த. ஜெயகாந்தன்

## ‘சுய திருப்தி’க்கும், ‘ஆத்ம திருப்தி’க்கும் இடையே வேறுபாடு உண்டா?

Is there a difference between ‘self-satisfaction’ and ‘spiritual satisfaction’?

சுயதிருப்தியும் ஆத்ம திருப்தியும் ஒன்ருக இருப்பதும், வேறுபடுவதும் ஒவ்வொரு மனிதனினதும் வாழ்க்கை முறையையும் இலட்சியத்தையும் பொறுத்ததாகும். எப்படியும் வாழ்ந்தால் போதும் என்ற மனிதனைப் பொறுத்த மட்டில் அவன் மனித வாழ்க்கையில் பெறும் சுய திருப்தியே ஆத்ம திருப்தியாக இருக்கும். இப்படித்தான் வாழவேண்டும் என்ற மனிதனைப் பொறுத்த மட்டில் சாதாரண வாழ்க்கையில் பெறும் திருப்தியெல்லாம் சுய திருப்தியாகவே இருக்கும். ஆனல் அவனது இலட்சியம் வெற்றியடைகின்ற பொழுது அல்லது அதனை சமூகம் மதிக்கின்ற அல்லது பின்பற்றுகின்ற போது ஏற்படும் திருப்தி ஆத்ம திருப்தியாகவே இருக்கும்.

R. ஜெயரெட்ணராஜா

‘ஆத்மா’ என்பது ‘சுயத்தின்’ முனைவாக்கப்பட்ட பிரதிபலிப்பு. எனவே சுய திருப்தி = ஆத்ம திருப்தி! no fooling!

ஆ. ஜெகசோதி

இதைச் சற்று வேறுவிதமாக அணுக முடியுமா? கருணை உந்து சக்தியாக, அடிநாதமாக நின்று செயல்பட்டால் சமகாலச் சமன்பாடுகள் போல் ஆத்ம திருப்தியும், சுய திருப்தியும் ஒருசேர நிறைவேறும். சமூகம் இச் செயல்களால் [செழிப்புறும் ஆனல் அடிமனத்தின் குருட்டு மூலைகளின் பாய்ச்சல் (unconsious urges) உந்து சக்தியாக அமையும் செயல்கள் யாவும் இறுதியில் எல்லோருக்கும் கஷ்டங்களை ஏற்படுத்தும். தாம் எடுத்துக் கொண்ட எந்தவொரு சித்தாந்தத்தையும் உந்தலுக்கு வாகனமாக்கி சமூகத்தில் சவாரி விடுவதிலேயே மனம் லயிக்கும்.

சி. குமாரபாரதி

This all depends on your definition of the word 'satisfaction'. True satisfaction can only be achieved when both the body and the mind are in perfect harmony, combining to give one the feeling of being gratified and fulfilled Such a harmonious existance can only be assured to us by a socialist social order in which the exploitation of man by man has been abolished forever.

**Lionel Bopege**

ஆத்மா உள்ளவர்களுக்கு வேறுபாடு இல்லை. குறுங்கால நோக்கில் வேறுபாடு இருப்பது போலத்தோன்றினுலும் இறுதியாய் இல்லை.

தவம் செய்வார் தம்கருமம் செய்வார் மற்றல்லார்
அவம் செய்வார் ஆசையுட்பட்டு.

என்று குறள் சொல்கிறது. ஒருவன் தனது ஆசைப்படி செய்வது தனது சுயநலத்திற்காகச் செய்வது என்று பொதுவாய் நினைக்கிறோம். அப்படியல்ல என்கிறார் வள்ளுவர். ஆசைகள் அவனுடையவை யல்லவாம். ஆத்மா இருந்தால் துன்பம் தான் அறு ஒழிக எனப் பிரார்த்திக்கலாம்.

செ. பெ. காசிநாதன்

அகத்தேயுள்ள ஆன்மாவில் தான் நாம் உண்மையான செல்வத்தையும், சக்தியையும் நாடவேண்டும். இந்த அகநிறைவும் பண்பும் தான், ஆபத்தும், நட்டமும் நேரிடும் நேரத்தில் அமைதியையும், தெளிவையும் அளிக்கும். லாபத்தை எதிர்பார்க்காமலும், நஷ்டத்தைக் கணக்கிடாமலும், தன்னையே தியாகம் செய்யத் தூண்டும். மரணத்தைத் துச்சமெனக் கருதும் துணிவைத் தரும்; சமூகப் நறவிகள் என்ற அடிப்படையில் மனிதருக்கு நாம் செய்ய வேண்டிய எண்ணற்ற பல கடமைகளை ஏற்றுக்கொள்ளும் பொறுப்புணர்வைத் தரும்.

— தாகூர்

# 'கற்பு' என்பது பெண்ணடிமைத்தனத்தின் பிரதிபலிப்பென்று கருத முடியுமா?

Is 'kattpu' an expression of the slave mentality of women?

கற்பினைப் பெண்ணடிமைத் தனத்தின் பிரதிபலிப்பு என்பதனை விட பெண்ணின் சமூகப் புனிதத் தன்மையின் பிரதிபலிப்பென்று கூறுவதே பொருத்தமானதாகும். சில ஆய்வாளர்கள் பெண்ணினை அடிமைப்படுத்திய மானிய கால சமுதாயத்தில் கற்பு என்ற தத்துவம் தோன்றியமையினால் அதனை அடிமைத்தனத்தின் பிரதிபலிப்பென்று வாதிடுகின்றனர். ஆனால் மானிய கால சமுதாயத்தின் நிலச்சுவான் வர்க்கம் போன்ற உயர் வகுப்பு ஆண்களைத் தவிர ஏனைய வகுப்பு ஆண்கள் கூட அடிமைப்பட்டிருந்தனர் என்பதனை மறுப்பதற்கில்லை.

பண்டைத் தமிழர்கள் கற்பு என்ற மூடுதிரை மூலம் பெண்ணடிமை முறையினை ஏற்படுத்த முனைந்திருந்தால் பெண்ணினை கல்விக்கும், செல்வத்திற்கும், வீரத்திற்கும் கடவுளாகச் சிருஷ்டித்து அன்னை பராசக்தியாக வழிபட்டிருக்க மாட்டார்கள். மேலும் தமிழர்களின் கற்பு என்ற தத்துவம் அவர்களின் ஏனைய மரபுகள் சம்பிரதாயங்களை விடக் கூடிய நெகிழ்ச்சித் தன்மை கொண்டதாகவுள்ளது. ஏனென்றால் பிற ஆடவனைக் கண்ணால் கண்டாலே கற்பிற்குப் பங்கம் என்ற பண்டைய தத்துவம் பிற ஆடவருடன் கைகுலுக்குவதன் மூலம் கூட மாசுபடமாட்டாது என்ற அளவிற்கு மாற்றமடைந்துள்ளது.

R. ஜெயரெட்ணராஜா

கற்பு என்பது பெண்ணடிமைத்தனத்தின் பிரதிபலிப்பே. ஆண் வழிச் சமுதாயத்தில் தனிச் சொத்துடமை தோன்றியபின் கற்பு (பெண்களுக்காக மட்டும் என்றே) வலியுறுத்தப்பட்டது. ஆண்வழிச் சொத்து, தன் தனிச் சொத்தான மனைவிக்கு தன் மூலம் பிறக்கும் பிள்ளைகளுக்கு மட்டுமே சேரவேண்டும் என்ற சுயநலம் கொண்ட ஆண் தலையெடுத்த சமுதாய நீதியே, 'கற்பு' என்பதாகும்.

செ. கணேசலிங்கம்

கற்பு என்பது கருத்துபூர்வமானது (Subjective) காலத்திற்குக் காலம் அதனது கருத்துக்கள் வேறுபட்டிருக்கின்றன என்பது மனித வரலாற்றினை நோக்கும் வேளையில் தெளிவாகிறது. தாய்வழிச் சமுதாயமாகிய ஆரம்ப நிலையில் 'கற்பு' என்ற ஒன்றினை மக்கள் உணர்ந்திருக்கவில்லை. (ஒரு பெண் பல ஆடவர்கள் மூலம் பிள்ளைகள் பெறுவது வரவேற்கப்பட்டது.) பெண் சமுதாயத்தின் முக்கிய அம்சமாய் - அன்றைய நிலையின் முக்கிய தேவையான அதிக அங்கத்தவர்கள் உருவாக்கும் ஒரு கருவியாக விளங்கினாள். அவளது முக்கியத்துவத்தின் காரணமாக அத்தகைய சமுதாயம் தாய் வழிச் சமுதாயமாக கருதப்பட்டது. ஆண் இரண்டாவது நிலையினை வகித்தான்.

இன்றைய தந்தை வழிச் சமுதாயத்தில் பெண் இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளாள். சிக்கலான வாழ்க்கை முறை! குழப்பமில்லா உறவுமுறை நீடிக்கவேண்டும் - நீடித்த உறவு பரம்பரையாக தொடர பெண்ணின் 'உறவு' தன்மை திட்டவட்டமாக குறித்த வரையறைக்குள் தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற 'ஆண்' நோக்கிலே உருவாகியதே 'கற்பு' எனும் நெறி! (கேள்வி ஆணுக்கு கற்பு உண்டா இல்லையா என்பதைப் பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.)

எனவே பெண்ணடிமைத் தனத்தின் நாகரீகமான வெளிப்பாடே கற்பு எனும் கருத்து!

ஆ. ஜெகசோதி

''கற்பு'', ''பெண்ணடிமை'' ஆகிய இரு கலைகளைக் குறிக்கும் சொற்களும் இரு வேறு பாரம்பரியத்தில் முகிழ்த்து, ஒன்றில் மற்றொன்று தாக்கம் ஏற்படுத்திக் கூர்தலடைந்தவை.

தமிழ்ச் சமுதாயத்திற்கு கற்புடன் உள்ள உறவு விசித்திரமான ஒரு pre-occupation அல்லது fixation எனலாம். கிட்டத்தட்ட இப் pre-occupation ஒரு வியாதி போன்றது (கற்பு அல்ல). நிலப் பிரபுத்துவ சமுதாய அமைப்பில் கற்பு நிலை என்ற concept வள்ளுவர், கம்பன், இளங்கோ போன்ற கவிகளின் கண்ணகி, சீதை போன்ற இலட்சிய பிம்பங்களினால் செழித்து. அக்கவித்துவத்தால் ஊட்டம் பெற்று ஆழமாக வேரூன்றியுள்ளது. கற்பும், அது தொடர்பான பிம்பங்களும் திடீரெனப் புறக்கணிக்கப்பட்டால் சராசரித் தமிழ்ப் பெண்ணின் ஆளுமை சிதைவுறச் சாத்தியம் உண்டு. மேல் நாட்டுக் கலை, கல்வி கேள்விகளின் கலவியினால் ''கற்பு'' மீளாய்வு செய்யப்பட்டு ''பெண்ணடிமை'' என்ற concept உருவாகியது. கற்பு இரு பாலாருக்கும் ஒரு பொதுவான ஒழுக்க நெறி என்று பாரதியால் பகுத்தறிவுத் தளத்தில் நிறுத்தப்பட்டது. இப்பரிணாமத்தில் புதிய சிக்கல்கள் சுதந்திரத்துக்குப் பின் ஏற்படலாயிற்று. சாதி, சமய, வர்க்க அடிப்படையிலுள்ள சமுதாயத்தைக் காபாந்து பண்ணப் படித்த பெண்களே ஆண்களை விடத் தீவிரமாகினர். தங்கள் உரிமைகள், சுதந்திரம் என்று பேசினாலும், திருமணம் என்னும் போது, சாதி சமய எல்லைகளை ஒரு குறிப்பிட்ட தூரம் கடக்க முயனாலும், படித்த பெண்கள் வர்க்க எல்லையைக் கண்டு தயங்குகிறார்கள். படித்த வாலிபர்கள் படிக்காத பெண்களை மணந்தாலும் எல்லாப் பெண்களுமே எல்லா மட்டங்களிலும் உத்தியோக மாப்பிள்ளைமாரை மணம் செய்ய

முற்படவும், மிகவும் உக்கிரமான போட்டியுள்ள திருமணச் சந்தை உருவாக்கப்பட்டது. ஒரு பெண் எஞ்ஜினியர் ஒரு டாக்சி டிரைவரை மணக்கும் அளவுக்குத் தைரியம் பெறவில்லை. ஏதோ ஒரு விதத்தில் புகலிடமளித்த பழைய பிம்பம் சிதைந்த நிலையில் வியாபார ரீதியான மண ஏற்பாடு பல படித்த பெண்களைப் பாதிக்கவே, அதனால் ஏற்பட்ட மனச்சுமையை ''பெண்ணடிமைத்தனம்'' என்ற எதிர்ப்புணர்ச்சியினும் சமாளிக்க முயல்வது தெரிகிறது.

எனவே பெண்ணடிமைத்தனம் இருக்கிறதென நீங்கள் உணர்ந்தால் ''கற்பு'' அதன் முக்கிய பிரதிபலிப்பு என்று கூறலாம். அடிமைத்தனம் இருக்கிறது என்று தெளிவாக உணர்ந்த பிறகு, மந்தமாக அந்நிலையை ஏற்றுக் கொள்ளுவதனால் ''கற்பு'' எனும் concept இன் பாதிப்பு இன்னமும் இருக்கிறது எனக் கொள்ளலாம். இந்த நிலையில் கற்பு ஒரு விலங்காக மாற்றம் பெறுகிறது. இந்நிலைகளினால் பெண்கள் மட்டும் தான் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூற முடியாது. பாலியல் உறவு தொடர்பாகத் தன்னம்பிக்கை குறைவு, குழப்பம் ஆண்களிலும் ஸ்திரமற்ற நிலையை உருவாக்கியுள்ளது.

சி. குமாரபாரதி

The concept of a 'one man - one women' relationship, of a 'once-in-a-lifetime' love affair, are creations of bourgeois ideology which dominates in a capitalist society. In studying the history of mankind; one sees that in different historical epochs, different social formations - such as group marriages; polygamy and polyandry-have prevailed. It is only with the development of class society and the growth of private property that the need of the property-owning class to legtimise inheritance was articulated in the practice of monogamy. Thus the so called 'slave mentality' of women is only a reflection of the ideology perpetuated by the capitalist class to suit their own ends.

**Lionel Bopege**

பெண்கள் அடிமைகளாக இருந்த ஒரு காலத்தின், சமுதாயத்தின் எச்சசொச்சமாய் இது வந்திருக்கிறதா என்று கேட்கிறீர்களா? எனக்குத் தெரியாது. ஆராய்ந்து தகவல்களைச் சேகரிக்க வேண்டும். வரலாற்றுத் தகவல்களைச் சேகரித்தாலும் இப்போது இருக்கும் நிலையை விளக்குவதற்கு எவ்வகையில் அவை உதவும் என்பது தெளிவில்லை.

அல்லது கற்பு என்கிற கருத்துக்குப் பெண்கள் இப்போது கொடுக்கிற மதிப்பு அவர்களிடத்திலே குடிகொண்டிருக்கும் அடிமைத்தனத்தினால் ஏற்படுவது என்று சொல்லலாம் என்கிறீர்களா? பொதுவில், ஆண்களும் கற்புடையவர்களாயிருக்க வேண்டும் என்று பெண்கள் விரும்புகிறார்கள். இதை எதன் பிரதிபலிப்பு என்பது?

இப்படி இரு பாலாருக்கும் ஒரு விருப்பம் இருக்கிறது. இது எப்படி வந்தது, ஏன் வந்தது என்று தெரியவில்லை. மனிதக் குழந்தைகள் வளர்வதற்கு அதிக காலம் எடுக்கிறது

என்பதற்கும் இதற்கும் தொடர்பு இருக்கலாம். இது மிகவும் சிக்கலான விடயம். சில சமுதாயங்களிலே இப்படி ஒரு கோரிக்கை இல்லை என்கிறார்கள். அது எப்படியிருப்பினும் அதை வைத்துக் கொண்டு, இருக்கிற இடத்திலே இது பிழை என்று சொல்லலாமா?

ஒரு இலட்சியம், ஒரு விருப்பம் இருப்பது என்பது ஒன்று. அதை நிர்ப்பந்தித்து நிறைவேற்றக் கூடிய நிலைகள் இருக்கின்றன என்பது இன்னொன்று. தங்களது எதிர் பார்ப்புக்களை ஆண்களால் வலியுறுத்த முடிகிற அளவிற்கு எப்போதும் பெண்களால் முடியவில்லை என்றால் அதற்கு நீங்கள் சொல்வது போன்ற காரணங்கள் இருக்கலாம்.

இந்தக் கேள்விக்கு விடை தெரிந்து என்ன செய்யப்போகிறோம்? வரலாறு போலத் தரப்படுகிற விடைகள் ஒவ்வொரு காலமும் தனக்கென்று ஏற்படுத்திக் கொள்கிற புரா ணங்கள் எனத் தோன்றுகிறது. எமக்குப் பிடிக்கும் புராணங்களை ஏற்றுக் கொள்கிறோம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரோ அதற்கும் முன்போ ஏதோ நடந்தது என்று தெரிந்து கொண்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அது எப்படி நடந்தது என்பதை வைத்து எங்களது நடவடிக்கைகளை அங்கீகாரம் செய்வதில் எங்களுக்கு உண்மையில் இவ்வளவு அக்கறையிருக்கிறதா? வேறு மாதிரி நடந்ததென்றால் அதற்காக எங்களது போக்குக்களை விட்டுவிடுவோமா?

செ. பா. காசிநாதன்

ஆணை மையமாக வைச்சு இயங்குகிற சமூகத்திலே பெண் பாது காப்பைத் தேடுறதிலே ஆச்சரியமில்லை. நமது நாட்டுப் பெண்களுக்குக் கணவன் என்கிற ஸ்தானம் தான் முக்கியம். கணவன் கூட இல்லை. கண வன் உயிரோடு இருந்தால் போதும். அவனைக் கூடையிலே இன்னொரு பெண்ணோட வீட்டிலே கொண்டு விடறது தான் கற்புன்னு நினைக்கிற நாட்டிலேவேற எதை எதிர்பார்க்க முடியும்.

—இந்திரா பார்த்தசாரதி

## சாதிப்பாகுபாடு முற்றாக ஒழிவதற்கு பொருளாதார ரத் தீர்வோடு தனி மனித ஆத்ம உயர்வும் முக்கியம் என்பதை ஏற்க முடியுமா?

Will an economic solution eradicate completely the caste discrimination in a society or is the spiritual upliftment of the individual an essential requisite?

சாதிப் பாகுபாடு என்பது மானிய பொருளாதார அமைப்பினால் ஏற்படுத்தப் பட்ட ஒரு தொழிற் பிரிவு முறையாகும். இத்தொழிற் பிரிவின் மூலம் ஒவ்வொரு தொழிலைச் செய்தவர்களும் தமது உழைப்பிற்கு ஏற்ப உற்பத்தியில் நியாயமான பங்கினைப் பெற்றிருப்பார்களேயானால் பல்வேறு சாதிப் பிரிவினரிடையேயும் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டிருக்க முடியாது. எனவே பல்வேறு சாதிப் பிரிவினரிடையேயும் ஏற்றத் தாழ்வினை ஏற்படுத்திய முக்கிய காரணி தொழிற் பிரிவன்று. மாறாக உழைப்பிற்கேற்ப உற்பத்தியில் பங்கு வழங்கப்படாமையாகும். எனவே அடிப்படையான பொருளாதாரத் தீர்வு ஏற்படுகின்ற போது தனி மனிதனது ஆத்ம உயர்வும் இயல்பாக ஏற்படும். அடிப்படையான மாற்றம் என்கின்ற போது உயர் சாதியினர் குறைந்த சாதியினரின் தொழில்களைச் செய்வதாகப் பத்திரிகையில் படம் பிடித்துப் போடுவதன்று. மாறாக உயர் வகுப்பினரது தொழில்களைத் தாழ்ந்த சாதியினர் செய்வதற்கிருக்கும் தடைகளையும் நீக்க வேண்டும். உதாரணமாக பிரபல்யமான கோவில்களில் குறைந்த சாதியினரை மத குருக்களாகவும் நியமிக்க வேண்டும்.

R. ஜெயரெட்ணராஜா

சாதிப் பாகுபாடு நிலப் பிரபுத்துவ சமுதாய அமைப்பின் மிச்சசொச்சமாகும். அச்சமுதாய அமைப்பு முற்றாக உடைக்கப்படும் போது சாதிப் பாகுபாடு என்ற மேல் மட்ட அமைப்பும் (super structure) உடையவே செய்யும். முதலாளித்துவ சமுதாயத்திலும் சாதியினால் ஒதுக்கப்பட்டவர் பெரும்பாலும் பாட்டாளிகளாகவே இருப்பர். சோஷலிச சமுதாய வளர்ச்சியின் போதுதான் பாட்டாளியின் சர்வாதிகாரம் தலையெடுத்து சாதியமைப்பை முற்றாக ஒழித்துவிடும்.

செ. கணேசலிங்கம்

அகக் காரணிகளுக்கும் புறக் காரணிகளுக்கும் ஏற்படும் சமநிலைத் தாக்கத்தில் தான் மனிதனின் உயர்வு தங்கியுள்ளது. பொருளாதாரத் தாக்கங்கள் தனி மனிதனின் அகத்தினைப் பாதிக்கின்றன. இந்த உண்மையினை மறுப்பதற்கில்லை. மனிதனின் (உள்) அகக் காரணிகளானது சமுதாய நோக்கினை கட்டுப்படுத்துகின்றன. எனவே சமுதாயப் போக்கினை நிர்மாணிப்பதில் தனி மனிதனின் அகமும் பங்கெடுக்கின்றது.

வெறுமனே பொருளாதாரத் தீர்வுடன் திருப்தி காணக்கூடியவை - இயந்திரங்கள்! மனிதனல்ல!

அ. ஜெகசோதி

ஆத்ம உயர்வு பெற்ற சில ஆத்மாக்கள் காலங்காலமாக மனித சமத்துவத்தை பல விதங்களில் வலியுறுத்தி வந்திருக்கின்றனர். என்றாலும் அவர்கள் போதனைகளில் நிலப் பிரபுத்துவ சமூக அமைப்பை ஆதரிக்கக் கூடிய அல்லது எதிர்க்காத வசதியான போதனைகளை மட்டும் சமய நிறுவனங்கள் அங்கீகரித்ததுடன் நிலப் பிரபுத்துவ அமைப்பை எதிர்க்கக் கூடிய கருத்துகளை முற்றாக, திறமையாக ஒதுக்கிவிட்டன. சமய நிறுவனங்களே சாதிப் பாகுபாட்டை சமூகத்தில் நிலை நிறுத்தும் அமைப்பாகி விட்டது.

பறைச்சியாவ தேதடா பணத்தியாவ தேதடா!
இறைச்சிதோ லெலும்பிலும் இலக்கமிட் டிருக்குதோ?
பறைச்சி போகம் வேறதோ! பணத்தின் போகம் வேறதோ?
பறைச்சியும் பணத்தியும் பகுந்துபாரு மும்முளே.

— சித்தர் சிவவாக்கியர் —

பறைச்சிக்கும் பணக்காரிக்கும் பேதம் காண முடியாத உன்னத நிலையில் மனத்திற்கு தெளிவு ஏற்படும்படி சிவவாக்கியர் சொல்லி ஆயிரம் வருடங்கள் இருக்குமா? சொன்னவரை சித்த புருஷர் என்று தெய்வமாகப் போற்றினாலும் அவரது சமூக நீதி புறக்கணிக்கப்பட்டது. தாழ்த்தப் பட்டவர்களின் பொருளாதார நிலை உயர்ந்தால் கல்வி, பண்பாட்டு மட்டம் என்பவை தாமாகவே உயரும். அப்படியான நிலைமையில் ஒருவித சமத்துவத்தை முணுமுணுத்துக் கொண்டாவது ஏற்கப் பழகி விடுவோம். இருந்தாலும் கேள்வியில் கண்டது போல் மனிதர்களுக்கிடையிலுள்ள மனத்திரை - last reservation - மனத்தின் ஆழமான விளக்கத்திற்குப்பிறகே விலகும். சாதி அமைப்பு முறை ஒழிவதற்கு முன் ஆத்ம உயர்வு எட்டும் அதுவரை அமைப்பு தரும் பெருமை, வசதிகளை ஏற்றுக் கொண்டு. இடைக்கிடை ''ஆத்மா உயர்க'' என்ற கோஷம் போடுவது பிரச்சனைக்கு வன்முறைத் தீர்வு காண ஒடுக்கப்படுபவர்களை நிர்ப்பந்திக்கும் ஆத்மா இல்லை என்று சபிப்பார்கள்.

சி. குமாரபாரதி

If one accepts that capitalist society uses caste, religion and racial differences to its own ends, and that economic pressures contribute most to the creation and perpetuation of such differences, then one must also accept that solving the economics problems of a society will create an atmosphere in which secondary problems such as caste could be solved. This is not to say that the solution of an economic problem can eradicate caste problems overnight. Yet, the correct solution to the caste problem is the creation of an equitable economic base in society. Everything else will follow from this basic fact.

**Lionel Bopege**

## ஒரு சமுதாயம் நாட வேண்டியது ஒரு இலட்சியமா? அல்லது கருத்துச் சுதந்திரமா?

Is it one ideology or is it freedom of thought that a society has to pursue?

சமுதாயம் என்பது இலட்சியத்தின் அடிப்படையில் ஒன்று சேர்க்கப்பட்ட மக்கள் கூட்டத்தினைக் குறிப்பதாகும். நடைமுறையில் கருத்துச் சுதந்திரமற்ற சமுதாயங்களைக் காண முடியும். ஆனால் இலட்சியமற்ற சமுதாயத்தினை ஒரு போதுமே காண முடியாது. ஆனால் சமுதாயத்தின் இலட்சியமானது உயரியதாகவும், சமூகத்தின் பெரும்பான்மையோர் நலனை அடிப்படையாகக் கொண்டதாகவும் மாற்றமடைவதற்கு அல்லது வளர்ச்சியடைவதற்குக் கருத்துச் சுதந்திரம் அவசியமானதாகும்.

R. ஜெயரெட்ணராஜா

சமுதாயத்தின் லட்சியமாக மட்டுமல்ல லட்சணமாகக்கூட அமைய வேண்டியது— கருத்துச் சுதந்திரம்! கருத்துச் சுதந்திரமென்றால் என்ன? நேற்றுச் சரியென்று என்றால் ஏற்கப்பட்டதை இன்று பிழையென்று எதிர்க்க எனக்கு உரிமை இருக்க வேண்டும்— நேற்று பிழையென்று என்றால் மறுக்கப்பட்டதை இன்று சரியென்று ஏற்க எனக்கு உரிமை இருக்க வேண்டும். இந்த அடிப்படை உரிமையே கருத்துச் சுதந்திரம். consistancy is the virtue of ass!

இலட்சியம் அறிவில் இருந்து உருவாகிறது. அறிவு நிலையானதல்ல. அது இயக்கபூர்வமானது. dynamic not static! அறிவு மாறலாம்! அதுவே அறிவின் வளர்ச்சி! ஒரு காலகட்டத்தில் நியூட்டனின் விதிகள் சரியென அறிவுலகம் ஏற்றுக் கொண்டது— அதே அறிவுலகம் ஐன்ஸ்டீனைச் சரியென்றும் நியூட்டனைத் தவறென்றும் நிராகரிக்கிறது - நாளை ஐன்ஸ்டீன் கூட நிராகரிக்கப் படலாம். அறிவு இயங்குகிறது - நிலையானதல்ல - நிலையற்ற அறிவினால் ஏற்பட்ட 'முடிவினை' வெறியாக அதையே முடிந்த முடிவாக ஏற்கும் தன்மை இலட்சியம் - இலட்சியவாதிகள் ஒரு வகையில் Horses with Blinkers! உண்மை அவர்களுக்குப் பக்கத்தில் இருக்கலாம்! ஆனால் அவர்கள் காணப்போவதில்லை. கருத்துச் சுதந்திரம் இத்தகைய இலட்சியங்களைக் கொள்ளக் கூடியளவு பரந்து விரிந்தது! எனவே தேவை பகுதியல்ல - முழுமை!

ஆ. ஜெகசோதி

சமுதாயம் ஒரு பக்கம் இருக்கட்டும். தனிமனிதன் எதை நாட வேண்டும்? தனி மனித நாட்டங்களுக்கும், சமூக நாட்டங்களுக்கும் கட்டாயமாக முரண்பாடுகள் ஏற்பட வேண்டுமா?

நாட வேண்டிய ஒரு மதிப்பீடு இருக்குமாயின் (அது கருத்துச் சுதந்திரமாயிருந்தாலும் கூட) அதுவே ஒரு இலட்சியமல்லவா? கருத்துச் சுதந்திரத்தை மூர்க்கமாக நாடிய மேலை நாட்டு இளைஞர் குழுக்கள் என்ன பெறுபேறுகளைப் பெற்றன? கருத்துச் சுதந்திரம் பெட்டி பொருந்தாமல் ஓடும் ரயில் என்ஜின் போன்றது. படுவேகமாக ஓடும். ஆனல் டிரைவர் மட்டுமே விசிலடித்துக் கொண்டு பயணம் செய்யலாம்.

சில படைப்பாற்றல் மிக்கவர்கள், ஒரு கட்டத்தில் கருத்துச் சுதந்திரத்தை வேண்டி நிற்கும் எல்லையை அடைந்தால், தனக்கு என்ன நேரினும் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறார்கள். கலிலியோவை ஒரு உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்.

சொல்லுவதற்கு அதிகம் ஏதுமில்லாமல் கருத்துச் சுதந்திரம் வேண்டும் என்பது மாட்டுக்கு முன்னல் வண்டியைக் கட்டுவது போலாகும். இப்படியான பலர் கருத்துச் சுதந்திரம், செயல் சுதந்திரம் என்று பேசிக்கொண்டே கஞ்சா அடிக்கிறார்கள்.

சி. குமாரபாரதி

A Society needs to defend, and pursue the ideals of freedom, especially freedom of thought. if it is to progress. It is only thus that the people of that society could evolve a correct and scientific ideology.

**Lionel Bopege**

இந்தக் கேள்வி சிறிது குழப்பத்தை ஏற்படுத்துகிறது. ஒரு இலட்சியத்தை வரித்துக் கொண்டு அதனை நோக்கி முன்னேறுபவர்கள் அந்த இலட்சியத்தை விமர்சனத்துக்குள்ளாக்கும் சுதந்திரத்தை அனுமதித்தல் வேண்டுமா? அல்லது தமது செவ்விய இலட்சியத்திற்கு விமர்சனங்கள் தடையாய் வருமாதலால் அவற்றை அனுமதியாது விடுவது சரியா? இப்படி நீங்கள் கேட்பதாகக் கொள்கிறேன்.

விமர்சிக்கும் சுதந்திரம் எப்போதும் இருக்க வேண்டும் என்றும் விமர்சனங்களை அனுமதியாது விடுவது சரியல்ல என்றும் நான் நினைக்கிறேன். அவ்வாறு அனுமதியாது கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவது, முரணுரையாய்க் கூறுவதானல், ஒரு கருத்துக்கு மட்டும் பயங்கரமான சுதந்திரத்தைத் தருவதாகாதா?

இலட்சியத்தை விமர்சிக்க அனுமதிக்க வேண்டியதில்லை எனும் கோரிக்கை, முடிந்த முடிபுகள் உள்ளன எனும் சித்தாந்த வாதத்திலிருந்து வருவதாகும். உண்மையை நாம்

(அல்லது நமது குரு) கண்டாயிற்று. இனி அந்த முயற்சி வேண்டியதில்லை எனவும், நாம் கண்ட இவ்வுண்மையை ஏற்காதவர் எமக்கு எதிரிகள் எனவும் கொள்வது சித்தாந்த வாதம். தங்களுடைய இலட்சியத்திற்குத் தடையில்லாத சுதந்திரம் வேண்டுவோர் அதனால் வரவிருப்பதாகத் தாம் நம்பும் இன்பத்தை இவ்வையகம் பெற வேண்டும் எனும் நல்ல நோக்கிலேயே அவ்வாறு கோருகிறார்கள் என்பதை ஒப்புக் கொள்ளலாம். ஆனால் இந்த அந்தரங்க சுத்தம் போதாது. சித்தாந்தத்தை ஏற்பதற்கு திரிகாலத்தையும் உணரும் காட்சி வேண்டும். அப்படி ஒரு காட்சி இருப்பதாக நான் நினைக்கவில்லை. நவீன சித்தாந்திகள், முன்பு போல, திரிகாலக் காட்சி இருப்பதாகப் பச்சையாய்க் கோருவதில்லை; திரிகாலத்தையும் இயக்கும் சூட்சும சூத்திரத்தை இன்றைய நிலையிலேயே கண்டு கொண்டதாகவும் அதைக் கண்டுகொண்டதால் அதிலிருந்து திரிகாலத்தையும் தாம் அனுமானிக்கக் கூடியதாயிருப்பதாயும் கூறுவார்கள். இப்படி ஒரு சூத்திரம் இருக்கிறது என்றும் நான் நினைக்கவில்லை.

சித்தாந்த வாதத்திற்கெதிராக கார்ள் பொப்பர் என்பவர் முன்வைத்த விஞ்ஞான உளப்பாங்கு என்பதை நான் ஏற்கிறேன். நாம் ஏற்றிருக்கும் கொள்கை தவறாயிருக்கலாம் எனும் ஐயத்திற்கு இடமளித்தல்; அதைத் தவறெனக் காட்ட முயலும் வாதங்களைத் தேடி எதிர்கொள்ளல் - இவையிரண்டும் விஞ்ஞான உளப்பாங்கிற்கு, சிந்தனைக்கு அவசியமான இயல்புகள். தன்னை நிறுவவே வல்ல வாதங்களையும் ஆதரிக்கவே வல்ல ஆட்களையும் தேடியணைக்கும் சித்தாந்தப் போக்கிற்கு இது முரணானது.

கருமம் ஆற்ற வேண்டும் செயல்வீரனை விமர்சனங்கள் தடைப்படுத்தாவோ என்று கேட்கலாம். விமர்சனத்துக்கு முகங்கொடுப்பதை வீண் தாமதம் எனக் கொள்ளக்கூடிய கருமங்கள் பொது வாழ்க்கையில் இல்லை.

இலட்சியத்தை நாடித் தீவிரமாய்ச் செயற்படுவோரைக் கருத்துச் சுதந்திரம் தடைப்படுத்தும் என்கையில் மிகவும் துன்பப்படுபவர்களுக்கு உதவப்போகிற கர்மவீரர்களை வீண் கதையால் தடுத்து வைத்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு சித்திரம் எம் முன்னே எழுப்பப்படுகிறது. கருத்துச் சுதந்திரம் வேண்டும் என்போருக்கும் அதனை அனுமதியாதோருக்கும் இடையே இருக்கும் முரண்பாட்டை இப்படிக் கற்பனை செய்வது மிகவும் எளிமையான சிந்தனையின் விளைவாகும்.

செ. வெ. காசிநாதன்

**பொருளாதார சக்திகள் வரலாற்று இயக்கத்தைத் 'தீர்மானிக்கின்றன' என்று மார்க்சியவாதிகள் கூறுகின்றனர். 'எதிர்காலத்தை உருவாக்குவதில் மனித ஆத்மா தான் மிக முக்கிய உந்து சக்தி' என்பதைப் பற்றிய உங்கள் கருத்தென்ன?**

Marxists say that economic forces determine the movement of history What is your opinion about the view that the spirit of man is the main forward force that makes the future?

காதலிலும் போரிலும் பொருளியற் சார்பு இருப்பது போன்று, கருவிலிருந்து கல்லறை ஈறாக மனித நடவடிக்கைகள் பொருளாதாரக் காரணிகளாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன. மேலும் ஆத்மா கூட பொருளாதாரக் காரணிகளால் பாதிக்கப்படக் கூடியதாகும். ஒருவேளை தனி ஒரு மனிதனது செயற்பாட்டினை நிர்ணயிப்பதில் ஆத்மாவின் பங்கு முக்கியமானதாக இருக்கலாம். ஆனால் வரலாற்று இயக்கத்தினை நிர்ணயிப்பதில் அதற்கு எவ்வித உந்து சக்தியும் இல்லை.

R. ஜெயரெட்ணராஜா

'வாழ் நிலையே சிந்தனையைத் தீர்மானிக்கிறது' என்பதே மார்க்சிய கோட்பாடாகும். 'எதிர் காலத்தை உருவாக்குவதில் மனித ஆத்மாதான் முக்கிய உந்து சக்தி என்று கூறுவது கற்பனு வாதமாகும். சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சி–உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி சமுதாயத்தின் புறநிலை, அகநிலையைப் பாதிக்கிறது. அகநிலையின் வளர்ச்சி புறநிலையை மாற்றும் உந்து சக்தியாக வளர்ச்சியடைவதும் தவிர்க்க முடியாதது. அதுவே காலப் போக்கில் புரட்சி வடிவமெடுக்கிறது. புரட்சி உற்பத்தி உறவுகளை மாற்றமடையச் செய்கிறது. இதுவே இயக்கவியல் பொருள் முதல் வாதமாகும். (சிந்தனையே வாழ் நிலையைத் தீர்மானிக்கிறது என்று கூறுவதை கற்பனு வாதம் என்கிறோம்)

செ. கணேசலிங்கம்

நடைமுறைச் சமுதாயத்தினது புரையோடிப்போன தன்மையின் அடிப்படையிலே யதார்த்தமாக எழுந்ததுவே மார்க்சிய சிந்தனை! இன்றைய சமுதாயத்தின் மந்தைப் போக்கு மார்க்சியத்திற்கே வழி வகுக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. மார்க்சியம் நல்லதா கூடாதா என்பது வேறு பிரச்சனை!

என்று தனி மனிதன் தன் பாரம்பரியங்களில் இருந்து - மதம், மார்க்கம் போன்ற விலங்குகளில் இருந்து தன்னை விடுத்து தானே உலகமாய், உலகமே தானாக உணரும் உன்னத நிலையை அடைகிறானோ அன்று இந்த நடைமுறைச் சமுதாயம் மார்க்சிய வாதிகள் காணாத, அவர்களால் புரிய முடியாத புதிய வடிவத்தினை அடையும் - அந்நிலையில் மட்டும் UTOPIA தோன்றுவாம். இது சாத்தியமா??? ஒவ்வொரு தனி மனிதனும் இதற்கு விடைகாண வேண்டும்.

ஆ. ஜெகசோதி

பொருளாதார சக்திகளின் பிடியிலிருக்கும் ஒரு சாமானியன் இதற்கு என்ன பதில் கூறினாலும் அதற்கு ஒரு மதிப்பு - Validity - இருக்குமா? மனிதன் தான் பொருளாதார சக்திகளை உருவாக்குகிறான் என்பது எவ்வளவு உண்மையோ, பிறகு அச்சக்திகளின் பிடி அவனை உருவாக்கிறது என்ற கூற்றும் உண்மையாகும். புலிவாலைப் பிடித்த கதை மாதிரி; வாசகர் ஒருவராவது பொருளாதாரச் சக்திகளின் ஆளுமையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டால் அவருடன் சேர்ந்து மார்க்சியக் கண்ணோட்டத்தை எதிர்க்காத எனக்கு தென்பு வரலாம். இயக்கங்களின் தோற்றுவாய், திசை, அசைவு போன்றவற்றை பொருளாதார நோக்கில் பார்ப்பது மார்க்சிய டிசிபிளின். ஆத்மாவைப் பற்றி அதிகம் கதைக்கிறோம். ஆனால் அதை நம்புகிறோமா? அப்படியானால் பிள்ளைகளை வேலைக்காரர்களாக வைத்து அடித்து வேலை வாங்கிக் கொண்டு ஒழுங்காக கீதைப் பேருரையைக் கேட்போமா? புலியின் வாலைப் பிடித்தவன் அதன் சக்தியையாவது புரிந்து கொள்ள வேண்டும். புலி கொடூரமானது என்பது வேறு விஷயம்...

சி. குமாரபாரதி

Economic forces can only be directed by the men who harness their strength to various ends. Therfore, it is humanity, human society, that moves forward; the path along which we travel is determined by economic factors-such as the ownership of the means of production - which are controlled under different social groups. This is why as Marxists we say that the economic factor is the ultimate determinant.

**Lionel Bopege**

## 'தனி நாடு கோரும் உரிமை' என்பது 'சுய நிர்ணய உரிமையின் ஒரு பகுதியாகுமா?

Is the right to demand a separate territory a part of the right to self-determination?

தனிநாடு கோரும் உரிமை என்பது திட்டவட்டமான வரையறுக்கப்பட்ட பிரதேசத்தில் பொருளாதார சமூகமாக வாழும் மக்கட் பிரிவினர் பூரண இறைமை படைத்த ஒரு அரசாங்கத்தினை தமக்கு அளிக்குமாறு தமது பிரதேசத்தினையும், பொருளாதார நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும் அதிகார வர்க்கத்தினரிடம் கேட்கும் நிலையினைக் குறித்து நிற்கிறது. சுய நிர்ணய உரிமை எனும் போது வரையறுக்கப்பட்ட பிரதேசமும், தனிப்பட்ட பொருளாதார சமூகமும் அற்று ஒரு நாட்டிற்குள் ஒரு பகுதியில் செறிவாக வாழுகின்ற மக்கள் தமது பாரம்பரிய கலாச்சாரத்தினை அல்லது தனித்துவங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான ஒரு நிர்வாக முறையினை உருவாக்கித் தருமாறு அரசாங்கத்திடம் கேட்கின்ற நிலையினைக் குறிப்பதாகும். எனவே சுய நிர்ணய உரிமையினைத் தனிநாடு கோரும் உரிமையின் ஒரு பகுதியாகக் கருத முடியாது.

R. ஜெயரெட்ணராஜா

'சுய நிர்ணய உரிமை' என்பது உழைப்புச் சுரண்டலிலிருந்து மக்கள் விடுதலை பெறும் போது கிடைக்கும் தேசிய இனங்களின் உரிமையாகும். 'தனி நாடு கோருவது) என்பது ஒரு தேசிய இன பூர்ஷ்வாக்களின் சந்தையை மற்றோர் தேசிய இன பூர்ஷ்வாக்கள் பிரித்தெடுக்க முயலும் குரலாகும். (இலங்கையில் தமிழரின் 'தனி நாடு' கோரிக்கை' தமிழ் பூர்ஷ்வாக்களது ஆதரவில்லாது பாதிக்கப்பட்ட குட்டி பூர்ஷ்வாக்களது குரலாக எழுவது விசித்திரமானது மட்டுமல்ல பலவீனமானதும் கூட.)

செ. கணேசலிங்கம்

சுய நிர்ணய உரிமை என்பது ஒரு நாட்டிற்கு பிரிவதற்கோ அல்லது பிரிந்து அல்லது பிரிந்து செல்லாமல் இருப்பதற்கோ உள்ள உரிமையைச் சுட்டுகிறது. தனி நாடு கோரும் உரிமை முற்றிலும் பிரிந்து செல்லுதலையே முதற்கண் வலியுறுத்துகிறது. மேலெழுந்தவாரியில் இரண்டும் ஒன்றுபினும் ஆழ்ந்து நோக்கின் இரண்டும் வேறுபடுகின்றன.

ஆ. ஜெகசோதி

The right to self-determination quite definitely includes the right to separation. How ever, upholding the right to self-determination of an oppressed nationality need not necessarily mean upholding separation as an inevitable part of this right, The concrete historical situation prevailing at the time must determine that fact.

**Lionel Bopege**

## ஒரு அரசியல் தலைவனை எவ்வாறு மதிப்பீடு செய்யலாம்?

How can one assess a political leader?

ஒவ்வொரு அரசியல் தலைவனும் எந்த வர்க்கத்தினைப் பிரதிநிதித்துவம் வகிக்கிறான் என்பதுடன் அவனது அரசியல் நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் அவனது வர்க்க நலனைப் பேணுவதாக அமைந்துள்ளது என்பதனையும் அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யலாம்.

R. ஜெயரெட்ணராஜா

ஆளும் வர்க்கமே தலைவர்களை உருவாக்கி தம் வர்க்க நலனைக் காப்பாற்றுகின்றது. பூர்ஷ்வா ஆளும் வர்க்கம் எப்பொழுதும் பொய், புரட்டு, ஏமாற்று, லஞ்ச ஊழல் கொண்டவர்களையே அரசியல் தலைவர்களாக வைத்திருக்க முயல்கிறது. அந்நிலையில் தான் பூர்ஷ்வா வர்க்கம் பாட்டாளிகளைச் சுரண்டி தம் வர்க்க நலனைப் பேண முடியும். பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தில் அரசியல் தலைவர்கள் பாட்டாளிகளின் விழிப்புணர்வுடன் தாமும் விழிப்பாகச் செயலாற்றி சமுதாய வளர்ச்சியின் சுயநலமற்ற முன்னோடிகளாக விளங்குவர். அரசியல் தலைவனை அவன் வாய்ப்பேச்சாலல்ல, எந்த வர்க்கத்தின் நலன் பற்றிச் செயலாற்றுகிறான் என்பதை வைத்துக் கொண்டே மதிப்பீடு செய்ய வேண்டும்.

செ. கணேசலிங்கம்

கேள்வியில் சற்றுத் தவறு இருப்பதாக உணருகிறேன்! அரசியல் தலைவன் என்பது Political Leader ஐக் குறிப்பதாக கருதுகிறேன். Political leader is a politician-நாட்டிற்குத் தேவை Politicians அல்ல Statesmen. அடுத்த தேர்தலிலும் தன் கட்சி மீண்டும் பதவிக்கு வரவேண்டும் என்ற நோக்கில் செயல்படுபவன் அரசியல்வாதி-Politician அடுத்த தேர்தலின் பலாபலன்களைச் சிந்தியாது நாட்டின் நலனையே தன் நலனாய் கருதுபவன் நாட்டின் தலைவன்-Statesman. எமது நாட்டில் எத்தனை பேர் Statesmen? Statesman, நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்தின் கட்டியக்காரன்! HARBINGER of the prosperity!

ஆ. ஜெகசோதி

One can only assess a political leader by his practise.

**Lionel Bopege**

எனக்கு முக்கியமாகத் தோன்றுகிற ஒன்றைச் சொல்கிறேன். எந்த அளவுக்கு அவன் தனக்கு எதிரான கருத்துக்களை மதித்து அவை சரியானால் ஏற்கத் தயாராயிருக்கிறான் என்பதைக் கொண்டு; தன்னைச் சுற்றி 'ஆமாஞ்சாமி'களை மட்டும் சேர்த்துக் கொள்கிறானா அல்லது தன்னை விமர்சிக்க வல்லவர்களைச் சேர்க்கும் நெஞ்சுரம் உடையவனாயிருக்கிறானா என்பதைக் கொண்டு; தான் அதிகாரத்திலிருக்கும் போது அதிகாரத்தைத்தான் துஷ்பிரயோகம் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டால் தன்னைக் கட்டுப்படுத்த வல்ல அமைப்புக்களை, நிறுவனங்களை ஏற்படுத்துகிறானா, பேணுகிறானா என்பதைக் கொண்டு; தன்னை வழிபடுவதை விரும்பும், ஏற்கும் தலைவனால் ஆபத்து நிச்சயம். தன்மைவரின் அது தற்செயலே.

செ. வெ. காசிநாதன்

● R. ஜெயரெட்ணராஜா
விரிவுரையாளர்
கொழும்புப் பல்கலைக்கழகம்

● செ. கணேசலிங்கம்
எழுத்தாளர்

● ஆ. ஜெகசோதி
ஆசிரியர்
புனித சூசையப்பர் கல்லூரி
திருகோணமலை

● கி. குமாரபாரதி
பிரதம பொறியியலாளர்
C. E. C. B.

● **Lionel Bopege**
Member of the Polit Bureau
Peoples Liberation Front

● செ. வெ. காசிநாதன்
விரிவுரையாளர்
மெய்யியற்றுறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

EXCLUSIVELY FOR CHILDREN
Visit our Kiddies Corner
Where garments of the latest and finest
Fashion are displayed

- Children's Frocks
- Children's Smoked Blouses
- Children's Long Dungaries
- Children's TET/COT Blouses
- Children's Bell Bottoms
- Children's Short Dungaries

And Items offered at
Attractive Prices .

# HIRDRAMANI Limited

Fort - Pettah - "DIPLOMAT CORNER" *(Main Street)*
"TOURIST CENTRE" *(Colpetty)*
Bambalapittiya - Magaragama (Showroom)
Vasumals - Kandy

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்

தமிழ்ச் சங்கத்தினரின்

தமிழ்ப்பணி மேலும்

சிறப்புடன் தொடர

எமது நல்லாசிகள்

## கே. ஜெயபாலசிங்கம் அன் கோ

**கப்பற்துறை ஏஜண்ட்**

**காங்கேசன்துறை-திருகோணமலை**

Roses are Red

Violets are Blue

But Gold is the Gift

She'll wear just for you

# Lalitha

## JEWELLERY MART

(Air Conditioned)

99, 101, 103, 105 Sea Street
Colombo-11

Telephone: 31993, 23576, 23691

# SAMACON Ltd.

(Engineers & Constructors)

*For*

*Your Requirements*

*of*

*Buildings*
*Structural Engineering*
*Irrigation*
*Water Supply*
*Road Works*
*Air Conditioning*
*Erection of Mechanical / Electrical*
*Equipments*

**Telephone: 83774**

43, NELSON PLACE,

COLOMBO-6.